2023 ஏப்ரல் 1 தொடக்கம் ஏப்ரல் 30 வரை
புத்தாண்டு சிறப்பு விற்பனை
20% கழிவு
Cash or Card
அங்கீகரிக்கப்பட்ட ஒகஸ்ரீயோகஸ்தர்கள்
ELITERADIO
Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
Follow us:
மலர் : 03, இதழ்: 211 சுபகிருது வருடம், பங்குனி மாதம் 30ஆம் திகதி வியாழக்கிழமை
(13.04.2023) ஹிஜ்ரி 1445, ரமழான் - 21, 0115 886187 - பக்கங்கள் 10
விலை ரூ.50

இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்டி எலைற்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.
Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust
KDK
SINCE 1909 JAPAN
அங்கீகரிக்கப்பட்ட ஒகஸ்ரீயோகஸ்தர்கள்
ELITERADIO
Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில்: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 5:00pm



சிங்களம் நாட்டின் ஆதி மொழியல்ல!

சி.வி.விக்னேஸ்வரன் எம்.பி. பகிரங்க அறிவிப்பு

02 பக்கம்

சோபகிருது வருடப்பிறப்பு

வாக்கிய பஞ்சாங்கம்

14.04.2023 வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணி 03 நிமிடத்தில் சோபகிருது வருடம் பிறக்கின்றது.

விஷு புண்ணிய காலம்–மருந்துநீர் வைக்கும் நேரம்

14.04.2023 பகல் 10.03 மணிமுதல் மாலை 06.03 மணிவரை

அணியும் ஆடைகள்

வெள்ளை நிறமுடைய அல்லது வெள்ளை கறையமைந்த பட்டாடை

சங்கிரம தோஷ நட்சத்திரங்கள்

ரோகிணி, மிருகசீரிடம் 3, 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3ஆம் பாதம், அத்தம், உத்தராடம் 2, 3, 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1, 2ஆம் பாதம்

கைவிஷேடம் பரிமாறும் நேரம்

15.04.2023 சனிக்கிழமை காலை 07.52 மணிமுதல் காலை 09.00மணிவரை
16.04.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 07.49 மணிமுதல் 09.48 மணிவரை

திருக்கணித பஞ்சாங்கம்

14.04.2023 வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணி 59 நிமிடத்தில் சோபகிருது வருடம் பிறக்கின்றது.

விஷு புண்ணிய காலம்–மருந்துநீர் வைக்கும் நேரம்

14.04.2023 பகல் 10.59 மணிமுதல் மாலை 06.59 மணிவரை

அணியும் ஆடைகள்

வெள்ளை நிறமுடைய அல்லது மஞ்சள் கறையமைந்த வெள்ளை பட்டாடை

சங்கிரம தோஷ நட்சத்திரங்கள்

ரோகிணி, மிருகசீரிடம் 2, 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3ஆம் பாதம், அத்தம், உத்தராடம் 2, 3, 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1, 2ஆம் பாதம்

கைவிஷேடம் பரிமாறும் நேரம்

15.04.2023 சனிக்கிழமை காலை 06.45 மணிமுதல் காலை 7.30மணிவரை
15.04.2023 சனிக்கிழமை காலை 08.00 மணிமுதல் காலை 8.55மணிவரை
16.04.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணிமுதல் 09.30 மணிவரை
16.04.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 12.10மணிமுதல் 01.15 மணிவரை

மத்திய வங்கியில் ரூ.50 இலட்சம் மாயம்

இலங்கை மத்திய வங்கியிலிருந்து 50 இலட்சம் ரூபா பணம் காணாமல் போயுள்ளதாக கோட்டை பொலிஸ் நிலையத்தில் அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் (11) முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. மத்திய வங்கியின் மூன்றாம் தளத்தில் அதியுயர் பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருந்த பணமே காணாமல்போயுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் பாதுகாப்புப் பெட்டகத்திலிருந்து பணம் காணாமல்போனமை தொடர்பில் கோட்டை பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, மத்திய வங்கியும் பிரத்தியேக விசாரணைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

'தமிழன்' வாசகர்கள், விளம்பரதாரர்களுக்கு இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துகள்!

ஐ.எம்.எவ். கடன்திட்டம் பாராளுமன்ற விவாதத்துக்கு

ஏப்ரல் 25 முதல் ஆரம்பமாகுமென சாகல தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதி (IMF/EFF) திட்டத்தை ஜனாதிபதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாகவும், அது ஏப்ரல் 25 முதல் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

அரசியல் கட்சிகள் தமது நாட்டுக்கு ஆதரவளிப்பதா, இல்லையா என்று தீர்மானிப்பதற்கான வாய்ப்பு இதன்மூலம் கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

» 02 பக்கம்

புத்தாண்டை முன்னிட்டு சொந்த இடங்களுக்குச் செல்வதற்காக கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் பெருந்திரளான பயணிகள் திரண்டிருந்தனர். (படப்பிடிப்பு: லலித் பெரேரா)

கமெண்ட் கந்தர்...

போன வருட சித்திரை பிறப்புக்கு சாமான்கள் வாங்கவே கஷ்டப்பட்டாங்கள்... இந்த வருஷம் கஷ்டப்பட்டு சாமான்கள வாங்குறாங்கள்..!

புதிய நோக்குடன் முன்செல்வோம்

ஜனாதிபதி ரணில் வாழ்த்து

இன, மத, கட்சி, நிற பேதங்களை புறந்தள்ளிவிட்டு புதிய நோக்குடன் முன்னோக்கிப் பயணிக்க இந்த சித்திரைப் புத்தாண்டில் சங்கற்பம் கொள்வோமென...

02 பக்கம்

உஷ்

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் பதவியை ஏற்குமாறு பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸுக்கு அக்கட்சியின் பிரமுகர்களிடம் இருந்து அழைப்பு வந்ததாம்.

அந்த பொறுப்பை ஏற்பதா அல்லது அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சுப் பதவி ஒன்றை ஏற்பதா என்பது குறித்து தனக்கு நெருக்கமானவர்களுடன் ஆலோசித்து வருகிறார் பீரிஸ்.

அடுத்த ஜனாதிபதியாக ரணிலை தெரிவுசெய்க!

மக்களிடம் வஜிர எம்.பி. கோரிக்கை

கே. சுபானி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மக்கள் மீண்டுமொருமுறை போட்டியின்றி தெரிவுசெய்யவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

மேலதிக பஸ்கள் சேவையில்

கே. சுபானி

புத்தாண்டை முன்னிட்டு சொந்த ஊர்களுக்கு பயணிப்போரின் தேவை கருதி மேலதிக பஸ்களை சேவையில் ஈடுபடுத்த தீர்மானித்துள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை நேற்று (12) தெரிவித்துள்ளது.

பஸ் சேவைகள் குறித்த ஏற்பாடுகள் ஏப்ரல் 8ஆம் திகதி முதல் அட்டவணை செய்யப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் பிரதி முகாமையாளர் பண்டுக சுவர்ணஹன்ச தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,...

02 பக்கம்

விவசாய சமூகத்தை நினைவுகூருவோம்

வாழ்த்துச் செய்தியில் பிரதமர் தினேஷ்

நாட்டை செழிப்படையச் செய்வதற்காக எமது விவசாய சமூகத்தினர் மேற்கொண்ட சவால்மிக்க பணிகளை இந்தப் புத்தாண்டில் நன்றியுடன் நினைவுகூர வேண்டும் என புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,...

02 பக்கம்

போராட்டத்தை கைவிட பேராசிரியர்கள் முடிவு

கே. சுபானி

வருமான வரி அறவீடு தொடர்பில் அரசு முன்னெடுத்திருந்த வரிக்கொள்கைக்கு எதிராக பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் சங்க சம்மேளனம் முன்னெடுத்திருந்த வேலைநிறுத்தப் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

02 பக்கம்

இருள் சூழ்ந்த பருவம் நீங்கட்டும்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வாழ்த்து

இருள் சூழ்ந்த காலம் முடிந்து, நமது நாட்டின் ஒட்டுமொத்த குடிமக்களும் வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் வளமான மற்றும் ஒளிமயமான எதிர்காலத்துக்காக உறுதியுடன் அணிதிரள்வதற்கான வலிமையைப் பெற பிரார்த்திப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,...

02 பக்கம்

சித்திரைப் புத்தாண்டு விடுமுறை காரணமாக 'தமிழன்' பத்திரிகை 14, 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் வெளிவராது. 17ஆம் திகதி தொடக்கம் தினசரி பத்திரிகையை வாசகர்கள் பெறலாம்.

மூத்த ஊடகவியலாளர் மாணிக்கவாசகம் காலமானார்

சி. திவியா

இலங்கையின் மூத்த ஊடகவியலாளர் பொன்னையா மாணிக்கவாசகம் (வயது 76) சுகயீனம் காரணமாக வவுனியாவில் நேற்று (12) காலமானார்.

இவர் பல தசாப்தங்களாக ஊடகப் பணியாற்றியதுடன் பல்வேறு நூல்களையும் எழுதியுள்ளார். யுத்த காலத்தில் முக்கிய தகவல்களை துணிவுடன் வெளிக்கொண்டு வந்ததுடன், ஊடகத்துறைசார்ந்த பயிற்சிகளையும் வழங்கிவந்தார்.

வவுனியா, வைரவபுளியங்குளம் 10ஆம் ஒழுங்கையில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று காலை 07 மணிக்கு இறுதிக்கிரியைகள் இடம்பெற்று, 09 மணியளவில் தச்சனாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

புத்தாண்டை முன்னிட்டு சொந்த இடங்களுக்குச் செல்வதற்காக கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் பெருந்திரளான பயணிகள் திரண்டிருந்தனர். (படப்பிடிப்பு: லலித் பெரேரா)

ஊடகவியலாளரும் எழுத்தாளருமான வினீ லயனல் கலஹிட்டியாவவினால் எழுதப்பட்ட "சப்ரகமுவ அபிமான" நூல் வெளியீட்டு விழா அண்மையில் அயகம பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. நூலாசிரியர் கடந்த ஜனவரி 22ஆம் திகதி காலமானதையடுத்து அவரின் பிள்ளைகளால் இந்த நூல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

சிங்களம் நாட்டின்...

நமது நிருபர்

மகாவம்சத்தில் 'சிங்களம்' என்ற சொல் எங்கணுமே காணப்படவில்லை. அதாவது சிங்களவர் பற்றியோ சிங்கள மொழி பற்றியோ எங்கும் கூறப்படவில்லை. காரணம், சிங்கள மொழி அப்போது பிறக்கவில்லை. கி.பி. 06ஆம், 07ஆம் நூற்றாண்டுகள் அளவில் அது பிறந்தது. தமிழ் மொழியுடன் சேர்ந்து பாளி பேசப்பட்டதால் பிறந்ததே சிங்கள மொழி. இன்று சென்னையில் ஒரு புதிய மொழி உருவாகிக் கொண்டு வருகின்றது. அதன் பெயர் 'தங்லிஷ்'. அதேபோல் தமிழுடன் பாளி பேசப்பட்டதால் சுமார் 1400 வருடங்களுக்கு முன்னர் உருவாகியதே சிங்களம். சிங்களம் இலங்கையின் ஆதி மொழியல்ல என்று சுட்டிக்காட்டியுள்ளார் தமிழ் மக்கள் கட்சியின் சி.வி.விக்னேஸ்வரன்.

அவர் நேற்று (12) ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள கேள்வி - பதில் அறிக்கையில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கேள்வி - பதில் அறிக்கை வருமாறு,

சிங்கள பௌத்தர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மத ஆக்கிரமிப்புகளில் ஈடுபடுவதைத் தடுத்து நிறுத்தலாமா?

பதில்: கட்டாயமாக முடியும்! இதனை நாங்கள் இந்தியாவின் உதவி கொண்டு நிறைவேற்ற வேண்டும். இன்னமும் இந்தியாவின் ஆளுந்தரப்பாருக்கு இலங்கைத் தமிழர்கள் பற்றியும் சிங்களவர்கள் பற்றியும் தெரியாது. இலங்கைத் தமிழர்கள் 3000 வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து இந் நாட்டில் இருந்து வருவதை அவர்கள் அறியமாட்டார்கள். அவர்களுள் பலர் இங்குள்ள சிங்கள அரசியல்வாதிகள் போன்று 10ஆம் நூற்றாண்டில் இங்கு வந்த சோழர்களின் வாரிசுகளே இலங்கைத் தமிழர்கள் என்று நினைக்கின்றார்கள். அது தவறு.

இலங்கையின் ஆதிக் குடிகள் தமிழரே. அவர்களுள் பெரும்பான்மையோர் நாக வழிபாட்டில் ஈடுபட்டு வந்தமையால் நாகர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். (பேராசிரியர் பத்மநாதனின் நாகர்கள் பற்றிய நூல் பார்க்கவும்). காலத்திற்குக் காலம் பாண்டியர்கள், சேரர்கள், பல்லவர்கள், சோழர்கள் என்று பலர் படையெடுத்து வந்தபோது அவர்களின் மக்களும் இங்கு குடியேறினார்கள். ஆனால் எமது ஆணிவேராக இருப்பவர்கள் ஆதித் தமிழரே. இவர்கள் குமரிக்கண்ட வாசிகளின் வழித்தோன்றல்கள் என்று கொள்ள இடமிருக்கின்றது.

அடுத்து மகாவம்சத்தை முன்வைத்து அதில் கூறிய விஜயனின் வம்சாவழியினரே சிங்கள மக்கள் என்று பலர் நினைக்கின்றார்கள். இதுவும் தவறே. மகாவம்சம் கி.பி.5ஆம் நூற்றாண்டில் ஒரு புத்த பிக்குவால் பாளிமொழியில் எழுதப்பட்டது. அந்த நூல் பௌத்தத்தைப் பெருமைப்படுத்த எழுதப்பட்டது என்று ஒவ்வொரு செய்யுளின் முடிவிலும் நூலாசிரியரால் கூறப்பட்டுள்ளது. மேலும், அதே நூலில் 'சிங்களம்' என்ற சொல் எங்கணுமே காணப்படவில்லை.

சிங்களம் ஒரு அபிவிருத்தியடையாத மொழியாகவே இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்தது. பேராசிரியர் ஜி.பி.மலலசேகர, இலங்கையின் இந்தியத் தூதுவராக 1950களில் டெல்கி போன பின்னர் தான் சிங்கள மொழி வளர்ச்சியடைந்தது. ஹிந்தி – ஆங்கிலம், சமஸ்கிருதம் – ஆங்கிலம் போன்ற மொழிபெயர்ப்பு நூல்களை எடுப்பித்து ஆங்கிலத்துக்கு ஒப்பான சிங்களச் சொல்லை ஹிந்தி மொழியில் இருந்தும், சமஸ்கிருத மொழியில் இருந்தும் சிங்களத்தினுள் உட்புகுத்தினர். ஏற்கனவே பாளிமொழியும் தமிழ் மொழியும் அம்மொழியின் ஆணி வேர்களாக இருந்து வந்துள்ளன.

சிங்கள அரசியல்வாதிகள் மிஞ்சினால் கெஞ்சுவார்கள் கெஞ்சினால் மிஞ்சுவார்கள்.

இவற்றை எல்லாம் இந்தியா புரிந்து கொண்டு வட கிழக்கில் பௌத்த ஆதிக்கத்தை உட்புகுத்துவது ஏன் என்று அரசாங்கத்திடம் கேட்கலாம். தொல்பொருள் காரணங்களுக்காக என்றால் ஏன் பௌத்த சிலைகள் சிங்களப் பௌத்தர்களால் அங்கு வைக்கப்பட வேண்டும், ஏன் இந்துக் கோயில்கள் அழிக்கப்பட வேண்டும், ஏன் இராணுவத்தை இதனோடு சம்பந்தப்படுத்த வேண்டும் என்று கேட்கலாம்.

பௌத்த எச்சங்கள் வடகிழக்கில் இருப்பது உண்மை. ஆனால் அவை தமிழ் பௌத்தர்கள் காலத்தவை. பௌத்தத்தை இலங்கையில் வரவேற்ற அரசர்கள் தமிழ் அரசர்களே. தேவநம்பியதீசன் தமிழனே. எல்லாளன் சைவத் தமிழன். துட்டகைமுனு பௌத்த தமிழர். தெற்கில் இருந்து வடக்கு நோக்கி படையெடுத்து வரும்போது எத்தனை தமிழ் சிற்றரசர்களை வென்று துட்டகைமுனு அநுராதபுரம் வந்தார் என்பது மகாவம்சத்தில் கூறப்படுகிறது. அந்த காலகட்டத்தில் சிங்கள மொழி பிறந்திருக்கவில்லை. மகாவம்சம் கூறும் விஜயனின் சரித்திரம் பற்றி இந்திய நாடுகளின் சரித்திரத்திலோ இலக்கியத்திலோ குறிப்பிடப்படவில்லை. வங்காளத்திலோ ஒரிசாவிலோ விஜயனும் 700 பேரும் நாடு கடத்தப்பட்டார்கள் என்று எங்கணுமே கூறப்படவில்லை. மகாவம்சம் வரலாற்று நூல் அல்ல. பௌத்தத்தை நல்லவாறு விமர்சிக்க புத்த பிக்கு ஒருவரால் எழுதப்பட்டது.

தமிழர் காலத்து எச்சங்கள் பௌத்த எச்சங்கள் என்ற காரணத்தால் எவ்வாறு சிங்களவர்கள் அங்கு சென்று உரிமை கொண்டாடி பௌத்த சிங்களவர்களை அங்கு காட்சிப்படுத்தலாம்?. UNICEF போன்ற நிறுவனங்கள் பக்கச் சார்பின்றி ஆராய வேண்டிய விடயங்களை இலங்கை அரசாங்கம் தனது சிங்களப் பெரும்பான்மையர் அங்கம் வகிக்கும் தொல்பொருள் திணைக்களத்தினூடு ஆராய முயல்வது வெறும் தொல்பொருள் ஞானத்தை வளர்க்க அல்ல. சிங்கள ஆதிக்கத்தை பௌத்த சின்னங்களினூடு பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்களில் விரிவாக்கவே.

இதனை இந்தியா அறிந்து கொண்டு நடவடிக்கைகளில் இறங்க வேண்டும். மேலும் திருக்கேதீஸ்வரத்தை புனருத்தாரணம் செய்தது போன்று திருக்கோணேஸ்வரத்தையும் புனருத்தாரணம் செய்ய இந்தியா முன்வர வேண்டும். உண்மையான பழமை வாய்ந்த திருக்கோணேஸ்வர சிவலிங்கம் இன்று கடலினுள் அமிழ்ந்து கிடக்கின்றது.

அது வெளிக்கொண்டு வரப்பட்டு சிறந்த ஒரு சிவன் கோவில் அங்கு கட்டப்பட வேண்டும். இளைஞனாக கொழும்பு வீதிகளில் அழகிய பெண்களுடன் நவீன மோட்டார் வாகனங்களில் 1950- 60களில் வலம் வந்த மைக் வில்சன் என்பவர் கடலுக்கடியில் இருந்த சிவலிங்கத்தைத் தரிசித்தவுடன் இந்து சுவாமியாக மாறினார். யோகர் சுவாமியாரின் சீடர் ஆனார். திருக்கோணேஸ்வரம் பாடல் பெற்ற தலம். கைலாசமும், சிதம்பரமும், திருக்கோணேஸ்வரமும் ஒரே தீர்க்க ரேகையில் உள்ளன. இந்தியாவின் உதவியோடு கட்டாயமாக சிங்கள பௌத்த ஆக்கிரமிப்புகளை முறியடிக்கலாம்.

சூறாவளியால் முறிந்தமரம் அகற்றப்படாமையால் வவுனியாவில் பொதுமக்களுக்கு அச்சுறுத்தல்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியாவில் கடந்த மாதம் 24ஆம் திகதி மினிசூறாவளியுடன் கூடிய கடும் மழையினால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதுடன் பாரிய மரங்களும் முறிந்து வீழ்ந்தது.

இந்நிலையில், வவுனியா மாவட்ட செயலக வாயிலில் அமைந்துள்ள மரத்தின் பாரிய கிளை ஒன்று மின்சார இணைப்பின் மீது முறிந்து வீழ்ந்தது. எனினும் சூறாவளி வீசி 20 நாட்கள் கடக்கின்ற நிலையிலும் குறித்த மரக்கிளை அகற்றப்படாமையினால் பொதுமக்களுக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

குறித்த பகுதி பொதுமக்களின் நடைபாதையாக இருப்பதுடன், மாவட்ட செயலகம், பொது வைத்தியசாலை என்பன அருகில் இருப்பதால் அதிகமான பொதுமக்கள் பயன்படுத்தும் ஒரு இடமாக காணப்படுகின்றது. அத்துடன் மரக்கிளை மின்சார இணைப்பின் மீது வீழ்ந்துள்ளமையால் அது அறுந்து விழும் நிலையும் ஏற்பட்டுள்ளது. எனவே, அசம்பாவிதங்கள் ஏற்படுவதற்கு முன்னர் குறித்த மரக்கிளையை உடனடியாக அகற்றுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, அந்தப் பகுதியை தினமும் பயன்படுத்திவரும் மாவட்ட அரச அதிபரின் கண்களில் இது படவில்லையா என கேள்வி எழுப்பியுள்ள பொதுமக்கள், அந்த மரக்கிளை முறிந்து உயிரிழப்பு ஏற்பட்ட பின்னரா அதனை அகற்றுவார்கள் என விசனம் தெரிவித்துள்ளனர்.

அடுத்த ஜனாதிபதியாக..

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீளெழ செய்து சர்வதேசத்தின் முன் சிறந்த நாடாக இலங்கையை மாற்றிக்கொண்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவே அடுத்த ஜனாதிபதியாகவும் தெரிவுசெய்யப்பட வேண்டும்.

எரிபொருளுக்கு நீண்ட வரிசை ஆர்ப்பாட்டங்கள் மற்றும் உணவுப் பற்றாக்குறையுடன் அமைதியின்மையில் மூழ்கியிருந்த நாட்டை ஜனாதிபதி மீட்டெடுத்துள்ளார்.

எரிவாயு மற்றும் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக மக்கள் வரிசையில் நின்றுபோராட்டத்தில் ஈடுபட்டனர். விவசாயிகள் விவசாய கருவிகளை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சியை கைப்பற்றிய குறுகிய காலத்தில் இயல்பு நிலைக்கு நாடு திரும்பியது. எனவே அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் அவரை போட்டியின்றி தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஆகவே, அடுத்த தேர்தலில் ஜனாதிபதி போட்டியிட வேண்டும். அவர் களமிறங்கினால் மக்கள் அவரை தேசிய சொத்தாக தேர்ந்தெடுக்க வேண்டும் என்றார்.

ஐ.எம்.எவ்.கடன்திட்டம்...

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் அதன் முன்னேற்றம் குறித்து வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக அண்மையில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே சாகல ரத்நாயக்க இதனைத் தெரிவித்தார்.

இராஜதந்திர பிரதானிகளுடனான இக்கலந்துரையாடலில், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பொருளாதார மீட்சி மற்றும் நிலையான வளர்ச்சிக்கான கட்டமைப்பு ரீதியிலான சீர்திருத்த வேலைத்திட்டம் குறித்து கவனம் செலுத்தியதோடு இந்த வேலைத்திட்டம் நிதி மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களுக்கு மட்டுப்படுத்தப்படாமல், இலங்கையின் மீட்சி மற்றும் நிலையான வளர்ச்சிக்கு முக்கியமான நல்லிணக்க செயல்முறை போன்றவற்றையும் உள்ளடக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த சாகல ரத்நாயக்க,

"பொருளாதார மீட்சி மற்றும் நிலையான வளர்ச்சிக்கான கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தத்தின் இந்த கடினமான மற்றும் இலட்சியத் திட்டத்தை நாங்கள் ஆரம்பித்துள்ளோம். அதற்கு எமக்கு மிகக் குறைவான தெரிவுகளே எஞ்சியிருந்ததோடு, அதற்கான வலுவான முயற்சியாக இந்த ஆரம்பத்தை கருதலாம்.

இந்த வேலைத்திட்டம் நிதி மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை, குறிப்பாக நிதி சீர்திருத்தம், இலங்கையரின் மீட்சி மற்றும் நிலையான வளர்ச்சிக்கு முக்கியமாகும். நல்லிணக்க செயல்முறை போன்ற விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது. இது வரிக் கொள்கை நடவடிக்கைகளை உள்ளடக்கிய வருமான அடிப்படையிலான நிதி ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டது. அவற்றில் பெரும்பாலானவை ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தை மீளாய்வு செய்யும்போது, செப்டெம்பர் மாதத்தில் நாம் மறுபரிசீலனை செய்ய வேண்டிய மேலும் பல விடயங்கள் உள்ளன. உதாரணமாகக் கூறுவதாயின், ஜனவரி மாதத்தில் கலால் வரி 20வீதத்தினால் அதிகரிக்கப்பட்டபோது, சட்டபூர்வ கொள்முதல் குறைந்ததாலும், சட்டவிரோத நடவடிக்கைகள் அதிகரித்ததாலும் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கவில்லை. 2025ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வரி மற்றும் மொத்த தேசிய உற்பத்தி வீதம் 14 வீதமாக காணப்படுவதாகவும் கடினமான இலக்காக இருப்பினும் அதனை அடைய முடியும்.

உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்டங்கள் கட்டமைப்பு சீர்திருத்த திட்டத்தின் ஒரு பகுதியாகும். மேலும் அவை சர்வதேச நாணய நிதியத் திட்டத்தின் சில நடவடிக்கைகளை வலுப்படுத்துகின்றன.

உலக வங்கி திட்டத்தின் கீழ், நிதி கண்காணிப்பு மற்றும் கடன் முகாமைத்துவத்தின் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதோடு அதில் இரண்டு படிகளை உள்ளடக்கியது. அதிலொன்று பாராளுமன்ற வரவு-செலவுத்திட்ட அலுவலக சட்டத்தின்மூலம் பாராளுமன்ற வரவு-செலவுத்திட்ட அலுவலகத்தை நிறுவுவது அதில் ஒரு முன்னெடுப்பாகும். 2023ஆம் ஆண்டு மே மாதத்திற்குள் வரவு - செலவுத்திட்ட அலுவலகத்தை செயல்படுத்த நாம் எதிர்பார்க்கிறோம்.

இதுகுறித்து, மக்களை தெளிவுபடுத்த கட்டாய கால அவகாசம் வழங்கப்படவுள்ளது. அதன்பின், பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு அரச நிதிக்குழுவுக்கு சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுகிறது. இது பாராளுமன்றத்தில் பின்பற்றப்பட வேண்டிய ஒரு செயல்முறையாகும். இது ஏப்ரல் 17ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு ஏப்ரல் 25 முதல் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுக்க எதிர்பார்க்கப்படுகிறது.

2024ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில், தற்போது சட்டத்தின் கீழ் உள்ளடங்காத பகுதிகள் உட்பட பல்வேறு பகுதிகளை உள்ளடக்கிய புதிய அரச கடன் முகாமைத்துவச் சட்டமொன்றை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. மறுசீரமைப்பு மற்றும் வணிகமயமாக்கப்படும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு இறையாண்மை உத்தரவாதங்களை வழங்குதல் மற்றும் கடன் வழங்குதல் போன்ற செயல்முறைகள் இதில் அடங்கும். ஏற்கனவே பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்டாய வருமான வரி சட்டத்துடன் வரி நிர்வாகத்தை மேம்படுத்துவதையும் 2024 முதல் காலாண்டில் வரி கணக்காய்வு மற்றும் இணக்கத்தை அதிகரிப்பது குறித்து கவனம் செலுத்துவதும் இதன் நோக்கமாகும்.

இதன்போது கருத்து தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி,

நெருக்கடியான காலத்தில் இலங்கைக்கு கடனுதவி வழங்கியவர்களுக்கு நன்றி. நல்லிணக்க வேலைத்திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து பிரச்சினைக்கு இனக்குழுக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்குவதோடு, ஸ்திரத்தன்மையை உருவாக்கி, பொருளாதாரத்தை பலப்படுத்துவதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமாகும்.

நல்லிணக்க நோக்கங்களுக்காக 3 அத்தியாயங்களின் கீழ் அரசாங்கத்தின் தேசிய நல்லிணக்கம் தொடர்பாக அமைச்சரவை உப குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. அதன் முதல் அத்தியாயமாக 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி பாராளுமன்றத்தின் ஏனைய கட்சிகளின் ஆதரவினை பெற்று, அனைத்து இலங்கையர்களுக்கும் கிடைக்க வேண்டிய கௌரவம் தொடர்பான விரிவான இணக்கப்பாட்டினை எட்டுவதாகும்.

அடுத்த கட்டமாக, நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கைதிகளை விடுதலை செய்தல், அவர்களின் வழக்கு நடவடிக்கைகளை துரிதப்படுத்தி, சர்வதேச தரத்திற்கு அமைவாக பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் அனைத்து தரப்பினருடனும் கலந்தாலோசிப்பதாகும்.

பொறுப்புக்கூறல் செயற்பாடுகளுக்காக உண்மையை கண்டறிவதற்கான உள்ளக பொறிமுறை ஒன்றை நிறுவுவதே இதன் மூன்றாம் அத்தியாயமாகும். அத்துடன், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவுவதற்கான அமைச்சரவை அனுமதியும் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், தென் ஆபிரிக்காவின் அனுபவங்கள் குறித்து ஆராயவும் தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக்கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

புதிய நோக்குடன்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் புதுவருட வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சூரியன் மீன ராசியிலிருந்து மேஷ ராசிக்கு பெயர்ச்சி அடைவதைத் தொடர்ந்து உதயமாகும் தமிழ், சிங்களப் புத்தாண்டு இந்நாட்டின் தமிழ், சிங்கள மக்களுக்கு மிகவும் சிறப்பும், மகிழ்வும் நிறைந்ததாகும். சௌபாக்கியத்தையும் சுபீட்சத்தையும் வேண்டியே அனைவரும் சம்பிரதாயங்களை செய்கின்றனர்.

கடந்த வருடம் சித்திரைப் புத்தாண்டு உதயமானபோது நாம் அனைவரும் மிகப்பெரிய நெருக்கடிக்குள் சிக்கியிருந்தோம். புத்தாண்டு கொண்டாட்டம் ஒருபுறமிருக்க, அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதே மிகப் பெரிய சவாலாக இருந்தது. ஆனால் இப்புத்தாண்டில் அனைவருக்கும் சிறு ஆறுதல் தருகின்ற சூழல் உருவாக்கியுள்ளது.

அடுத்த புத்தாண்டில், இதனை விடவும் சௌபாக்கியத்தையும் செழிப்பையும் ஏற்படுத்திக் கொள்ளவே நாம் முயற்சிக்க வேண்டும். நாம் அனைவரும் ஒருதாய் மக்களாக ஒரே பாதையில் பயணித்தால் அந்த இலக்கு சாத்தியமாகும்.

இன, மத, கட்சி, நிற பேதங்களை புறந்தள்ளிவிட்டு புதிய நோக்குடன் முன்னோக்கிப் பயணிக்க இந்த சித்திரைப் புத்தாண்டில் சங்கற்பம் கொண்டால் இந்த புத்தாண்டு மட்டுமன்றி, எதிர்காலத்தையும் நலம்மிக்கதாக அமைத்துக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தை கைவிட...

இந்நிலையில், எதிர்வரும் 17ஆம் திகதி முதல் பேராசிரியர்கள் கடமையில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக பேராசிரியர்கள் சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

சம்மேளனத்தின் உறுப்பினர்களிடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மார்ச் 9ஆம் திகதி பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் சங்க சம்மேளனத்தால் வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இருள் சூழ்ந்த...

ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதத்தில் மீன ராசியில் இருந்து மேஷ ராசிக்கு சூரியன் பெயர்ச்சியுடன் ஆரம்பமாகும் சிங்கள மற்றும் இந்து புத்தாண்டு இந்நாட்டில் சிங்கள மற்றும் தமிழ் மக்களால் கொண்டாடப்படும் ஒரு சிறந்த கலாசார விழாவாகும்.

பல ஆண்டுகளாக, இலங்கை மக்கள் பல சவால்களுக்கு மத்தியில் புத்தாண்டைக் கொண்டாடினர் என்றாலும், ஒட்டுமொத்த மக்களின் ஒரே எதிர்பார்ப்பு நாடு மற்றும் மக்கள் செழிப்புடனும் ஆரோக்கியத்துடனும் வாழ்வதாகும்.

சிங்கள மற்றும் இந்து புத்தாண்டு சமூக உறவுகளை மேம்படுத்துவதற்கும் பழைய பழக்கவழக்கங்களைத் தொடரவும், ஒருவருக்கொருவர் பரஸ்பர நம்பிக்கையை மேம்படுத்தவும் உதவுகிறது.

சமூகத்தில் நேர்மறை நற்பண்புகளையும் நெறிமுறைகளையும் புகுத்தும் மாபெரும் கலாசார விழாவாக விளங்கும் சிங்கள, இந்து புத்தாண்டு, மனித நல்லிணக்கத்திற்கான கதவுகளைத் திறக்கும் நல்லிணக்கப் பண்டிகையாகவும் அமைந்துள்ளது.

இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையே பிரிக்க முடியாத பிணைப்பு உள்ளது. இதன் விளைவாக மனிதன் இயற்கைக்கு நன்றி செலுத்தும் வாய்ப்புகளை காண்கிறான். சிங்கள இந்து புத்தாண்டு என்பது நன்றியின் உண்மையான வடிவம் என்றும் பொருள்படும்.

தன்னிறைவு பெற்ற பொருளாதாரத்தை கொண்டிருந்த நம் நாடு, தற்போது கண்ணீர் வடிக்கும் நாடாக மாறியதோடு, புத்தாண்டை குடும்பத்துடன் மகிழ்ச்சியாகவும், நிம்மதியாகவும் கொண்டாடும் வாய்ப்பு கூட பல ஆண்டுகளாக இல்லாமல் போய்விட்டது. எமது நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை நிலைமைகளுக்கு அசாதாரணமான சவால்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த இருள் சூழ்ந்த காலம் முடிந்து, நமது நாட்டின் ஒட்டுமொத்த குடிமக்களும் வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் வளமான மற்றும் ஒளிமயமான எதிர்காலத்திற்காக உறுதியுடன் அணிதிரள்வதற்கான வலிமையைப் பெற பிரார்த்திக்கிறேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக பஸ்கள்...

சொந்த இடங்களுக்கு செல்வதற்காக அதிகமான பயணிகள் கொழும்பு மத்திய பஸ்தரிப்பிடத்துக்கு நேற்றுமுன்தினம் (11) வருகைதந்திருந்தனர். அவர்களின் தேவைகருதி மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

அதேபோன்று, நேற்றும் கொழும்பு மத்திய பஸ்தரிப்பிடத்தில் அதிகமான பயணிகள் வருகைதந்திருந்த நிலையில் மேலதிகமாக 250 நெடுந்தூர பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

நெடுந்தூர பஸ் சேவைக்காக அந்தந்த டிப்போக்களிலிருந்த பஸ்கள் மீள்அழைக்கப்பட்டுள்ளன. அத்தோடு, 011 232 8081 தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்வதனூடாக மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

விவசாய சமூகத்தை...

தமிழ் - சிங்கள சித்திரைப் புத்தாண்டு தேசத்தின் மாபெரும் கலாசார விழாவாகும். தேசத்தின் மாபெரும் கலாசார விழாவான தமிழ்-சிங்கள சித்திரைப் புத்தாண்டில் ஒரே சுப நேரத்தில் செயற்படும், உலகின் எந்த நாட்டிலும் இல்லாத தனித்துவமான பல்வேறு பழம்பெரும் பாரம்பரியங்களை நாம் மரபுரிமையாகப் பெற்றுள்ளோம்.

நாம் எப்போதும் வளமான புத்தாண்டுக்காக வாழ்த்துவோம். இம்முறை நாடு எதிர்கொண்ட உணவு மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில், புத்தாண்டின் எதிர்பார்ப்பை நிறைவேற்றி, விளைச்சலினால் நாட்டை செழிப்படையச் செய்வதற்காக எமது விவசாய சமூகத்தினர் மேற்கொண்ட சவால்மிக்க பணிகளை இந்தப் புத்தாண்டில் நன்றியுடன் நினைவுகூர வேண்டும்.

இயற்கையோடு உறவாடிய எமது முன்னோர்கள் புத்தாண்டில் அதனை இன்னும் நிஜமாக்கினார்கள். அவர்களின் வாரிசுகளான எமக்கு உணவுப் பாதுகாப்பு, சிக்கனம், எமது பாரம்பரியம் மற்றும் ஒற்றுமை பற்றி மீண்டும் மீண்டும் கூற வேண்டிய தேவையில்லை. செயற்படுதலே எமக்கு முன்னுள்ள தேவையாகும்.

கடந்த காலங்கள் எமக்கு சிந்திப்பதற்காக பல விடயங்களை விட்டுச் சென்றுள்ளன. தொற்றுநோய் அனர்த்தம், பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகள் போன்றன அண்மைக்கால வரலாற்றில் நாம் காணாத விடயங்களாகும்.

அவற்றை மீண்டும் சந்திக்காதிருப்பதற்கும் அடுத்த தலைமுறைக்கு அவற்றை விட்டுச் செல்லாதிருப்பதற்கும் புதிய சிந்தனைகளால் வளம்பெற்ற இனியதோர் புத்தாண்டு இன்றிலிருந்து மலரட்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரோக்கியம் நிறைந்த வளங்களை உருவாக்கும் ஆண்டாக அமையவேண்டும்

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன

சிங்கள – தமிழ் மக்களின் பாரம்பரியமான பிறக்கவிருக்கும் 2023ஆம் ஆண்டு புத்தாண்டு ஆசீர்வாதங்கள் நிறைந்த, நல்ல ஆரோக்கிய நிறைவேறும், ஆரோக்கியமான வளங்களை உருவாக்கும் ஆண்டாக அமையவேண்டும் என பிரார்த்தித்துக்கொண்டு எனது இதயபூர்வமான வாழ்த்துகளை அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன் - என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அவரின் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவரின் வாழ்த்துச் செய்தியில், கடந்த சில வருடங்களாகநாடு மற்றும் உலகம் என்ற ரீதியில் நாம் பல சவால்களைச் சந்தித்திருந்தபோதிலும் புத்தாண்டின் மதிப்பை இழக்கவில்லை. உலகம் பயம் - சந்தேகம் ஆகியவற்றால் சூழப்பட்டிருந்தாலும் எமது மூத்த பரம்பரையினர் தம்மிடம் காணப்படும் பெரும் செல்வமாகக் கருதும் சிங்கள-தமிழ்ப் புத்தாண்டு சம்பிரதாயங்களை தமது பிள்ளைகளுடன் கொண்டாடும் பாரம்பரியம் எனது நினைவுகளிலிருந்து அழியவில்லை.

அன்றுபோல் இன்றும் நாளையும் இதற்கான கௌரவம் இலங்கைப் பெண்களையே சேரும். ஆண், பெண் இருபாலரும் குடும்பத்துக்காகக் கடுமையாக உழைத்துப் பெற்ற செல்வத்தை எவ்வாறான பொருளாதாரச் கஷ்டங்களுக்கு மத்தியிலும் வீட்டின் மீதுள்ள அன்பைப் பேணி, அத்தகைய கொண்டாட்டங்களைச் சிக்கனமாக முன்னெடுக்கும் இந்நாட்டின் உண்மையான நிதிப் பொறுப்பாளர்களாக அவர்கள் விளங்குகின்றனர். தாய்வீட்டில் கும்பங்கள் ஒன்றிணையும் சந்தர்ப்பத்தில் தாயின், மனைவியின், மகளின் முகத்தில் ஏற்படும் புன்னகையைவிட எமக்குத் தெரியாமல் அவர்களின் கண்களில் சிந்துகின்ற ஆனந்தக்கண்ணீரிலேயே பௌத்த-இந்து புத்தாண்டின் உண்மையான அர்த்தத்தை உணர்கின்றேன்.

தாய்நாட்டுடன் இதயத்தாலும், ஆன்மாவாலும் பிணைக்கப்பட்ட மூத்தவர்களாகிய நாம் தற்பொழுது ஏழு கடல் தாண்டி புதிய உலகத்தைக் காண விரும்பும் பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகள் நிறைந்த குழுவுடன் இருக்கின்றோம். புதிய உலகத்தைக் கற்பனை செய்யவில்லையென்றால் பழமைவாதத்தின் பிணைப்புகளில் நாம் சிக்கிவிடுவோம். இருந்தபோதும், புத்தாண்டு என்பது வயது வித்தியாசமின்றி, புதிய தலைமுறைக்கு தீர்மானம் - நாட்டுக்குச் செல்ல, சேமிக்கலுக்குச் சென்று வழிபட, முற்றிலுமான வாசனையை அனுபவித்தே, ஊஞ்சல் ஆடுவது போன்ற நாட்டுப்புறப் பாணியில் கொண்டாட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

அது மாத்திரமன்றி, புத்தாண்டு எமது பழக்க வழக்கங்களை உலகத்துக்குப் பறைசாற்றும் கண்ணாடியாகவும் திகழ்கிறது. தற்போதுள்ள பாரம்பரிய ஊடகங்கள் மற்றும் நவீன ஊடகங்கள் இதற்கான சாரளத்தை உலகுக்குத் திறந்துவிடுகின்றன. வணிகமயமாக்கலுக்குள் சிக்கவில்லையென்றால் பௌத்த மற்றும் இந்து மதங்களால் செழுமைப்படுத்தப்பட்ட ஆன்மீகக் கலாசாரத்தின் உண்மையான வாசனை அந்த சாளரங்களினூடாக வீசும். உண்மையான பௌத்தர்கள் அல்லது இந்துக்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பவராயின் புத்துணர்வு என்பது அவர்களுக்கு மற்றொரு தொடர்புடைய சுருத்தாகும்.

புத்தாண்டில் எமது செலவை அதிகரிக்கும் பொருட்கள், சுருவிகளைச் சேர்ப்பதைவிட எண்ணங்களில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்துவது மதிப்புமிக்கதாக அமையும். சிறுபிள்ளைகளுக்கு இந்த முன்மாதிரியை ஒரேநேரத்தில் கற்றுக்கொள்ள முடியாவிட்டாலும், மூத்தவர்களாகிய நாம் அனைவரும் ஒரு ரூபாவைக் கூட அளவுக்கு முடியாதளவுக்கு கடினமான சூழ்நிலையில் இருக்கின்றோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

சகலரும் சமனென்ற மகிழ் காலம் நிலவட்டும்!

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

பிறக்கும் சித்திரை புத்தாண்டின் வரவில் சகல இன, மத, சமூக மக்களும் சமனென்ற மகிழ் காலம் நீடித்து நிலவட்டும் - என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவரின் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரின் செய்தியில்,

''இன, மத பேதங்களின்றி, தமிழ் - சிங்கள மக்களை பண்பாட்டு விழுமியங்களால் ஒன்றுபடவைத்திருப்பது சித்திரை புத்தாண்டு. அது போலவே சகல மக்களின் இன, மத உணர்வுகளும் சமனென மதிக்கப்படும் சமத்துவ தேசத்தையே நாம் விரும்புகிறோம். மனிதநேயமே எமது மதம். எமது மக்களின் இன, மத அடையாளங்களைப் பாதுகாக்கவும், உரிமைகளைப் பெற்றிடவும் தேசிய நல்லிணக்க வழிநின்று தொடர்ந்தும் வெற்றி காண்பதே எமது மக்களுக்கு நாம் ஆற்றும் பணியாகும்.

வெற்றுக் கூச்சல்களும், வெறும் வார்த்தைகளும் எமது மக்களுக்கு எந்த விமோசனங்களையும் பெற்றுத்தராது. மாறாக, தீர்வேண்டிய பிரச்சினைகளை தீராப் பிரச்சினையாக்கும் அரசியல் கபட நோக்கங்களே நடந்தேறும்.

மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும் ஊடுருவிப் பாயுமென்ற எமது மதிநுட்ப வழிநின்று நாம் ஆற்றிய மாபெரும் மக்கள் பணிகளின் கண்கண்ட சாட்சியங்களாகவே, பொருளாதார வீழ்ச்சியிலிருந்து இலங்கைத்தீவு மீட்சி பெற நாம் எடுத்த அரசியல் நிலைப்பாடும், நிதானமும், இன்று மெல்லென வெற்றிகண்டு வருவதுபோல், இனிவரும் காலங்களில் எல்லா பிரச்சினைகளுக்கும் நிரந்த தீர்வுண்டு என்ற நம்பிக்கையோடு பிறந்திருக்கும் சித்திரைப் புத்தாண்டை வரவேற்போம்.

கடல் வளம், நில வளம், கல்வி வளம், மற்றும் பொருளாதார வளமென சகல வளங்களாலும் பாதுகாக்கவும் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற சமத்துவ நீதியை உருவாக்கவும், துயர்களும் துடைகளும் நீங்கி மகிழ்வெழச்சியுடன் சகல உரிமைகளும் பெற்று எமது மக்கள் நிமிர்ந்தெழவும், பிறந்திருக்கும் சித்திரைப் புத்தாண்டு இன்னும் வலிமையுடன் உழைப்போம்' என்று தெரிவித்துள்ளார்.

நல்லிணக்கத்தை மலரச்செய்யும் புத்தாண்டாக அமையட்டும்

இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான்

இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் ஏற்படுத்தும் பண்டிகையாகவுள்ள சித்திரைப் புத்தாண்டில் அனைத்து மக்களின் வாழ்வில் மகிழ்ச்சியும் அமைதியும் ஏற்பட வேண்டும் - என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் அவரது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில்,

மலர்ந்திருக்கும் தமிழ் - சிங்களப் புத்தாண்டு சகல மக்களுக்கும் நல்ல ஆரோக்கியத்தையும், சுபீட்சத்தையும், செளபாக்கியங்களையும் வழங்கி மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்கு வழியேற்படுத்த வேண்டும்.

இலங்கையில் இந்து தமிழ் மக்களும், பௌத்த சிங்கள மக்கள் பொதுப் பண்புகளாக சித்திரைப் புத்தாண்டை கொண்டாடுகிறார்கள்.

வேறுபட்ட மதங்களையும் மொழிகளையும் கொண்டுள்ள மக்கள் இணைந்து கொண்டாடும் பண்டிகையாக சித்திரைப் புதுவருடம் இருப்பதால் இலங்கையில் இது ஒரு தேசிய பெருவிழாவாக முக்கியத்துவம் பெறுகின்றது.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி அனைவருடைய வாழ்க்கையிலும் பல மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலைமையிலிருந்து நாட்டை மீட்பது அனைவருடைய கடமையாகும். இலங்கை எதிர் கொண்டுள்ள இந்த இக்கட்டான சூழ்நிலைகள் நீங்கி மக்களின் வாழ்க்கை விரைவில் இயல்புநிலைக்குத் திரும்ப வேண்டும்.

மலந்துள்ள சித்திரைப் புத்தாண்டிலிருந்து மக்களுடைய அனைத்து துன்பங்களும் நீங்கி நாடு அபிவிருத்தியை நோக்கி முன்னேறும் அனைவரும் கைகோர்த்து செயல்படுவோம் என குறிப்பிட்டுள்ளார்.

தினசரி பலாபலன்கள்

சுபகிருது வரும் பங்குனி மாதம் 30ஆம் நாள் வியாழக்கிழமை

மேஷம்

பெரியோர்களின் கோபத்திற்கு ஆளாகாமல் பார்த்துக்கொள்ளுங்கள், தொழில் வியாபாரத்தில் அக்கறை காட்டுங்கள்.

ரிஷபம்

வீண் பழிகள் உங்கள் மீது சுமத்தப்படலாம், சற்று கவ்டப்பட்டு உழைத்தாலன்றி பணம் கிடைப்பது அரிது.

மிதுனம்

பெண்களால் எதிர்பாராத சில செலவுகள், சிக்கல்கள் ஏற்படலாம், எதற்கும் முற்கிக்கொண்டு வாய் வார்த்தைகளை விடாதீர்கள்.

கடகம்

பண ரீதியில் இருந்துவந்த சிக்கல்களை இன்று சாமாளிப்பீர்கள், காதல் விவகாரங்களை சற்று கவனமாகக் கையாளுங்கள்.

சிம்மம்

நீண்டநாள் பகையாள்ர் மன்னிப்புக் கோரி கரம் சேர்த்துக்கொள்வார்கள், மனதை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளுங்கள்.

கன்னி

ஏதாவது வீண் வம்பு வழக்குகளில் மாட்டிக்கொள்ளாமல் பார்த்துக் கொள்ளுங்கள், பயணத் தடை உண்டு.

துலாம்

இன்ப அனுபவங்களால் தினைத்திருப்பீர்கள், யாரையும் நம்புவதற்கு முன்னர் ஒன்றுக்கு நான்கு முறை சிந்திக்கவும்.

விருச்சிகம்

தேவையான பணம் கையிருப்பில் இருந்தாலும் செலவுகளுக்கு குறைவிருக்காது, வீண் கேலிப் பேச்சுகளைத் தவிர்க்கள்.

தனுசு

பிரச்சினை இன்றியே மனதைப் போட்டுக் குழப்பிக்கொள்வீர்கள், அவசியச் செலவுகளை நிச்சயம் செய்யவேண்டிய நாள்.

மகரம்

ஏதோ ஒரு மனக்குறையோடு உலாவிக்கொண்டிருப்பீர்கள், உங்கள் பொருட்களைப் பத்திரப்படுத்திக்கொள்ளுங்கள்.

கும்பம்

நண்பர்கள் மூலம் நீங்கள் எதிர்பார்த்த உதவி கிடைக்கும், செலவுகளையும், பயணங்களையும் குறைத்துக்கொள்ளுங்கள்.

மீனம்

வெளியிடத்தவர்களின் பூரண அன்பும் அரவணைப்பும் நிறைந்த நாள், மனைவி மக்களோடு குதூகலித்திருப்பீர்கள்.

திதி : ஸப்தமி அதிகாலை.3.44 வரை பின் அஷ்டமி

நட்சத்திரம் : பூராடம் மு.ப.10.43 வரை பின் உத்திராடம்

யோகம் : சித்த யோகம்

வார சூலை : தெற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது

நல்ல நேரம் : மு.ப.11.04 - 12.04 மணி வரை

ராகு காலம் : 1.34 - 3.04 மணி வரை

எமகண்டம் : 6.04 - 7.34 மணி வரை

குளிகை : 9.04 - 10.34 மணி வரை

சந்திராஷ்டமம் : இடப, மிதுன ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

தன அதிஷ்டம் : அசுவினி, மகம், மூலம், பரணி, பூரம், பூராடம் (பிறந்தவர்களுக்கு)

விஷேட தினம் : --------

கணிப்பு : சிவா பாஸ்கரராவ்
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

புத்தாண்டில் மட்டுமல்லாமல் தொடர்ந்தும் ஒற்றுமையாக வாழ வேண்டும்

அமைச்சர் ஜீவன் தொண்டமான்

மலர்ந்துள்ள தமிழ், சிங்களப் புத்தாண்டானது, அனைத்து மக்களுக்கும் மறுமலர்ச்சியையும், மற்றற்ற மகிழ்ச்சியையும், மன நிறைவையும், மகத்தான பல சுப விடயங்கள் ஈடேறும் ஆண்டாக அமைய, எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன் - என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் அவரது புதுவருட வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில்,

கொவிட் - 19 பெருந்தொற்று, அதன்பின்னரான பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் 2020, 2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் தமிழ், சிங்களப் புத்தாண்டை வழமைபோல் வண்ணமயமாகக் கொண்டாட முடியாத நிலை இலங்கைவாழ் மக்களுக்கு ஏற்பட்டது. தற்போது நிலைமை மாறிவருகின்றது. பொருளாதார நெருக்கடி தீர்த்துவருகின்றது. கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில், புத்தாண்டை மகிழ்வுடன் கொண்டாடக்கூடிய - வரவேற்கக்கூடிய சூழ்நிலை உதயமாகியுள்ளது. எனவே, முன்னோக்கிச் செல்ல முடியும் - எம்மோர் வாழ்விலும் இன்பம் பொங்கும் என்ற நம்பிக்கையுடன் புத்தாண்டில் காலடி வைப்போம்.

ஐக்கியமே ஆக்கம். தமிழ், சிங்களப் புத்தாண்டு காலத்தில் மக்கள் மத்தியில் ஒற்றுமையைக் காண முடியும். குடும்ப நிகழ்வாக இருந்தால் என்ன, விளையாட்டுப் போட்டிகளாக இருந்தால் என்ன அனைத்து மக்களும் கூடி மகிழ்வார்கள். ஒருவருக்கொருவர் உதவிகளைச் செய்வார்கள்.

புத்தாண்டு காலப்பகுதியில் மட்டுமல்லாமல் இலங்கை தாய் மக்களாக நாம் அனைவரும் தொடர்ந்து ஒற்றுமையாக வாழ வேண்டும்.

அதேபோல 'ஒற்றுமை'யின் முக்கியத்துவத்தைக் கருதி, நாட்டை மீட்டெடுக்க அனைத்துக் கட்சிகளும் இனியாவது ஒன்றுபட வேண்டும். அதற்கான அழைப்பை இந்த நள்ளாளில் மீண்டுமொருமுறை விடுக்கின்றேன். அவ்வாறு அனைவரும் இணைந்து செயற்பட்டால், அடுத்த வருடம் எல்லா வழிகளிலும் முன்னேறிய நாடாக நாம் புத்தாண்டைக் கொண்டாடக்கூடிய சூழ்நிலை நிலவும்.

புத்தாண்டு காலத்தில் மக்கள் சுற்றுலா செல்வார்கள், இசை நிகழ்ச்சி உள்ளிட்ட களியாட்டங்களில் ஈடுபடுவார்கள். பட்டாசுகளை கொளுத்தி வானவேடிக்கை நிகழ்த்துவார்கள். எனவே, எந்த விடயத்தைச் செய்தாலும் அவதானத்துடனும், அடுத்தவர்களுக்கு தீங்கு ஏற்படாத வகையிலும் செய்யுமாறும் - செயற்படுமாறும் கேட்டுக்கொள்கின்றேன். உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். உங்கள் எண்ணங்கள் ஈடேற இறைவனை பிரார்த்திக்கின்றேன் - என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் - சிங்களப் புத்தாண்டு அனைவரதும் மாபெரும் கலாசார பெருவிழாவாகும்

ஜனாதிபதியின் தொழிற்சங்கப் பணிப்புக் குழுவின் உறுப்பினர் ஆனந்தகுமார்

இலங்கையர்களின் தொன்மை மிகு பாரம்பரியமான தமிழ் - சிங்களப் புத்தாண்டு பிறப்பினை முன்னிட்டு வாழ்த்துகளைப் பகிர்ந்துக்கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். துன்பத்தை வென்று மகிழ்ச்சியை அடையும் எதிர்பார்ப்பை குறிக்கும் தமிழ் - சிங்களப் புத்தாண்டானது நம் அனைவரதும் மாபெரும் கலாசார பெருவிழாவாகும் - என்று ஐக்கிய தேசிய கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளரும் ஜனாதிபதியின் தொழிற்சங்கப் பணிப்புக் குழுவின் உறுப்பினருமான எஸ்.ஆனந்தகுமார் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரின் வாழ்த்துச் செய்தியில்,

புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் தமிழ் - சிங்கள ஆதிகுடிகளின் தொன்மை வாய்ந்த மரபுகளை நினைவுபடுத்துகின்றன. புதிதாக பிறக்கும் புத்தாண்டில் நம் நல்லெண்ணங்களை அடைவதை நோக்கமாக்கிக்கொள்வதே அனைவரது எதிர்பார்ப்பாகும். நாட்டில் நிலவும் இக்கட்டான சூழ்நிலையைக் கடந்துசெல்வதற்கு நாம் அனைவரும் ஒரு நேசமாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இச்சவால் மிகுந்த காலகட்டத்தில் எதிர்பாராத விதமாக நாம் அனைவரும் முகங்கொடுத்த கொடுந்துயரும் துன்பங்களை ஒவ்வொன்றாக இல்லாதொழிப்பதற்குத் தேவையான எதிர்கால திட்டங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் ஏற்கனவே செயற்படுத்தி வருகின்றது. உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் ஒட்டுமொத்த நாட்டுமக்களுக்கும் இப்புத்தாண்டு அமைதியும், மகிழ்ச்சியும் நிறைந்த சிறப்பான ஆண்டாக அமைய பிரார்த்தித்து வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் - என்று குறிப்பிட்டுள்ளார்.

ஊடகத்துறையில் தனித்துவமான ஆளுமை மாணிக்கவாசகம்

சிவகுமார் திவியா

மூத்த ஊடகவியலாளரும் வன்னி மண்ணின் பெருமைக்குரியவருமான பொன்னையா மாணிக்கவாசகம், இம்மண்ணுலகை விட்டு எம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றார்.

அன்னார் ஊடகவியலாளர்களுக்கு குருவாகவும் பக்கபலமாகவும் இருந்து வழிநடத்தியவராவார். மனிதநேயராகவும் ஊடகவியலாளராகவும் சித்தனையாளருமாக இருந்த பொன்னையா மாணிக்கவாசகம் உலக வாழ்விலிருந்தும் விடைபெற்று அமரத்துவம் அடைந்துவிட்டார்.

பலரது வாழ்வாதாரத்திற்கு அத்திவாரமிட்ட இவர், தனது அனுபவங்களை "கால அதிர்வுகள், வாழ்த்துடிக்கும் வன்னி, மாற்றத்தை நாடும் மாற்றுத்திறனாளிகள்" ஆகிய நூல்களினூடாக சமூகத்துக்கு சமர்ப்பித்துள்ளார்.

"நிழல்வுகள், நினைவுகள், நெஞ்சில் மோதும் எண்ண அலைகள்" என்ற தலைப்புகளில்

பத்திரிகை உலகின் தனது சொந்த அனுபவங்களையும் தன்னை பாதித்த விடயங்களையும் தொடர் கட்டுரையாக 'வீரகேசரி' பத்திரிகையில் எழுதியுள்ளார்.

ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட இளைஞர் சமூகத்துக்கு தன்னம்பிக்கையையும் தற்துணிவையும் தந்து உற்சாகமூட்டி எந்த சவால்களை உறுதியுடன் எதிர்கொள்வதற்கு பக்கபலமாக இருந்தார் என்றால் மிகையாகாது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பலருக்கும் புனர்வாழ்வுபெற்ற போராளிகளுக்கும் விளம்பரமின்றி வாழ்வாதார உதவிகளைப் பெற்றுக்கொடுத்துள்ளார். பல புதிய படைப்பாளிகளை உருவாக்கியுள்ளதுடன், அத்தகைய படைப்பாளிகளின் படைப்புகள் வெளிவருவதற்கும் உறுதுணையாக இருந்துள்ளார். அவர்களில் பலர் இன்று பிரபல எழுத்தாளர்களாக வலம்வருகின்றனர்.

தினமும் தொலைபேசியில் அழைத்து அன்பொழுக குசலம் விசாரித்து அறிவுரை, ஆலோசனைகள், பொது விடயங்கள் குறித்து பேசுவார். அந்த இனிய குரல் இனி கேட்காது என்பதை நினைத்துப் பார்க்கவே எமது மனம் மறுக்கிறது. ஓர் உன்னத ஆத்மா இன்று எம்மிடமிருந்தும் உலக வாழ்விலிருந்தும் விடைபெற்றுவிட்டது.

ஊடகம் என்பது ஜனநாயகத்தின் நான்காம் தூண். மக்களுக்கும், அரசாங்கத்துக்கும் உள்ள

இடைவெளியில் கண்ணாடிபோல் நின்று அனைத்து செய்திகளையும் உலகிற்குச் சொல்லும் மிகப்பெரிய சாதனம் இந்த ஊடகம். பாரெங்கும் பறந்து வாழும் பலதரப்பட்ட மக்களிடம் தகவல்களைக் கொண்டுசேர்ப்பதில் மீடியாக்கள் எனப்படும் ஊடகங்களின் பணி மகத்தானது. அதிலும் வவுனியா மாவட்டத்திலிருந்து இன்று விடைபெற்றுச்சென்ற பொன்னையா மாணிக்கவாசகம் ஐயாவின் ஊடகப்பணி சொல்லவே வேண்டியதில்லை. சொல்லவல்லகாதலவ, உலகின் ஒருகோடியில் நடைபெறும் ஒரு நிகழ்வை மறுகோடியில் வசிப்பவர்களால் உடனுக்குடன் அறியவும் அது குறித்து பேசவும் முடிகிறதெனில் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையம்

ஆகிய ஊடகங்களின் மூலமே இது சாத்தியமாகிறது. அதற்கு எடுத்துக்காட்டாகும் இந்த ஊடகத்துறையால் வவுனியா மனித

சமூகம் அடைந்த பயன்களுக்கு உதாரணமாக வாழ்ந்தவர்.

அன்னார் நாட்டின் நெருக்கடியான காலகட்டங்களில் குறிப்பாக, தமிழ்ப் பிரதேசங்களில் இடம்பெற்ற யுத்தமோதல்கள் குறித்து தமது உயிரையும் பொருட்படுத்தாமல் செய்தி சேகரித்து சர்வதேசமெங்கும் மக்கள் எதிர்கொண்ட துன்பங்களை வெளிப்படுத்திவந்தார். அன்றைய நாட்களில் இரவு 9.15 மணிக்கு ஒலிபரப்பாகும் பிபிசியின் தமிழோசையை கேட்காமல் குறிப்பாக இலங்கை செய்திகளில் வடமாகாண செய்தியாளர் மாணிக்கவாசகத்தின் செய்திகளையும் பெட்டகங்களையும் கேட்காமல் உறங்குவதில்லை என்பது பலரது நிலைப்பாடு.

கடந்த 01.04.2023 அன்று தனது 76ஆவது பிறந்த திகதிகைக் கொண்டாடியவர் இன்று எம்மிடமிருந்து விடைபெற்றார் என்றுமானால் செய்தியை வெளியிடும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுவிட்டது.

மனிதகுல நன்மைக்காக உருவாக்கப்பட்ட ஊடகவியலாளராக வாழ்ந்தவர்.

தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, ஏப்ரல் 13ஆம் திகதி, வியாழக்கிழமை

தமிழனின் புத்தாண்டு வேண்டுதல்

இன்று தமிழ் - சிங்களப் புத்தாண்டு பிறக்கிறது. தமிழ் மக்களும் சிங்கள மக்களும் வெவ்வேறு சடங்குகள், சம்பிரதாயங்களுடன் புத்தாண்டைக் கொண்டாடினாலும் இரு இனத்தவர்களும் பெரும்பாலும் ஒன்றாகக் கொண்டாடுகின்ற ஒரே பண்டிகை இந்த சித்திரைப் புத்தாண்டுப் பிறப்பேயாகும்.

என்னதான் சோதனைகள், வேதனைகள் சூழ்ந்திருந்தாலும் அவையெல்லாம் அகன்றுபோகும் என்ற நம்பிக்கையுடனேயே மக்கள் இந்தப் பண்டிகையை கொண்டாடுவார்கள்.

ஒரு வருடத்துக்கு முன்னர் இன்றைய தினத்தை ஒரு கணம் திரும்பிப் பார்ப்போம். நவீன இலங்கையின் வரலாறு காணாத படுமோசமான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், முதன்முறையாக நாடு வங்குரோத்து நிலையை அடைந்துவிட்டது என்று அன்றைய அரசாங்கம் உத்தியோகபூர்வமாக பிரகடனம் செய்த நிலையில், அந்த புத்தாண்டை நாம் கடந்து வரவேண்டியிருந்தது.

எரிபொருட்கள், அத்தியாவசிய உணவுப்பொருட்கள் மற்றும் மருந்துவகைகளுக்கு நிலவிய பாரிய தட்டுப்பாடு மக்களை வீதிகளில் இறங்கிப் போராடவைத்தது. ஓர் அரசியல் புரட்சியின் பரிமாணங்களை எடுத்த, வரலாறு காணாத அந்த மக்கள் கிளர்ச்சியினால் முழு நாடுமே பெரும் கொந்தளிப்பான நிலையில் தவித்தது.

சுமார் நான்கு மாதங்கள் நீடித்த அந்த மக்கள் கிளர்ச்சி அன்றைய ஆட்சியாளர்களை விரட்டியடித்ததை அடுத்து புதிய ஒரு ஜனாதிபதியின் கீழ் அரசாங்கம் அமைக்கப்பட்டு பல மாதங்கள் கடந்த நிலையில், மக்களின் பொருளாதார இடர்பாடுகள் தணிந்து கொண்டிருக்கும் ஒரு சூழ்நிலையில் இன்றைய புத்தாண்டைக் கொண்டாடுகிறோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் முன்னெடுக்கும் சீர்திருத்த நடவடிக்கைகள் பொருளாதார மீட்சிக்கான நம்பிக்கையைத் தோற்றுவித்திருக்கின்றது. ஜனாதிபதியை பொறுத்தவரை, பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகளைத் தவிர வேறு எதுவும் தற்போதைக்கு தனது முன்னுரிமைக்குரிய விவகாரமாக இருக்கப்போவதில்லை என்று பிரகடனம் செய்திருக்கிறார்.

அதில் அவர் செலுத்தும் கருத்தூன்றிய கவனம் காரணமாக அவரது மதிப்பு அதிகரித்து, அவரை விட்டால் இன்று இலங்கையை மீட்க வேறு அரசியல் தலைவர் இல்லை என்று பலரும் பேசும்நிலை உருவாகியிருக்கிறது.

பொருளாதார சீர்திருத்தங்களில் காட்டுகின்ற அக்கறையை ரணில் விக்கிரமசிங்க மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பேணிப்பாதுகாப்பதில் காட்டுகின்றார் இல்லை என்று சமுதாயத்தில் பெருங்கவலை இருக்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மை.

எதிரணி அரசியல் கட்சிகளையும் அரவணைத்துக்கொண்டு தனது சீர்திருத்தக் கொள்கைகளை முன்னெடுக்க விரும்புவதாக அவர் தொடக்கத்தில் காட்டிக்கொண்டாலும், நாளடைவில் அவர் முன்னெடுத்த பல நடவடிக்கைகள், குறிப்பாக மக்கள் கிளர்ச்சியின் முன்னரங்கத்தில் நின்ற சமூக, அரசியல் செயற்பாட்டாளர்கள் மீதான அடக்குமுறை மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு செய்யும் இடையூறுகள் போன்றவை காரணமாக எதிர்பார்த்த ஒத்துழைப்பைப் பெறமுடியவில்லை. அதே நிலைமையே தொடருகிறது.

அரசியல் வேறுபாடுகளை மறந்து பொருளாதார மீட்சிக்கு கட்சிகளும் தலைவர்களும் ஒத்துழைக்கவேண்டும் என்று மக்கள் விரும்பினாலும், காலங்காலமாக எமது அரசியல் சமுதாயத்தில் வேரூன்றிவிட்ட கட்சி அரசியல் வன்மக் கலாசாரத்திலிருந்து விடுபடுவது என்பது ஒன்றும் எளிதான காரியமல்ல. அவ்வாறு அதிலிருந்து விடுபடக்கூடிய அளவுக்கு நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை கொடுக்கின்ற தொலைநோக்குடைய அரசியல் தலைவர்கள் எம் மத்தியில் இல்லை என்பது துரதிர்ஷ்டவசமானது.

கடந்த வருடத்தைய மக்கள் கிளர்ச்சி புதியதொரு அரசியல் கலாசாரத்தையும் முறைமை மாற்றத்தையும் பிரதான முழக்கமாக கொண்டிருந்தது. ஆனால், அந்தக் கிளர்ச்சி ஒடுக்கப்பட்ட பிறகு அவையெல்லாம் மறக்கப்பட்ட விடயங்களாகி, அரசில்வாதிகள் வழமை நிலைக்குத் திரும்பிவிட்டதையே காணக்கூடியதாக இருக்கிறது.

அரசாங்கத்தின் அரசியல்வாதிகள் பலரையும் பொறுத்தவரை பொருளாதாரப் போரில் வெற்றிபெற்றுவிட்டதாக ஒரு மெத்தனமான உணர்வைக் கொண்டிருக்கிறார்கள் போன்று தோன்றுகிறது.

ஆனால், சனத்தொகையின் பெரும்பகுதியினரைப் பொறுத்தவரை, பொருளாதார இடர்ப்பாடுகளில் ஏற்பட்டதாக தோன்றுகின்ற தணிவு அவர்களின் வீட்டு வாசற்படியை இன்னமும் எட்டவில்லை. மாகாணங்களில் இருந்து வருகின்ற செய்திகள் இதனைத் தெளிவாக உணர்த்துகின்றன. பொருளாதார நெருக்கடி கணிசமான எண்ணிக்கையான மக்களை வறுமைக் கோட்டுக்கு கீழ் விட்டது. சிறுவர்கள் மத்தியிலான மந்தபோசாக்கை பொறுத்தவரை தெற்காசியாவில் இலங்கை ஆப்கானிஸ்தானுக்கே கூட்டாளியாக இருக்கிறது.

பொருளாதார நிலைவரத்தில் மேம்பாடு என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்படக்கூடிய மாற்றத்தில் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும். ஐக்கிய நாடுகளின் பல்வேறு அமைப்புகள் தொடர்ச்சியாக வெளியிட்டுவருகின்ற புள்ளி விபரங்கள் இலங்கையின் சனத்தொகையில் மூனறில் ஒரு பங்கினர் அவசர மனிதாபிமான உதவிகளை வேண்டிநிற்கிறார்கள் என்று கூறுகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருப்பதைப் போன்று சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி கிடைக்கப் பெற்றிருப்பதும் இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு ஒத்துழைப்பதற்கு கடன் வழங்கும் நாடுகள் வழங்கிய உறுதிமொழிகளும் அவற்றைத் தொடர்ந்து அரசாங்கம் முன்னெடுக்கும் சீர்திருத்தங்களும் நீண்டதொரு பயணத்தின் தொடக்கமேயாகும். நீண்ட பயணத்தில் எதிரணி அரசியல் கட்சிகள் மனமுவந்து ஒத்துழைக்க முன்வரக்கூடியதாக ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் செயற்பாடுகள் அமையவேண்டும். எதிரணிக் கட்சிகளை பலவீனப்படுத்தும் நோக்கிலான அரசியல் வியூகங்களுக்கு பொருளாதார மீட்சியை ஒரு வசதியான சாட்டாக பயன்படுத்தக்கூடாது.

அதேவேளை, எதிரணித் தலைவர்களும் இன்றைய நிலையில், மக்களின் உண்மையான எதிர்பார்ப்புகளை அடையாளம் கண்டு செயற்படமுன் வரவேண்டும். இந்த தலைவர்களும் அவர்களின் கட்சிகளும் அரசாங்கத்துக்கு விமர்சன அடிப்படையிலான ஒத்துழைப்பை வழங்கி பொருளாதார மீட்சிக்கான பயணத்தை இலகுவாக்கினால் அதனால் நாட்டுக்கும் மக்களுக்கும் கிடைக்கக்கூடிய பயன்களுக்கு அவர்களும் உரிமை கோர முடியும். அந்தப் பயன்களுக்கு ஏகபோக உரிமையை அரசாங்கம் கோருவதை தடுக்கவும் முடியும்.

இதன் மூலம் பொருளாதார நெருக்கடிக்கு மாத்திரமல்ல, இனப்பிரச்சினை உட்பட நாடு எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் நாளடைவில் கருத்தொருமிப்பின் அடிப்படையில் தீர்வுகளைக் காண்பதற்கு அனுகூலமான சூழ்நிலையை தோற்றுவிக்க முடியும்.

இதை புத்தாண்டு வேண்டுகோளாக அரசியல் சமுதாயத்திடம் முன்வைப்பதுடன், மக்களுக்கும் 'தமிழன்' மனம் நிறைந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறான். புத்தாண்டில் இடர்கள் அகன்று ஒளிமயமான எதிர்காலம் பிறக்கும் என்ற நம்பிக்கையுடன் அதை வரவேற்றுக் கொண்டாடுவோம்.

மன அழுத்தத்தை குறைக்கும் வழிகள்!

இன்றைய நவீன உலகில் மனிதனுக்கு ஏராளமான வசதிகள் கிடைக்கின்றன. இருப்பினும், பெரும்பாலானோர் அமைதியாகவும் நிம்மதியாகவும் இருப்பதாகவே தெரியவில்லை. இவர்களுக்கு எப்போதும் மன அழுத்தம்தான். அதிலும், இவர்களுக்கு அதிக ஸ்ட்ரெஸ் ஏற்படுவதே பிறர் தன்னைப் பற்றி பேசுவதையும் தன்னைப் பற்றிய கருத்து கொள்வதைப் பற்றியும்தான். பெரும்பாலானோர் தமது வாழ்க்கையை தமக்காக வாழ்வதை மறந்துவிட்டனர். இது அதிக ஸ்ட்ரெஸ். இது உருவானால் உடலில் இடிபோல் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

பெரும்பாலானோருக்கு ஒரு பொதுவான ஆசை இருக்கின்றது. அனைவரும் தம்மை மதிக்க வேண்டும், ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசை இருக்கின்றது. உறவுகள், நட்புகள் தேவையாக இருக்கின்றன. இதன் காரணமாகவே பிறர் பேச்சுக்கும் கருத்துக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

ஆனால், இப்படி தேவையற்ற முக்கியத்துவம் இல்லாத, உண்மை இல்லாத பேச்சுக்கும் கருத்துக்கும் இடம் தந்தால் உடல், மனம், வாழ்வு அனைத்துமே வீணாகிவிடும். இதிலிருந்து தம்மை காத்துக் கொள்ள சில குறிப்புகளைப் பார்ப்போம்.

ஒருவருக்கு பல பிரிவுகளில் விருப்பம் இருக்கலாம். நிறைய பிரயாணம் செய்ய ஆசை இருக்கலாம். ஓவியங்கள் வரைய ஆசை இருக்கலாம். இப்படி மனதில் பல ஆசைகள் இருக்கலாம். ஆனால், அனைத்திலும் ஈடுகொடுத்து செல்ல நம்மால் இயலாது.

பார்ப்பவர்களும் எதிலும் தேறவில்லை என்று கேலி பேசுவார்கள். எனவே, முதலில் ஒருவர் தனது அனைத்து ஆசைகளையும் குறிக்கோள்களயும் எழுத வேண்டும். பின்னர் அதில் எதில் அவருக்கு தீவிரம் அதிகம் இருக்கின்றது என முறைப்படுத்த வேண்டும். அதில் முதல் மூன்றில் மட்டுமே அவரது முழு கவனமும் இருக்க வேண்டும். மற்றவை அவருக்குப் பிடித்தவை என்ற பட்டியலில் இருக்கலாம். இப்படி முழு கவனத்துடன் ஒன்றைச் செய்யும்போது பிறர் குற்றம் சொல்ல, கேலி செய்ய முடியாது.

இந்தக் கருத்து ஒருவர் தன்னை நெறிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற முயற்சியிலேயே கூறப்பட்டுள்ளது.

ஒருவருக்கு அவர் வாழ்நாளில் பாடசாலைக் காலம் முதல் நடப்புக் காலம் வரை பெரும்பாலான நபர்களை தெரிந்திருக்க வாய்ப்புகள் அதிகம். அதற்காக அனைவரும் ஒருவரின் வாழ்க்கை முறையில் குறுக்கிட முடியுமா என்ன? எனவே, ஒருவர் தான் மதிக்கும் சில நபர்களின் கருத்துகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அப்போதுதான் வாழ்வும் நன்றாக இருக்கும். மனமும் நிம்மதியாக இருக்கும்.

நாம் தொடர்பில் இருக்கும் நபர்கள் ஆக்கபூர்வமான சக்தி, பேச்சு, எண்ணம், செயல் கொண்டவர்களாக இருக்க வேண்டும். இந்த குணங்கள் இல்லாதவரோடு நாம் பக்கத்தில் கூட இருக்கக் கூடாது.

சிலர் மற்றவர்களது வாழ்க்கையில் எப்போது, என்ன செய்ய வேண்டும் என்று ஆக்கிரமிப்பு செய்பவர்களாக இருப்பார்கள். இவர்கள் நச்சுத்தன்மை கொண்டவர்கள். இவர்களிடமிருந்து தள்ளி ஓடிப்போய் விட வேண்டும்.

பத்து நபர்கள் ஒருவரிடம் நன்கு பேசினாலும் ஒரு நபர் மட்டும் அவரைக் குறை கூறிப் பேசுவார். இது உலகத்தின் போக்காகி விட்டது. பத்து பேர் பாராட்டுதலை விட்டு ஒருவர் தேவையற்று சொல்லும் குறையை எண்ணி வேதனையில் மூழ்கினால் மன நிம்மதி போய்விடும்.

சிரித்து, மகிழ்ச்சியாக இருக்கப் பழக வேண்டும். ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். நமது செயல், நமது பேச்சு இவை மிக முறையாக இருந்தாலும் அனைவரையும் திருப்திப் படுத்துவது என்பது மிகக் கடினமான ஒன்று.

(05 ஆம் பக்கம் பார்க்க...)

இன்றைய நாளில்...

- 1919 – ஜலியான்வாலா பாக் படுகொலை: அமிர்தசரில் ஜலியான்வாலா பாக் திடலில் கூடியிருந்த மக்களை நோக்கி பிரித்தானியப் படையினர் சுட்டதில் 379 பேர் கொல்லப்பட்டனர். 1200 பேர் காயமடைந்தனர்.
- 1930 – மகாத்மா காந்தியின் உப்புச் சத்தியாக்கிரகத்திற்கு ஆதரவாக தென்னிந்தியாவில் ராஜாஜி தலைமையில் பாதயாத்திரை (வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகம்) தொடங்கப்பட்டது.
- 1953 – இயன் பிளெமிங் தனது முதலாவது ஜேம்ஸ் பொண்ட் புதினத்தை வெளியிட்டார்.
- 1954 – காமராஜர் சென்னை மாநிலத்தின் முதல்வரானார்.
- 1970 – நிலவை நோக்கிச் சென்று கொண்டிருந்த அப்பல்லோ-13 விண்கலத்தில் ஒட்சிசன் தாங்கி வெடித்து பெரும் சேதம் ஏற்பட்டது.
- 1974 – ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது வணிக புவி நிலைத் துணைக்கோளான வெஸ்டார்-1 ஏவப்பட்டது.
- 1979 – இலங்கையில் சுயாதீன தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்டது.

நக்கல் நமசிவாயம்

தேர்தல் ஆணைக்குழு எண்டு இருக்கிற ஒண்டு தேர்தல் எப்ப நடத்தப்போறம் எண்டுதான் அறிவிக்கப் பார்க்கோணும்... ஆனால், இங்க இருக்கிற தேர்தல் ஆணைக்குழு தேர்தல நடத்தாமல் இருக்கிறதும் அதுக்கான காரணங்களையுமே அறிவிச்சுக் கொண்டிருக்குது பாருங்கோ..!

ஆளுமை மிக்க முஸ்லிம்களின் தலைவன் ஹக்கீம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் சிரேஷ்ட அரசியல்வாதியுமான ரவூப் ஹக்கீமுக்கு 63ஆவது அகவை இன்று

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் விவகாரங்களில் சமகாலத்தில் பாராட்டுவதாக இருந்தாலும், விமர்சிப்பதாக இருந்தாலும் அதிகமாக உச்சரிக்கப்படும் நாமமாக ரவூப் ஹக்கீம் என்பதைப் பார்க்கிறோம். இந்த நாமத்திற்குச் சொந்தக்காரரான ரவூப் ஹக்கீமுடைய ஆளுமை விருத்தியில் பங்களிப்புச் செய்த காரணங்களை சற்று ஆராய்ந்து பார்ப்போம். முஸ்லிம் அரசியலில் தவிர்க்க முடியாத ஒரு சக்தியாகத் திகழும் ரவூப் ஹக்கீம், தன்னகத்தே பல ஆளுமைப் பண்புகளைக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது. இவ்வாறான ஆளுமைப் பண்புகளை வளர்த்துக் கொள்வதில் ரவூப் ஹக்கீமுக்கு உறுதுணையாக அவரின் குடும்ப கல்விப் பாரம்பரியம் இருந்தைக் காண முடியும். ரவூப் ஹக்கீம் வசீகரமான தோற்றமுடையவர். புன்னகையோடு பலரோடும் பழகக்கூடியவர். சரளமாக மும்மொழிகளிலும் பேசக்கூடியவர்.

குறிப்பாக, இலங்கைத் திருநாட்டின் எப்பாகத்திலுமுள்ள மக்களின் பேச்சு வழக்கில் அந்தப் பிரதேசத்து மக்களைப் போல் மொழியை கையாளும் தன்மை கொண்டவர்.

குறித்த தன்மை இலங்கையில் மாத்திரமல்லாது, இந்தியாவின் தமிழ்நாட்டில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளில் அதிதியாகக் கலந்துகொண்டு அவர்களின் மொழியை அழகாக கையாண்டு பேசுவது அங்கிருக்கு அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியதையும் பல பிரபலங்கள் இவர் இலங்கையில் பிறந்தவரா அல்லது இந்தியாவில் பிறந்தவரா என வியந்து பேசியதையும் குறிப்பிடலாம்.

இவர் சர்வதேச ரீதியாக நன்கறியப்பட்ட ஒரு தலைவராவார்.

கவி இயற்றும் கவிஞன். கவி பாடும் வல்லவன். இந்த ஆளுமையை யாவரும் வியந்து பாராட்டுவதுமுண்டு. குறுகிய நேரத்திற்குள், வேலைப்பளுக்களுக்கு மத்தியிலும் பல கவிகளை இயற்றி பாராட்டுகளைப் பெற்ற சம்பவங்களுமுண்டு. அழகு சுந்தர மொழியான தமிழை அழகாக கையாண்டு அழகு கவி இயற்றி, அந்தந்த பிராந்திய பேச்சு வழக்கு மொழியில் கவி பாடும் அழகு தனிச்சிறப்பாகும்.

அரசியல்வாதியாக அறியப்பட்ட ரவூப் ஹக்கீம் சிறந்த பேச்சாளர் என்பதுடன், எழுத்தாளரும் கூட. அதிக வாசிப்புப் பழக்கமுடையவராக ஆரம்பம் காலந்தொட்டு இன்றுவரை காணப்படுகிறார். இதன் காரணமாக தனது பேச்சுகளில் புதுமையான தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்திப் பேசி பலரையும் சொல்லுக்கு அர்த்தம் தேடி அகராதி படிக்க வைத்தவர். எழுத்துத்துறையில் கவிதைகள் மாத்திரமின்றி, முஸ்லிம் சமூகம் தொடர்பில் நூலொன்றையும் வெளியிட்டிருந்தார்.

சட்டத்தரணியாக நீண்டகாலம் பணி செய்வதற்கான வாய்ப்புகள் அரசியலுக்குள் பிரவேசித்ததால் கிடைக்காது போனாலும், அவர் திறமையான சட்டத்தரணி என்பதற்கு பல சான்றுகள் உண்டு.

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி இலங்கை வங்கிக்கொள்ளை வழக்கில் வாதாடி தனது தரப்பிற்கு அவர் வெற்றியைப் பெற்றுக் கொடுத்ததமை குறிப்பிடத்தக்கது. மேலும், அரசியலில் செயற்பாடுகள், வேலைப் பளுக்களுக்கு மத்தியில் சட்டக்கற்கையின் மீது தனக்கிருந்த ஆர்வத்தினால் சட்டமுதுமாணி கற்கையை கொழும்பு பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து, சட்டமுதுமாணியாக வெளிவந்திருக்கிறார்.

அரசியல் பிரவேசம் என்பது தனது ஆளுமைகளைக் கண்டு தன்னை அரசியலுக்குள் அழைத்த முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தலைவர் மர்ஹூம் அஷ்ரஃப்போடு ஆரம்பமாகி, அன்னாரின் அகால மரணத்திற்குப் பின்னால் ஏற்பட்ட நெருக்கடியான சூழ்நிலையில் முஸ்லிம் சமூகத்தை வழிநடத்தும் பொறுப்பையும் முஸ்லிம் காங்கிரஸின் தலைமையைப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார்.

அன்று தொடர்க்கம் இன்று வரை அரசியலில் ஒரு சமூகத்தின் தலைவனாக, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவராக, பாராளுமன்ற உறுப்பினராக, பொறுப்புள்ள அமைச்சுகளின் அமைச்சராக பல்வேறு பாத்திரங்களை ஏற்று தன்னால் முடியுமான பங்களிப்புகளை நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் தான் சார்ந்த சமூகத்திற்கும் ஆற்றி வருகிறார்.



தாய்வழிப் பாட்டனாருடன்
ரவூப் ஹக்கீம் மற்றும் உறவினர்கள்

63ஆவது அகவையில் காலடியெடுத்து வைக்கும் ரவூப் ஹக்கீமின் உயரிய பண்புகள், திறமைகள், ஆளுமைகளை ரவூப் ஹக்கீம் தானாக விருத்தி செய்து கொண்டாரா அல்லது இவரின் குடும்ப பின்னணியின் தாக்கம் இவரை திறமையான, ஆளுமையுள்ளவராக மாற்றியதா என்பதை சற்று சுருக்கமாகப் பார்ப்போம். ஹபுகஸ்தலாவையில் வசித்து வந்த 'பதுறு மாலை' எனும் பதுர் சஹாபாக்களை பற்றிப் பாடிய உதுமாலெப்பை ஆலிம் புலவர் அரபுமொழியில் நல்ல பாண்டித்தியம் பெற்றவர்.

இவர் ரவூப் ஹக்கீமின் தாய் வழிப்பாட்டனார். இவர் ஒரு சன்மார்க்கப் போதகராக சமூக விடயங்களில் அதிக அக்கறையோடு செயற்பட்டவர். அதற்கான சான்றுகளுமுள்ளன. சுமார் 40 வருடங்கள் மஸ்ஜிதுன்நூர் பள்ளிவாசலில் எவ்வித ஊதியமும் பெறாது இமாமாக இருந்து தொழுவித்தும் கதீபாக இருந்தும் குத்பா ஓதியுள்ளார்.

இவரின் மகள் ஹாஜரா, ரவூப் ஹக்கீமின் தாயாராவார். இவர் சிறந்த வாசிப்புப் பழக்கமுடையவர். தன் கணவர் ரவூப் எழுதிக்கொடுக்கும் தாலாட்டுப் பாடல்களை மனனம் செய்து தன் பிள்ளைகளுக்கு தனது இனிமையான குரலில் பாடக்கூடியவர். பிறருக்கு உதவும் உள்ளமுடையவர்.

ரவூப் ஹக்கீமின் தந்தை வழிப்பாட்டனார் சிங்கள மொழிப்பாடசாலைகளில் படிப்பித்து முஸ்லிம் அதிபராக கடமை புரிந்த நூர் முஹம்மது ஆவார். இவர் கலகெதர என்ற ஊரில் பிறந்தவர். இப்பிரதேசத்தின் முஸ்லிம்களின் பூர்வீகம் என்று பார்க்கும் போது பலவிடயங்களை அறிய முடிந்தது. இங்கு அரேபிய வியாபாரிகளின் வருகையோடு தொடர்புபட்ட பூர்வீகம் காணப்படுகிறது. அந்த முஸ்லிம் பூர்வீகத்தோடு தொடர்புடைய குடும்பமாக ரவூப் ஹக்கீமுடைய பாட்டனார் நூர் முஹம்மதுவின் குடும்பமும் உள்ளது.

சிங்கள அரசர்கள் ரவூப் ஹக்கீமின் பாட்டனாரின் குடும்பத்தைக் கௌரவிப்பதற்காக 'நாகஹதெனிய கெதர' எனும் பட்டமளித்து கௌரவித்தனர். நூர் முஹம்மதை மக்கள் சிங்கள மொழிப்பண்டிதர் எனவும் அழைத்தார்கள்.

தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் பாண்டித்தியமுடையவர். சிங்கள மொழியில் 'சத்திய ஆகமகுமக்த' என்ற நூலையும் தமிழில் 'இஸ்லாம் மார்க்க வினா விடை' என்ற நுலையும் வெளியிட்டார்.

சிங்கள பத்திரிகையில் இவர் 'தானயன் உதும தானய துகீ தானய' (தானத்தில் உயர்ந்தது பரம ஏழைகளுக்கு தானம் செய்வதே) என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை சிங்கள மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றிருந்தது. 'சமுபகார வர்ணனாவ' (கூட்டுறவு வர்ணனை) என்ற கவிதை நூலையும் அவர் எழுதியுள்ளார். இவ்வாறான பல்வேறு திறமைகளையும் ஆளுமையையும் கொண்ட நூர் முஹம்மதுவின் புதல்வர்தான் ரவூப் ஹக்கீமின் தந்தையார் ஆசிரியர் ரவூப் ஆவார்.

ஆசிரியராக, அதிபராக இருந்த போது சமூகப் பணிகளிலும் கல்விப்பணிகளிலும் அக்கறையோடு முடியுமானவரை பங்களிப்புச் செய்தவர். வாசிப்புப் பழக்கத்தில் அதிக ஆர்வம் கொண்டவர். ஆங்கிலம், சிங்களம், தமிழிலும் அதிகம் வாசிப்பவராகக் காணப்பட்டார்.

ரவூப் ஹக்கீமின் திறமை, ஆளுமைகளுக்குப் பின்னால் இவ்வாறான விசாலமானதொரு பாரம்பரியமான கல்விப் பின்புலம் காணப்படுவதைப் பார்க்கலாம். 'சட்டியில் இருப்பது தானே அகப்பையில் வரும்' என்பார்கள். அதேபோன்று தான் ரவூப் ஹக்கீமிடம் காணப்படும் வசீகரத் தோற்றம், திறமை, ஆளுமை, சாணக்கியம், கவிதை, பேச்சு, எழுத்து, மொழி ஆற்றல் போன்றவைகள் அவரின் பரம்பரையினூடாகப் பெற்று அதனை மேலும் மெருகூட்டிக் கொண்டதாகும்.

சன்மார்க்க, அறிவு ரீதியாக மேம்பட்ட இஸ்லாமிய பாரம்பரியத்தைக் கொண்டமைந்த குடும்பப் பின்னணியைக் கொண்டவராக ரவூப் ஹக்கீம் திகழ்கிறார்.

எம்.என்.எம்.யஸீர்
அறபாத் -ஓட்டமாவடி

சமுர்த்தி வங்கி ஊழியர்களின் தீர்மானம் அடிப்படையற்றது

15ஆம் திகதி சேவையில் ஈடுபட வேண்டியது அவசியம் என அரசாங்கம் வலியுறுத்து

பண்டிகைக் காலத்தில் அரச ஊழியர்கள் மக்களின் தேவைகளைப் புறக்கணிப்பது அடிப்படையற்றதாகும். சமுர்த்தி வங்கிகள் மக்களால் கட்டியெழுப்பப்பட்டவையாகும். ஆகவே, எதிர்வரும் 15ஆம் திகதி தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பது பொருத்தமற்ற விடயமாகும். அனைவரும் சேவைக்கு சமூகமளிக்க வேண்டியது அவசியமென்று இராஜாங்க அமைச்சர் அநுப பியும் பெஸ்குவல் தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் (11) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் - சிங்களப் புத்தாண்டு என்பது சகல இன மக்களையும் ஒன்றுதிரட்டும் பண்டிகையாகும். இது தேசிய பண்டிகையாகும். குறிப்பாக, இதில் கிராமிய மக்களே நேரடியாக தொடர்புபடுவார்கள். வடக்கு முதல் தெற்கு வரையிலான சகல மக்களும் ஒன்றிணைந்து கொண்டாடும் கலாசார பண்புமிக்க பண்டிகையாகவே இந்தப் புத்தாண்டு கருதப்படுகின்றது.

அதேபோன்று, சமுர்த்தி வங்கியை எடுத்துக் கொண்டால் , ஏனைய வங்கிகளைப்போன்ற கட்டமைப்பைக்கொண்டதல்ல. சமுர்த்தி வங்கி கட்டமைப்பை ஊக்குவிப்பதற்காக சமூக நிதி முதலீட்டினூடாக கட்டியெழுப்பப்படுகிறது. வங்கி மாத்திரமல்ல, இந்த வங்கியின் பங்குதாரர்களாக இருப்பவர்களின் குடும்பங்களும் மேம்படுத்தப்படுகின்றது. சமுர்த்தி அங்கத்தவர்கள் மாத்திரமல்ல, எந்தவொரு நபரும் தமது சுயதொழிலுக்காகவோ அல்லது வேறு கடமைகளுக்காகவோ நிதியை கடனாக பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

இவ்வாறான கொடுக்கல் வாங்கல்களினூடாகவே வங்கிக்கு இலாபம் கிடைக்கிறது. அந்த இலாபத்தில் ஒரு பகுதியையே கிராம மக்களுக்கு வழங்குகிறோம். நாடு முழுவதிலும் 1,089 புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அதற்காக, தேவையான நிதியை சமுர்த்தி வங்கியினூடாக பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். ஆகவே, ஒருபோதும் இந்த வேலைத்திட்டத்தை யாராலும் விமர்சிக்க முடியாது. மக்களின் நிதி மக்களால் நடைமுறைப்படுத்தப்படும் நிதியை விட பலமடங்கு உழைக்கப்படுகிறது.

இதனை தவறு என்கிறார்கள் என்றால் சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்கள் தமக்கு சம்பளமும் வேண்டாம் என்று கூற வேண்டும். சமுர்த்தி முகாமையாளர்கள் தமது சம்பளத்தை 50 சதவீதத்தால் குறைக்க வேண்டும் என்றும் கூற வேண்டும். மக்களுக்கு நிதி கொடுப்பதற்கு எதிர்க்கிறார்கள் என்றால், தாம் சுயாதீனமாக முன்வந்து அவர்களுக்காக கொடுப்பனவுகளை குறைத்து நாட்டின் நிதியை சேமித்துக் கொள்ளுமாறு கூற வேண்டும்.

குறிப்பாக, சமுர்த்தி ஊழியர்களின் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப் பட்டுள்ளது.

அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை பெற்றுக்கொடுக்கும் கலந்துரையாடல்கள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன. நான்கு அமைச்சரவைப் பத்திரங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், தமக்கு பிரச்சினைகள் அதிகமிருப்பதாக கூறுவது அடிப்படையற்ற விடயமாகும்.

இந்தப் பண்டிகைக் காலப்பகுதியில் சகல தொழிற்சங்கங்கள், சமுர்த்தி முகாமையாளர்களில் ஒருசிலரே இந்த தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இது தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கக்கூடிய சந்தர்ப்பமும் இல்லை. ஆகவே, 15ஆம் திகதி தொழிற்சங்க நடவடிக்கை என்பது அடிப்படையற்ற அறிவிப்பாகும். சகலரும் கடமைக்கு வரவேண்டியது அவசியமாகும்.

சமுர்த்தி வங்கிகளை மக்களே கட்டியெழுப்பியுள்ளனர். ஆகவே, அவர்களுக்காக பண்டிகைக் காலத்திலும் சேவையை வழங்க வேண்டியது ஊழியர்களின் கடமையாகும். அதேபோன்று, ஜனாதிபதின் பணிப்புரைக்கமைய நாடு தழுவிய ரீதியில் அரிசி பகிர்ந்தளிக்கும் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம், பிரதேச செயலகம், மாவட்ட செயலகம் உள்ளிட்ட பிரிவினரால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சமய போதகருக்கு எதிரான அச்சுவேலியில் போராட்டம் நிறைவு



அரசாங்கத்திற்கு சொந்தமான கிராமிய சிறு கைத்தொழில் திணைக்களத்தின் மாகாண மத்திய அரசிற்கு உரித்தான கட்டடத்தில் சமய ஆராதனைகளில் ஈடுபட்டுவந்த போதகர் ஒருவருக்கு எதிராக நேற்று அச்சுவேலியில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த போதகரின் ஆலயத்தில் மாலை வேளை ஆராதனை இடம்பெற்றபோது ஆலயத்திற்கு கல்லால் வீசினர் எனக்கூறி அருகிலுள்ள வங்கி முகாமையாளரைத் தாக்கி கொலை முயற்சியை மேற்கொண்டனர்.

இவ்வாறு தாக்கப்பட்டமையை தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்யப்பட்டது. அது குறித்த செய்தி உதயன் பத்திரிகையில் பிரசுரமானது.

இதனையடுத்து உதயன் பத்திரிகை போதகரின் அடாவடித்தனம் தொடர்பாக செய்தி வெளியிட்டுள்ளது என்பதனை கண்டித்து உதயன் நிறுவனத்திற்கு சென்ற 45 பேருக்கு மேற்பட்ட பணியாளர்களை அச்சுறுத்தியுள்ளது.

குறித்த விடயங்களை கண்டித்து இன்றைய தினம் சிவசேனை அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து போதகரை மதஸ்தலத்திலிருந்து வெளியேறுமாறு தெரிவித்து போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

இதனையடுத்து நேற்று, போராட்டத்தில் ஈடுபட்டவர்களை ஆளுநர் அலுவலகத்தின் செயலாளர் உள்ளிட்டோர் வருகை தந்து நிலமைகளை ஆராய்ந்தனர். மேலும் சபை அமைந்துள்ள குறித்த இடத்திற்குச் சென்றும் நிலைமைகளைக் கேட்டறிந்தனர். அதனைத் தொடர்ந்து குறித்த விடயம் தொடர்பாக ஆளுநருக்கு அறிக்கை வழங்கி நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என தெரிவித்தனர்.

அதாவது குறித்த அரச கட்டிடத்தினை விடுவிப்பதற்காக நடவடிக்கையினையும் தாக்கப்பட்ட பெண்ணுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதனையும் மேற்கொள்வதாக அதிகாரிகள் குறிப்பிட்டனர். இதனைத் தொடர்ந்து போராட்டக்காரர்கள் அவ்விடத்தை விட்டு விலகிச் சென்றனர்.

பொலிசார் குறித்த விடயம் தொடர்பாக உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆளுநரின் செயலாளரிடம் சுட்டிக்காட்டினர்.

அக்கராயன் கரும்பு தோட்டக் காணிகளை மக்களுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானம்

கிளிநொச்சி, அக்கராயன் பகுதியில் இருக்கின்ற கரும்பு தோட்டக் காணிகளை பிரதேச மக்களுக்கும் நாட்டின் பொருளாதாரத்திற்கும் பயன்படும் வகையில் பயன்படுத்துவதற்கான தீர்மானம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று (12) இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே குறித்த தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறித்த காணியில் கரும்புச்செய்கையை மேற்கொள்வதற்கு தனியார் தொழில் முயற்சியாளர் ஒருவர் ஆர்வம் செலுத்திவருகின்ற நிலையில், சுமார் 10 ஏக்கர் காணியை குறித்த தொழில் முயற்சியாளருக்கு நீண்ட காலக் குத்தகைக்கு வழங்குவதற்கும், மூன்று ஏக்கர் காணியை கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்திற்கும் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பயிர்ச்செய்கைகள் மேற்கொள்வதற்குப் பொருத்தமான 146 ஏக்கர் காணி களை குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த காணியற்ற மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் அக்கராயன் பிரதேச சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பரந்தன் புகையிரத நிலையத்தில் குண்டர்கள் அட்டகாசம்

பரந்தன் புகையிரத நிலையத்திற்குள் புகுந்த குண்டர்களின் தாக்குதல் காரணமாக ஊழியர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், உடமைகளுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரந்தன் புகையிரத நிலைய பகுதியில் நேற்று மாலை மதுபானம் அருந்திய குழுவினரிடம் அப்பகுதியில் மதுபானம் அருந்த வேண்டாம் என ஊழியர்களால் கூறப்பட்டுள்ளது.

இதனால் ஆத்திரமடைந்த குண்டர் கும்பல் பரந்தன் ரயில் நிலைய ஊழியர்களைத் தாக்கி காயப்படுத்தியதுடன், புகையிரத நிலைய உடைமைகளையும் சேதப்படுத்தியுள்ளனர்.

சந்தேகநபர்களை கைதுசெய்ய விசேட பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தில் புகையிரத நிலைய அதிபர் உட்பட இருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பெண்ணொருவர் தூக்கிட்டுத் தற்கொலை

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மிருசுவில் பகுதியில் பெண்ணொருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

அவர் தனது வீட்டின் மேல்மாடியில் தூக்கிட்டு உயிருக்குப் போராடிய நிலையில் உறவினர்கள் அவரை மீட்டு வைத்தியசாலைக்கு அழைத்து வரும் வழியிலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் எழுதுமட்டுவாழ் தெற்கு மிருசுவில் பகுதியைச் சேர்ந்த ஒன்றரை வயதுக் குழந்தையின் தாயாரான 31வயதான இளம பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

பெருந்தோட்டப் பகுதிகளில் முட்டைக்குத் தட்டுப்பாடு

(தலவாக்கலை நிருபர்)

பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள தோட்டக் கடைகளுக்கு இறக்குமதி செய்யப்பட்ட இந்திய முட்டைகளை வழங்குவதற்கு அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மலையக தோட்டத் தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.

பெருந்தோட்டப் பகுதிகளில் முட்டைகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாக முட்டைகளை கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது இறக்குமதி செய்யப்படும் இந்திய முட்டைகள் பாவனைக்கு ஏற்றது என சுகாதார திணைக்களம் உறுதிசெய்துள்ளதால் அந்த முட்டைகளை பெருந்தோட்டங்களை சூழவுள்ள பகுதிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நாட்டில் முட்டை விலை அதிகரித்துள்ளதால், அவற்றை வாங்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதால், 35 ரூபாவுக்கு விற்கப்படும் இந்திய முட்டைகளை கொள்முதல் செய்ய பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள அலுவலர்களுக்கான இப்தார் நிகழ்வு நேற்று முன்தினம் (11) பணிப்பாளர் இஸட்.ஏ.எம்.பைசல் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது விசேட பேச்சாளராக மௌலவி ஸஹ்ரான் கலந்துகொண்டு நோன்பின் மகத்துவம் பற்றி உரையாற்றினார் *(படங்கள் - ஏ.எஸ்.எம்.ஜாவித்)*

சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் ஆலயத்தின் திருவிழாவை நடத்தக் கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்

சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவை நடத்துமாறு கோரி பக்தர்களால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று (12) முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தை முன்னெடுத்த பக்தர்கள் கருத்து தெரிவிக்கையில்,

தனிப்பட்ட காரணத்துக்காக ஒருசிலர் இந்த ஆலயத்தின் திருவிழாவைத் தடுக்கிறார்கள்.

இது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கும் உள்ளது. நீதிமன்ற வழக்கானது எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது. ஆனால், கொடியேற்றுமானது பதினெட்டாம் திகதி நடைபெற வேண்டும்.

ஆலயம் என்பது அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து ஒற்றுமையாக செயல்பட வைக்கும் ஒரு புனிதமான இடம். ஆலயத்தின் திருவிழாக்கள் மூலம்தான் சமூகத்தின் ஒற்றுமை மேலோங்கும்.

பல வரலாற்று அம்சங்களைக்கொண்ட இந்த கோவிலுக்கு நாட்டின் பல பாகங்களிலும் இருந்தும் பக்தர்கள் வருகை தருகின்றனர். அத்துடன், இந்த திருவிழாவில் கலந்துகொள்வதற்காக புலம்பெயர் தேசத்திலிருந்தும் பலர் வருகை தருவது வழமை.

இந்நிலையில், இந்தத் திருவிழாவை நிறுத்துவதால் பலர் பாதிக்கப்படுகின்றனர். ஆலயத்தின் திருவிழா சரியான நாட்களில் ஒழுங்காக நடைபெறாமல்விட்டால் அது அந்த கோவிலைச் சார்ந்த அனைத்து பக்தர்களுக்கும் ஒரு தீங்காகவே காணப்படும். அதனால் பாதிப்புகளும் ஏற்படும். எனவே, இந்தத் திருவிழாவினை வழமைபோல் நடத்துவதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் பங்களிக்க வேண்டும் - என்றனர்.

இந்தப் போராட்டத்தில் சைவ மதகுருக்கள், உள்நாட்டு, வெளிநாட்டு உறவுகள் என பலரும் கலந்துகொண்டனர்.

மன அழுத்தத்தை...

04 ஆம் பக்கத் தொடர்ச்சி

எதிலும் சொல்வது மிக சுலபம். கடைப் பிடிப்பதோ, செயல்படுத்துவதோ மிகக் கடினம். ஆக நாம் மிக உண்மையாய் செயல்படுத்திய பிறகு எதற்காக ஸ்ட்ரெஸாக வேண்டும்.

நம்மால் செய்யக்கூடியதை மட்டுமே செய்ய முடியும். மாற்றக்கூடியதை மட்டுமே மாற்ற முடியும். திருவள்ளுவர் கூறாத வாழ்க்கைநெறிகள் உள்ளதா என்ன? எத்தனை நபர்கள் திருக்குறளை படித்து தன் வாழ்வினை நெறிப்படுத்திக்கொண்டுள்ளார்கள்? ஆக எதனையும் முடிந்தளவு செய்து முடிவினை இறைவனிடம் அல்லது இயற்கையிடம் விட்டு விடுங்கள்.

நம்முடன் படித்தவர்கள், பழகியவர்கள் உயர்நிலையில் இருந்தால் அவர்களது பிள்ளைகள் உயர்ந்திருந்தால் மனதால் சுருண்டு விடுகின்றோம். வெட்கப்படுகின்றோம். மற்றவர்களோடு நம்மை ஒப்பிடும் பழக்கம் இருந்தால் - இது ஒன்று போதும். வாழ்வே அழிந்து விடும். இது தேவையா? நம் வாழ்க்கைக்கென ஒரு பாதை. அந்தப் பாதையில் நாம் ஒருவர் மட்டும்தான் பயணிக்க முடியும். இதனை எப்படி மற்றவரோடு ஒப்பிட முடியும்? இந்த குணம் உடனடியாக மாற வேண்டும்.

★ மற்றவர்கள் நம்மை எதற்காக பாராட்டுகின்றார்கள், வரவேற்கின்றார்கள் என்பதனை கவனித்து அந்தப் பண்புகளை நன்கு வளர்த்துக்கொள்ள வேண்டும். நம்மை மற்றவர் குறை கூறும்போது அதில் உண்மை இருந்தால் கண்டிப்பாய் அதனை திருத்திக் கொள்ள வேண்டும். அப்புறம் என்ன? வாழ்வு எளிதாகவும், இனிமையானதாகவும் ஆகிவிடும்.

★ உங்கள் உயரம், உங்கள் நிறம், உங்களின் தோற்றம் இவை உங்களுக்கு மட்டுமே உரித்தானதுபோல உங்கள் ஆவல், திறன், விருப்பம் இவை உங்களுக்கே உரித்தானது. இதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

★ வாழ்வில் எது இருக்கின்றதோ இல்லையோ ஒருவருக்கு நன்றி மறவாமை என்பது அவசியம் இருக்கவேண்டும். இந்தப் பழக்கத்தை அனைவரும் தம் இரத்தத்தில் பதிய வைக்கவேண்டியது அவசியமாகும்.

★ வாழ்வில் சிலர் பிறரை பாதிக்கும்படியான தவறுகளை செய்திருக்கலாம். அவரிடம் நேரே சென்று பேச முடியாவிட்டால் கூட, மனதார அவரிடம் கதறி மன்னிப்புக் கேளுங்கள். மேலும் உங்களையும் மன்னித்து விடுங்கள்.

அடிக்கடி உங்களை நீங்களே ஆய்வு செய்து பாருங்கள்.

நாம் ஏன் பிறர் நம்மைப் பற்றி நினைப்பதனையும், பேசுவதனையும் அதிக கவனம் கொடுக்கின்றோம். சமுதாய சூழ்நிலையில் ஒருவர் தானே தனித்து வாழ முடியாது. வீடோ, அலுவலகமோ மற்றவர்களின் கருத்திற்கும் கவனம் செலுத்த வேண்டும். உண்மைதான். அதற்காக வம்பு, புறம் பேசுதல், பொறுமை பேச்சு இவற்றால் ஒருவர் மனம் தளர்ந்துவிடக் கூடாது. இது ஓர் ஆய்வு கட்டுரையில் படித்தது. இங்கு பகிரப்பட்டுள்ளது.

நாள் முழுவதும் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும் என்று எல்லோரும்தான் நினைக்கின்றோம். சீக்கிரம் எழுந்திருக்க வேண்டும் என்று தினமும் நினைக்கின்றோம். நடக்கவில்லையே என அங்கலாய்ப்பவர் உண்டு.

அவர்கள் கீழ் கண்டவற்றின்படி முயன்று பார்க்கலாம். மனிதனுக்கு 7 மணிமுதல் 8 மணிநேர தூக்கம் போதும். அந்தத் தூக்கம் முழுமையாய் கிடைக்காத போதும், தூங்கும் நேரங்கள் அதாவது ஒரு நாள் 9 மணி, ஒருநாள் 12 மணி என நேரம் மாற்றி மாற்றி தூங்கச் செல்லும்போது மறுநாள் முழுவதும் மிகச் சோர்வாக இருக்கின்றனர். சிலர் கும்பகர்ணனைபோல் 10 மணிநேரம் கூட தூங்குவார்கள்.

இவர்கள் அதிக மனச்சோர்வு உடையவர்களாக இருப்பார்கள்.

மறதி அதிகம் இருக்கும்.

எப்போதும் சோர்வாக இருப்பார்கள்.

சீக்கிரம் நோயாளியாக ஆகிவிடுவார்கள்.

இவர்கள் தனது தூங்கும் நேரத்தினை தானே முயன்று சரிசெய்துகொள்ள வேண்டும்.

தூங்கச் செல்வதற்கு 3 மணிநேரத்திற்கு முன்னால் இரவு உணவை முடித்துவிட வேண்டும்.

இரவு, நேரம் சென்று உண்பதும், உண்ட 10 நிமிடத்திற்குள் படுத்து விடுவதும் உடலுக்கு மனிதன் செய்யும் மிகப்பெரிய தவறு.

செரிமானத்திற்கு என்று நேரம் கொடுக்க வேண்டும். அப்போதுதான் சீக்கிரம் நல்ல தூக்கம் வரும். நிறைந்த உணவுடன் படுப்பவர்களுக்கு முதல் பிரச்சினையே செரிமானக் கோளாறும் தூக்கமின்மையும் தான்.

இரவு உணவை சீக்கிரம் உட்கொள்பவர்களுக்கு நெஞ்நெரிச்சல், அசிடிடி பிரச்சினைகள் இருக்காது.

உடல் ஆரோக்கியம் கூடும்.

வயிறு பொருமல் சத்தம் இருக்காது.

காலையில் சில உடற்பயிற்சிகள் அவசியம் தேவை.

20 நிமிட நடை பயிற்சி மற்றும் வயது, உழைப்பு, ஆரோக்கித்திற்கேற்ப சில உடற்பயிற்சிகள் கண்டிப்பாக அவசியமாகும்.

காலையில் எழுந்து பல் தேய்த்தவுடன் ஒரு கிளாஸ் தண்ணீர் அருந்துங்கள். 10 நிமிடங்கள் படியுங்கள் அல்லது எழுதுங்கள்.

முதல் நாளே மறுநாள் காலைக்கான வேலைகளை எழுதி வைத்துக்கொள்ளுங்கள். எடுத்து வைத்துக்கொள்ளுங்கள்.

பிறகு என்ன? நாள்பூராவும் நீங்கள் சுறுசுறுப்பாக இருப்பீர்கள்.

மேற்கூறப்பட்டவை ஆய்வு மட்டுமல்ல, பலரின் அனுபவ கருத்துகளுமாகும்.

ஸ்ட்ரெஸ் இல்லாமல் இருக்க, நாமும் சில பழக்கங்களை நம் இரத்தத்தில் செலுத்தி விட வேண்டும்.

நாம் முன்னேற வேண்டும், முயற்சி செய்ய வேண்டும் என்ற உந்துதல் வாழ்க்கைக்கு அவசியம்.

நம்மை பிய்த்து போட்டுக்கொண்டு பிறரை நம்பச் செய்யவேண்டிய, உணரச் செய்யவேண்டிய அவசியம் இல்லை. நாம் உண்மையாய் இருந்தால் உயர் சக்தி அதனை அவர்களுக்கு உணர்த்திவிடும்.

மதியாதார் தலைவாசல் மிதியாதே என்று சொல்வார்கள். பிறர் நம்மை மதிப்பு குறைவாக மரியாதை குறைவாக நடத்த நீங்களே தலையை கொண்டு நீட்டக்கூடாது.

முதுகு எலும்பு நேராக, தலையை தொய்வில்லாது நேராக நின்று அளவாக, கருத்தாக பேசப் பழகுங்கள்.

ஒருமுறை ஒருவர் ஒரு சொல்லில் அல்லது ஒரு ரூபாவில் ஏமாற்றி இருந்தால் கூட மனதில் அவரை வெகு தொலைவு தள்ளி நிறுத்திவிடுங்கள்.

எதனை பேசுவதற்கு முன்னரும் 1 அல்லது 2 நொடிகள் அமைதி கொள்ளுங்கள். இது உங்களை சரியான கருத்தான வார்த்தைகளை பேச வைக்கும். சுத்தமான, இஸ்திரி செய்யப்பட்ட உடைகளை உடுத்துங்கள்.

அழையாத இடத்திற்கு செல்லக் கூடாது.

எந்த இடத்திலும் யாரிடமும் கை நீட்டி கேட்காதிருக்க வேண்டும்.

செய்வோமா? செய்வோமே!

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.04.11
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5087
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 15,774,263.00
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 6 4 2 5 0 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3329
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 96,182,215.44
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 19 36 57 70

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1542
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,113,367.20
வெற்றி இலக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 1 7 2 5 8 6

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1117
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 86,089,681.60
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 20 27 36 65

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 396
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,665,100.16
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 03 22 49 60
விசேட இலக்கினம் விருச்சிகம்

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1435
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 314,469,670.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து N
சுப்பர் இலக்கம் 04
வெற்றி இலக்கங்கள் 22 46 49 72

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி லங்கா சூரியசக்தி சங்கத்தினரால் ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு

(மாளிகைக்காடு செய்தியாளர், பாறுக் ஷிஹான்)

லங்கா சூரியசக்தி சங்கத்தின் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டமொன்று புதன்கிழமை (12) இலங்கை மின்சார சபை கல்முனை காரியாலய முன்றலில் இடம்பெற்றது.

Roof top Solar உற்பத்தியாளர்களின் கொடுப்பனவுகளின் நீண்டகால நிலுவை, புதிய கொள்வனவு விலை மாற்றம் மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்தும், இலங்கையில் அதிகமாக சூரியசக்தி மின்சாரத்தை உற்பத்திசெய்யும் நிலையோன்ற சக்தி உருவாக்க அபிவிருத்தித் திட்டத்தில் பங்குதாரர்களாக உள்ள அவர்கள் தற்காலத்தில் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகளை கவனத்திற்கொள்ளுமாறும் தெரிவித்தும் குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

குறிப்பாக, கல்முனை பிராந்தியத்தில் மாத்திரம் சுமார் 13 மெகாவோல்ட் அதிகமாக இலங்கை மின்சார சபைக்கு இந்த சங்க உறுப்பினர்கள் ஊடாக மின்சார உற்பத்திசெய்யப்பட்டு வழங்கப்படுகின்றது. அதேபோல் ஒவ்வொரு மாதமும் இலங்கை மின்சார சபையிடமிருந்து 40 மில்லியனுக்கும் அதிகமான ரூபாவை ஒதுக்க வேண்டிய தேவையும் உள்ளது.

மேலும் முழு கிழக்கு மாகாணத்துக்கும் ஒவ்வொரு மாதமும் 70 மில்லியனுக்கு மேல் இலங்கை மின்சார சபை செலுத்த வேண்டியிருக்கின்றது. தற்போது இலங்கை மின்சார சபை தமது கட்டணத்தினை உச்சமாக சீரமைத்துள்ள இந்தத் தருணத்தில் சேவை வழங்குனர்களாகிய இவர்களது பிரச்சினைகளையும் நாட்டில் காணப்படுகின்ற அதிகரித்த பணவீக்கம் மற்றும் பொருட் செலவுகள், பராமரிப்பு செலவுகளையும் கருத்திற்கொண்டு பல்வேறு கோரிக்கைகளை இவர்கள் முன்வைத்தனர்.

ஒன்பது மாதங்களுக்கும் மேலாக நிலுவையில் உள்ள Roof top Solar உரிய கொடுப்பனவினை மேலும் தாமதமின்றி இலங்கை மின்சார சபை முன்னுரிமைப்படுத்தி வழங்குதல், தற்போதுள்ள அதிகரித்த பணவீக்கம் மற்றும் பராமரிப்பு செலவுகள் காரணமாக இருக்கின்ற மிகப்பெரிய விலையேற்றத்திற்கு சமாந்தரமாக தற்போது வழங்கப்படும் 22 ரூபா கொடுப்பனவை புதிய விலையேற்றத்துக்கு ஏற்றாற்போல் திருத்தம் செய்தல், இலங்கை மின்சார சபையுடன் ஏற்படுத்தியுள்ள ஒப்பந்தத்தினை மீள் பரிசீலனை செய்து பொருத்தமான திருத்தங்களை கொண்டுவருதல், முறைப்படுத்தப்பட்ட கால அட்டவணைக்கு அமைவாக தொடர்ராக கொடுப்பினை வழங்குதல் போன்ற கோரிக்கைகளை முன்னுரிமைப்படுத்தி Roof top Solar உற்பத்தியாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக உரிய தரப்புகளுடன் கலந்துரையாடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆர்ப்பாட்டத்தின் பின்னர் இலங்கை மின்சார சபை பிராந்திய பிரதம பொறியியலாளர் ஏ.எம்.ஹனீக்களிடம் மகஜரொன்றையும் கையளித்தனர்.

பாடசாலை பொருட்கள் அன்பளிப்பு

(கோணாவத்தை செய்தியாளர்)

அனைத்து இலங்கை தொழில் முறை புகைப்பட வீடியோ சங்கத்தினரின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மூவின மக்களுக்குமான உலருணவுப் பொருட்கள் மற்றும் மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் அக்கரைப்பற்று ஸ்ரீவிஜயராம பௌத்த விகாரையில் நடைபெற்றது.

சங்கத்தின் பொதுச் செயலாளர் டிக்ஷன் அபேசிங்க தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், நாதன்ஸ் அட்வான்ஸ் ஸ்டுடியோ உரிமையாளரும் பிரதி செயலாளருமான ஆர்.பிரகாஷின் அனுசரணையில் அம்பாறை - மட்டக்களப்பு மாவட்ட பிரதம சங்க நாயக்கவும் அக்கரைப்பற்று ஸ்ரீ விஜயராம பௌத்த விகாரை பீடாதிபதியுமான வண.தேவகோட சோரத தேரர் முன்னிலையில் நடைபெற்றது.

மல்வத்தை இராணுவப்பிரிவின் 24ஆவது காலாட் படைப்பிரிவின் மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறி பிரதம அதிதியாக கலந்துகொண்டு அக்கரைப்பற்று சிறு கிராமங்களில் வாழும் தெரிவுசெய்யப்பட்ட மக்களுக்கு இந்த நிவாரணப்பொதிகளை வழங்கினார்.

காரைதீவு - மாளிகைக்காடு உணவகங்களில் பரிசோதனை: நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுகளும் அழிக்கப்பட்டன

(மாளிகைக்காடு செய்தியாளர்)

உணவுப் பாதுகாப்பு மற்றும் சுகதாரமான உணவை பொதுமக்களுக்கு உறுதிப்படுத்தல் எனும் நோக்கில் உணவு தயாரிக்கும், விற்பனை செய்யும், விநியோகம் செய்யும் மற்றும் சிற்றுண்டி உற்பத்தி நிலையங்களில் செவ்வாய்க்கிழமை(11) திடீர் பரிசோதனையும் முற்றுகையும் இடம்பெற்றன.

இதன்போது மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகளும் உணவு தயாரிக்க பொருத்தமற்ற பாத்திரங்களும் கைப்பற்றப்பட்டன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். நிபாலின் ஆலோசனையில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா வஸீரின் தலைமையில் காரைதீவு மற்றும் மாளிகைக்காடு ஆகிய பிரதேசங்களில் இம்முற்றுகைஇடம் பெற்றது.

உணவகங்கள் சுத்தமில்லாது இருத்தல், உணவு கையாளுகையில் முறையான ஒழுங்கின்மை, நீண்டநாட்களுக்குப் பொருத்தமில்லாதவாறு உணவுகளை குளிர்சாதனப்பெட்டிகளில் தேக்கி வைத்தல், சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையல் பொருட்களின் தரம் போன்றன காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பைசால் முஸ்தபா தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான கே.ஜெமீல், எம்.எம்.எம்.சப்னோஸ் ஆகியோரால் பரிசோதிக்கப்பட்டது.

மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகளை வைத்திருந்தோர் மீது உணவு கட்ட நீதிமன்ற நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டதுடன், நம் மக்களது சுகாதாரத்தையும், உணவுச் சுகாதாரத்தையும் நடைமுறைப்படுத்தவும், பாதுகாக்கவும், மேம்படுத்தவும் இவ்வாறான தொடர்சியான பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றோம். மேலும் இனிவரும் காலங்களில் பகல், இரவுநேர உணவு நிலைய திடீர் பரிசோதனைகளும் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை விவசாயிகளுக்கு ஊக்குவிப்பு உபகரணம் வழங்கல்

(கந்தளாய் செய்தியாளர்)

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர், கிண்ணியா, வெருகல் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 26 விவசாயிகளுக்கான விவசாய ஊக்குவிப்பு உபகரணங்கள் அகம் மனிதாபிமான வள நிலையத்தினால் செவ்வாய்க்கிழமை (11) வழங்கப்பட்டது.

தற்கால பொருளாதார பின்னடைவு காரணமாக நாளாந்த வருமானத்தை இழந்து நிற்கும் விவசாயக் குடும்பங்களின் நிலைபேறான வாழ்வாதாரத்தை ஏற்படுத்தும் வகையில் AHRC நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலைபேறான உணவு தேவையை பூர்த்திசெய்யும் செயற்றிட்டத்தின் கீழ் இப்பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதில் கிண்ணியா பிரதேச செயலாளர் மற்றும் மூதூர் பிரதேச செயலாளர், வெருகல் பிரதேச செயலாளர் முன்னிலையில் இந்நிகழ்வு இடம்பெற்றதுடன், AHRC நிறுவனத்தின் இணைப்பாளர், பிரதி இணைப்பாளர், உதவி கணக்காளர் திட்ட இணைப்பாளர்கள் மற்றும் வெருகல் பிரதேச சிவில் செயற்பாட்டு வலயமைப்பின் செயலாளர் மற்றும் அங்கத்துவர்கள் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இதன் தொடர் செயற்பாடாக கந்தளாய், மொரவெவ, குச்சவெளி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட விவசாயிகளுக்கும் விவசாய உபகரணங்கள் மற்றும் விதை தானியங்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கர்ப்பிணிகளுக்கான போசாக்கு வேலைத்திட்டம்

(பொலிவேரியன் செய்தியாளர்)

கல்முனையில் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான போசாக்கு மட்டத்தை மேம்படுத்தி, ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டம் - 2023, மாவட்ட சமூர்த்திப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்றாளின் பணிப்புரைக்கமைய கல்முனை பிரதேச செயலாளர் ஜே.வியாக்கத் அலியின் வழிகாட்டலில் மருதமுனை சமூர்த்தி வங்கியில் செவ்வாய்க்கிழமை (11) ஆரம்பிக்கப்பட்டது.

சமூர்த்தி வங்கியின் முகாமையாளர் ஏ.எல்.எம்.நஜீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கர்ப்பிணித் தாய்மாருக்கு குடும்பநல உத்தியோகத்தர்களினால் போசாக்கு பற்றிய ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. வங்கிக் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் என்.எம்.யு.சத்தார், பிரதித் தலைவர் எம்.ஐ.எம்.சாஹிர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சமூர்த்தி வங்கியின் முகாமையாளர் ஏ.எல்.எம்.நஜீம் கர்ப்பிணித்தாய்மாருக்கான 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவுகளை வழங்கினார். 264 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூபா 2,64,000 கொடுப்பனவாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

மாற்றுத்திறனாளிகளுக்கான விவசாய உபகரணங்கள் கையளிப்பு

(சீனக்குடா செய்தியாளர்)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் 35 மாற்றுத் திறனாளிகளுக்கான விவசாய உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை(11) திருகோணமலை நகராட்சி மன்ற மண்டபத்தில் இடம்பெற்றது.

சென்ட் போ ஆண்டிகப் நிறுவனம் முன்னெடுத்து வரும் இச்செயற்திட்டத்துக்கு அவுஸ்திரேலியன் எய்ட் நிறுவனம் நிதி உதவியினை வழங்கியது. இந்நிகழ்வுக்கு அவுஸ்திரேலியன் எய்ட் நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் பிரணவன் சென்ட் போ ஆண்டிகப் நிறுவனப் பிரதிநிதிகளான திட்ட இணைப்பாளர் சாரங்க குணசேன மற்றும் நிதி முகாமையாளர் கோசல ஆகியோருடன் மாவட்ட உத்தியோகத்தர் வடமலை ராஜ்குமார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தெரிவுசெய்யப்பட்ட 35 பேருக்கான செயற்கை அவயங்களை வழங்கி அதனைத் தொடர்ந்து அவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான விவசாய நடவடிக்கைகளுக்கான உபகரணங்களையும் கடற்ற மாதம் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலைய இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வுகள்

(பாறுக் ஷிஹான்)

கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையம் வருடாந்தம் நடத்தும் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வு செவ்வாய்கிழமை(11) மாலை பொலிஸ் நிலைய திறந்தவெளியரங்கில் கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். ரம்ஸீன் பக்கீர் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது நிகழ்வின் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் கித்திரி ஜயவத், ஏனைய அதிதிகளாக அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டி.ஜெயந்தரத்னாயக்க, கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம்.எல்.புத்திக, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், உத்தியோகத்தர்கள் உட்பட சர்வமதத் தலைவர்கள் மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் பாதுகாப்புக் குழு அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

அத்துடன், இந்நிகழ்வில் சர்வமதத் தலைவர்களின் ஆசீர்வாத சொற்பொழிவு இடம்பெற்றதுடன் இஸ்லாமிய மார்க்க சொற்பொழிவுடன் நிகழ்வு ஆரம்பமானது. இதன்போது அதிகளவான மக்கள் கலந்து கொண்டதுடன், நிகழ்வின் நன்றி உரையினை சமூக பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஏ.எல்.எம்.வாஹீட் மேற்கொண்டார்.

பொலிஸாரினால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு ரமழான் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக வந்திருந்த கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அங்கிருந்த மக்களிடம் சிநேக பூர்வமான கலந்துரையாடலை மேற்கொண்ட துடன் குறைநிறைகளைக் கேட்டறிந்துகொண்டார். மேலும் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர், அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டி.ஜெயந்த ரத்னாயக்க, கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம்.எல்.புத்திக, கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரம்ஸீன் பக்கீர் உள்ளிட்ட பொறுப்பதிகாரிகளுடன் பொதுமக்களின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

மியன்மாரினால் வழங்கப்பட்ட அரிசி வறிய குடும்பங்களுக்கு வழங்கிவைப்பு

(கிரான் செய்தியாளர்)

பொருளாதார ரீதியில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் வறிய குடும்பங்களுக்கு இலவச அரிசி வழங்கும் நிகழ்வு வாழைச்சேனை கோறளைப்பற்று பிரதேச செயலகத்தில் புதன்கிழமை(12) இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 9000 மெற்றிக்தொன் தனது வர்த்தக வாணிப அமைச்சு ஊடாக வந்ததாகவும் அதனை மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் பிரித்து அப்பிரதேசத்திற்குட்பட்ட கிராமங்களிலிருந்து இனங் காணப்பட்ட வறிய குடும்பங்களுக்கு இவ் அரிசி வழங்கப் படுவதாகவும் தெரிவித்தார்.

இப் பிரதேசத்தில் இனங் காணப்பட்ட 750 குடும்பங்களில் 350 குடும்பங்களுக்கு தலா 20 கிலோ அரிசிப் பொதிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வு, பிரதேச செயலாளர் தலைமையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் வர்த்தக வாணிப இராஜாங்க அமைச்சருமான ச.வியாழேந்திரன் கலந்துகொண்டு இனங் காணப்பட்ட குடும்பங்களுக்கு மியன்மார் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அரிசியினை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

'சமுர்த்தி அபிமானி' விற்பனைக் கண்காட்சி

(மட்டக்களப்பு)

மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தின் தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு 'சமுர்த்தி அபிமானி' விற்பனை கண்காட்சி மற்றும் விற்பனை சந்தை பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் செயலக வளாகத்தில் திங்கட்கிழமை (10) ஆரம்பித்துவைக்கப்பட்டது.

தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதுடன், நுகர்வோர்களிடமிருந்து வருகின்ற கேள்விகள் மற்றும் விற்பனை வாய்ப்புகளை சலுகை விலையில் மக்கள் கொள்வனவுசெய்வதற்கு இக்கண்காட்சி மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சத்தியகௌரி தரணிதரன், நிர்வாக உத்தியோகத்தர் வி.தவேந்திரன், தலைமையக முகாமையாளர் திருமதி புவனேஸ்வரி ஜீவகுமார், கருத்திட்ட முகாமையாளர் திருமதி சோ.தமிழ்வாணி, மாங்காடு சமுர்த்தி வங்கி முகாமையாளர் திருமதி சியாந்தினி கமல்ராஜ், எருவில் சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.ஆனந்தமோகன், கல்லாறு சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.ரவிந்திரன், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், பிரதேச சமுதாய அடிப்படை அமைப்பு உறுப்பினர்கள், விற்பனையாளர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் சிசுதிரிய புலமைப்பரிசில் 90 மாணவர்களுக்கு வழங்கப்பட்டதுடன், அருணலு கடன்களும் வழங்கப்பட்டன.

திருகோணமலையில் மீனவர்கள் ஆறு பேர் கைது

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - சமுத்ராகம பகுதியைச் சேர்ந்த ஆறு மீனவர்களை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மனையாவெளி பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் செய்த முறைப்பாட்டை யடுத்து குறித்த ஆறு பேரையும் செவ்வாய்க்கிழமை (11) மாலை கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மனையாவெளியைச் சேர்ந்த மீனவர்கள் கரவலை இழுத்துக் கொண்டிருந்தபோது சமுத்ராகம பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் சிலர் வருகைதந்து வலையை அறுத்து பிடித்திருந்த மீன்கள் அனைத்தையும் எடுத்துச் சென்றுள்ளதாக துறைமுக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இதனையடுத்து, விசாரணைகளை மேற்கொண்ட துறைமுகப் பொலிஸார் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின்பேரில் ஆறு மீனவர்களை கைது செய்துள்ளதாகவும், கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டு வருவதாகவும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் திருகோணமலை துறைமுகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனையில் நடைபெற்ற இப்தார் நிகழ்வு

கல்முனை மிஸ்பாஹ் மகா வித்தியாலய வருடாந்த இப்தார் நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ.ஆர்.அப்துல் ரஸாக் தலைமையில் பாடசாலை வளாகத்தில் செவ்வாய்க்கிழமை(11) மாலை நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிதிகளாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.எஸ்.நஜீம், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம்.எச்.எம்.ஜாபீர், ஏ.ஜிஹான் ஆலிப், கணக்காளர் வை.ஹபிபுல்லாஹ், உதவிக் கல்விப் பணிப்பாளரும், கல்முனை முஸ்லிம் பிரிவு கோட்டக் கல்விப் பணிப்பாளருமான ஏ.பி.நஸ்மியா சனூஸ், பாடசாலை பிரதி அதிபர், ஆசிரியர் குழாமினர், நலன்விரும்பிகள், உலமாக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(மாளிகைக்காடு செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட புனித இப்தார் நிகழ்வு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (11) இடம்பெற்றது.

இதன்போது மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த், திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி, உதவி மாவட்ட அரசாங்க அதிபர் ஆ.நவேஸ்வரன், சமுர்த்தி பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன், சமுர்த்தி கணக்காளர் எம்.எஸ்.பசீர் மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள், வர்த்தக சங்கத்தினர் கலந்துகொண்ட இந்நிகழ்வில் ம/ஹதுஸ் சுன்னா மகளிர் அரபுக்கல்லூரியின் பிரதி அதிபர் மௌலவி எம்.எம்.எம்.மன்சூரினால் விசேட உரை நிகழ்த்தப்பட்டது. (கல்லடி செய்தியாளர், மட்டக்களப்பு)

விற்பனைக் கண்காட்சி

(கிரான் செய்தியாளர்)

சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி திணைக் களத்தின் ஏற்பாட்டிலும் கோறளைப்பற்று பிரதேச செயலகத்தின் ஒழுங்கமைப் பிலும் விற்பனைக் கண்காட்சி செவ்வாய்க்கிழமை (11) நடைபெற்றது.

கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சமுர்த்தி விற்பனைக் கண்காட்சியானது பிரதேச செயலக வளாகத்தில் செயலாளர் திருமதி ஜெ.திருச்செல்வம் தலைமையில் நடைபெற்றபோது சிறப்பு விருந்தினராக மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் எஸ்.மனோகிதராஜ் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டு விற்பனைக் கண்காட்சியை திறந்து வைத்தனர்.

இந்நிகழ்வில் மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் எஸ்.மனோகிதராஜ் மற்றும் கோறளைப்பற்று உதவிப் பிரதேச செயலாளர், சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏனைய உத்தியோகத்தர்கள், விற்பனையாளர்கள், உற்பத்தியாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

அல்-கிம்மா நிறுவனம் மற்றும் வாழைச்சேனை பொலிஸ் நிலையம் ஆகியன இணைந்து நடத்திய இன நல்லுறவு இப்தார் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (11) வாழைச்சேனை பொலிஸ் நிலைய வளாகத்தில் இடம்பெற்றது.

வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசந்த பண்டார தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கிழக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் உதித்த லியனகே கலந்துகொண்டார். மேலும், இதன்போது அல்-கிம்மா நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அஷ்-ஷெய்க் எம்.எம்.எஸ்.ஹாறூன் ஸஹ்வி சிறப்பு சொற்பொழிவாற்றினார். (கல்குடா செய்தியாளர்)

வாழைச்சேனை லோயல் அக்கடமி கல்வி நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப்தார் நிகழ்வு திங்கட்கிழமை (10) கல்வி நிலையத்தில் இடம்பெற்றது. லோயல் அக்கடமி பணிப்பாளர் ஏ.எம்.அனஸ் ஆசிரியர் தலைமையில் இடம்பெற்ற இவ் இப்தார் நிகழ்வில், பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (மீராவோடை செய்தியாளர்)

பட்டிருப்பில் இலவச பாடநூல் மற்றும் சீருடை வழங்கல்

(பாண்டிருப்பு செய்தியாளர்)

பட்டிருப்பு வலயக்கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இலவச பாடநூல் மற்றும் இலவச சீருடை வழங்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு பெரியகல்லாறு விநாயகர் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பட்டிருப்பு வலயக்கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.திவிதரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறீதரன் கலந்துகொண்டார். கௌரவ அதிதியாக முறைசாராக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தயாளசீலன், பெரியகல்லாறு விநாயகர் வித்தியாலய அதிபர் கே.கமலநாதன் உட்பட பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

பட்டிருப்பு வலயக்கல்விப் பணிமனைக்குட்பட்ட பகுதிகளில் 70 பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இவ் இலவச பாடநூல்கள் மற்றும் இலவச சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. இலவச பாடநூல்கள், இலவச சீருடைகள், இலவச உணவு, இலவச காப்புறுதிகள், இலவச பாதணிகள் என பல்வேறு உதவிகளை மாணவர்களின் கல்விக்காக இலங்கை அரசாங்கம் வழங்கிவருகின்றது. இன்றைய பொருளாதார நெருக்கடியான காலகட்டத்திலும் அரசாங்கம் இவ் இலவச பாடநூல்கள், சீருடைகளை வழங்குவதையிட்டு அரசாங்கத்திற்கு நாம் நன்றி செலுத்தவேண்டும் என வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறீதரன் தெரிவித்தார்.

நலன்புரி நன்மைகள் வேலைத்திட்ட கலந்துரையாடல் மட்டக்களப்பில்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவில் நலன்புரி நன்மைகள் வேலைத்திட்டம் மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆய்வுத் திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ. உதயஸ்ரீதரின் வழிகாட்டலின் கீழ் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி எம்.எஸ்.சில்மியா தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் நிர்வாக கிராம உத்தியோகத்தர் மற்றும் கிராம உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் தமது கிராமத்தை விட்டு குடிபெயர்ந்தவர்கள், அடையாளம் காணமுடியாதவர்களை இனங்காண்பதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டதுடன், 162A, 167A, 167D, 167B ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு மேலதிகமாக வழங்கப்பட்ட ஒரு வார காலத்திற்கான முன்னேற்ற மீளாய்வு தொடர்பாகவும் கலந்துரை யாடப்பட்டது.

நலன்புரி வேலைத்திட்டத்தினை பூர்த்திசெய்து விரைவாக தீர்வுகளை வழங்கும் பிரிவிற்கு பொறுப்பான பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் முழுமையாக ஒப்படைக்குமாறு அறிவூட்டப்பட்டனர். இதன்போது உணவுப் பாதுகாப்பு ஆய்வுத் திட்டத்தினை மேற்கொள்ளும் பொருளாதார, சமூக மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன், உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்தும் ஆராயப்பட்டது.

இந்நிகழ்வில் நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எம்.எம்.ஜரூப், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் பீ.ஜெயராஜ் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

போடியார் புலம்பல்!

அரசிடம் தேர்தல நடத்த காசி இல்லை எனில் கட்டம் கட்டமாக தேர்தல நடத்த முன்வர வேண்டும் எண்டு தமிழரசு மூத்த தலைவர் சி.வி.கே.சிவஞானம் சொல்லியிருக்காரு எலுவா?

இந்த மனிசன் சொன்னத பார்த்தா காசி இல்லாததாலதான் தேர்தல நடத்தாம இருக்காங்க எண்டு எலுவா நினைக்க தோணுது. அடேயப்பா அந்த குள்ள நரிக்கு இப்ப உள்ளூராட்சி தேர்தல நடத்த விருப்பம் இல்ல. இதுதான் மூலகாரணம் எண்டதுகூட இந்த மனிசனுக்கு தெரியல்லையேடாப்பா!

சாய்ந்தமருது பிரதேச நலன்புரி அமைப்பின் இப்தார் நிகழ்வு

(மாளிகைக்காடு, மாவடிப்பள்ளி செய்தியாளர்கள்)

சாய்ந்தமருது பிரதேச செயலக நலன்புரி அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த நல்லிணக்க இப்தார் நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தலைமையில் செவ்வாய்க்கிழமை (11) கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

நோன்பின் மாண்புகள், சமூக நல்லிணக்கம், சகோதரத்துவம், இஸ்லாம் வலியுறுத்தும் வாழ்வியல் தொடர்பில் மௌலவி ஏ.அஷ்ரப் மார்க்க சொற்பொழிவு நிகழ்த்தினார். இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன், நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எல்.எம்.லத்திப், அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எச்.வி.அனீஸ், ஓய்வுபெற்ற பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ.எம்.தௌபீக் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

சமூக நல்லிணக்கத்தையும் சகவாழ்வையும் முன்னிலைப்படுத்தி வருடாந்தம் இடம்பெறும் இந்நிகழ்வில், சாய்ந்தமருது - மாளிகைக்காடு உலமா சபைத் தலைவர் ஏ.எல்.எம்.சலீம் (சர்க்கி), சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிகா, உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், கணக்காளர் ஏ.ஜே.நுஸ்ரத் பானு, நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சி.எம்.பழீல், நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.நளீர், சாய்ந்தமருது ஜும்ஆப் பெரியபள்ளிவாசல் தலைவர் ஏ.ஹிபத்துல் கரீம் உள்ளடங்களாக திணைக்களத் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், ஊர் முக்கியஸ்தர்கள், பொது அமைப்புகளின் பிரதானிகள் மற்றும் நிர்வாகிகள், மத்ரசா மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

சோபகிருது தமிழ் புதுவருடம், வாக்கிய பஞ்சாங்கத்தின்படி சித்திரை மாதம் 01ஆம் திகதி அதாவது, 14-04-2023 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.59 மணிக்கு திருவோண நட்சத்திர 02ஆம் பாதத்தில் தேய்பிறை நவமி திதியில் உதயமாகின்றது. இத் தமிழ்ப் புத்தாண்டானது, 60 வருட தமிழ் வருட சுற்றுவட்டத்தில் 37ஆவது வருடமாகும்.

மேட சங்கிரமன புண்ணிய காலம் மு.ப.10.59 முதல் பி.ப.6.59 வரை, இக்காலத்தில் அனைவரும் தலையில் புங்கம் இலையையும், காலில் ஆலிலையையும் வைத்து ஸ்நானம் செய்து, வெள்ளை அல்லது மஞ்சள் கரையுடைய புத்தாடைகளை அணிந்து, புதுவருட நாயகனான சூரியனுக்கு பொங்கல் பொங்கி வழிபாடுகள், சுவாமி தரிசனம் செய்து பெரியோர்களின் ஆசியினை பெற்றுக்கொள்ள வேண்டும்.

சங்கிரமன தோஷமுடைய நட்சத்திரங்களாக சொல்லப்பட்டுள்ள ரோஹிணி, மிருகசீரிடம் 1,2ஆம் திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ஆம் அத்தம், உத்திராடம், திருவோணம், அவிட்டம் 1,2ஆம் பாதங்களில் பிறந்தவர்கள் கட்டாயம் ஆலயங்களில் கிடைக்கப்பெறும் மருத்து நீரைப் பெற்று, உடல் முழுவதும் தேய்த்து ஸ்நானம் செய்து கொள்வதால் தோஷ நிவர்த்தி பெற்றுக்கொள்ள முடியும்.

கை விஷேடம் - 15-04-2023
மு.ப.7.02 முதல் 8.02 வரை
மு.ப.10.32 முதல் 11.02 வரை

சரி, இனி கோட்சார கிரகங்களின் சஞ்சார நிலைகளைக் கொண்டு ஒவ்வொரு ராசியிருக்கும் என்னென்ன பலாபலன்கள் நடக்கயிருக்கின்றன என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

ராசிபலன் என்று சொன்னாலே பொதுப் பலன்கள்தான் இதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். குரு, சனி, ராகு கேதுக்கள் தான் மிக நீண்ட நாட்களாக ஒருவருடைய ராசிச் சக்கரத்தில் சஞ்சரிக்கும். சுய ஜென்ம ஜாதகத்தின் பிரகாரம், அவை ஒவ்வொருவருக்கும் நன்மைகளையோ அல்லது தீமைகளையோ கொடுக்கக் கடமைப்பட்டவைகளாக இருக்கும். தனிநபர் ஜென்ம ஜாதகத்தின் பிரகாரம், தற்சமயம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான தசா புத்தி அமைப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும். அந்த தசா புத்திகளின் அடிப்படையில், ஒவ்வொரு ராசியினருக்கும் சீரே கொடுக்கப்படுகின்ற பலாபலன்களில் ஏற்ற இறக்கங்கள் அமையும் என்பது தான் ஜோதிட உண்மையும் மெய்மையுமாகும் என்பதை பொதுவாக 'தமிழன்' வாசகநேயர் நெஞ்சங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மேஷம்

துடிப்பும் வேகமும், விவேகமும் கொண்ட மேஷ ராசி அன்பர்களே! உங்களுக்கு பிறக்கும் தமிழ்ப் புத்தாண்டானது மிகப் பெரிய மேன்மைகளையும் திருப்பு முனைகளையும் கொடுக்கக்கூடிய மிக நல்லதொரு ஆண்டாக அமையும். சனி பகவான் உங்கள் இராப ஸ்தானத்தில் இருப்பதாலும், இதுவரை காலமும் உங்களுக்கு விரயங்களை கொடுத்துக் கொண்டிருந்த குரு பகவான் அடுத்த வராம் உங்கள் ராசிக்கு பெயர்ச்சியாக உள்ளார். இதனால் உங்கள் ராசியில் அமர்ந்து இதுவரைக் காலமும் தொல்லைகளைக் கொடுத்து வருகின்ற ராகுவை சுபத்துவப்படுத்தப் போகின்றார், என்பதால் வருடம் முழுவதும் ஒரே விதமான நல்ல பலன்களை அனுபவிக்கப் போகின்றீர்கள்.

கடந்த 02 வருடங்களாக முயற்சி செய்தும் பலனின்காத விடயங்களெல்லாம் மள மளவென நடைபெறப் போகின்றன. அவ்வாறே உங்கள் பொருளாதார பிரச்சினைகள் எல்லாமே தீர்த்து தொழில், வியாபாரமென அனைத்திலும் இலாபங்களை அடையப்போகின்றீர்கள். நீங்கள் நல்ல முறையில் முயற்சி செய்கின்ற அனைத்திலும் வெற்றியும் இலாபமும் நிச்சயம் உண்டு. இளைய பருவத்தினருக்கு பல நல்ல மாற்றங்களைக் கொடுக்கக்கூடிய ஆண்டு. அதேபோல மிக நீண்ட நாட்களாக திருமணம் நடைபெறாமல் தடைப்பட்டிருந்தவர்களுக்கு மிக விரைவாக நல்ல திருமண வாய்ப்புகள் அமையும்.

மறைமுகமாக காதலித்துக் கொண்டிருந்தவர்கள் தங்களுடைய பெற்றோரின் அனுமதியுடன் காதலில் வெற்றி பெறப் போகின்றீர்கள்.

அதேபோல மாணவர்களுக்கு கல்வி அமைப்புகள், அதில் ஏற்பட்டிருந்த தடைகள் எல்லாமே நீங்கி அனைத்து வகையிலும் சாதனைகள் படைக்கப் போகின்றீர்கள். மேலும், வியாபாரத் துறையினருக்கும், விவசாயிகளுக்கும் சகலவிதமான இலாபங்களையும் தருகின்ற ஆண்டாக அமையப் போகின்றது. கடந்த ஆண்டுகளைப் போல் தேவையற்ற விரயங்கள் இருக்காது. உங்கள் வங்கிக் கணக்கில் சேமித்து வைக்கக்கூடிய வகையில் சேமிப்பு இருக்கும்.

வேலை, தொழில் அமைப்புகளில் இருந்து வந்த நிரந்தரமற்றத் தன்மைகள் எல்லாமே விலகி நிரந்தரத் தொழில் வசதிகளைப் பெறப் போகின்றீர்கள். அதேபோல சொந்த வாழ்க்கையில் இதுவரை காலமும் இருந்து வந்த கணவன் -மனைவி உறவில் விரிசல், கருத்து வேற்றுமைகள், பிரிவு இவை அனைத்துமே விலகி எல்லா வகையிலும் நன்மைகளையும் மன நிறைவினையும் தரக்கூடிய ஆண்டாக இந்த ஆண்டு மலர இருக்கின்றது. கும்பத் தேவைக்காக கடன், அல்லது வட்டிக்கு பணம் பெற்றிருந்தால் நிச்சயமாக அவற்றையெல்லாம் மீண்டும் அடைக்கக்கூடிய வகையில் பணம் உங்கள் கையில் கிடைக்கப்போகின்றது. கடந்த ஆண்டுகளில் ஏற்பிருந்த சோதனைகளையும் வேதனைகளையும் முற்றுமுழுமாக களைத்தெறியும் ஒரு நல்ல ஆண்டாகவே இவ்வாண்டு பிறக்கவிருக்கின்றது என்பது உறுதி.

இடபம்

கனிவான பேச்சுக்களால் மற்றவர்களை வசியம் செய்து மடக்கிப்பிடித்திழுக்கும் இட ராசி அன்பர்களே! இதுவரைக் காலமும் இலாபங்களைக் கொடுத்து வந்த குரு பகவான் அடுத்த வராம் உங்கள் ராசிக்கு விரயஸ்தானம் என்று சொல்லப்படுகின்ற 12ஆம் இடத்திற்கு பெயர்ச்சியாக இருக்கின்றார். பொதுவாக சுபகிரகமாக குரு பகவான் விரயஸ்தானத்திற்கு வரும்போது சுப விரயங்கள் வந்தே தீரும். விரயம் வர வேண்டுமென்றால், கையில் உள்ள பணம் செலவாக வேண்டும், வரும்காலம் செலவாக வேண்டும் அல்லது ஏற்கனவே வைத்திருக்கின்ற சேமிப்புகள் செலவாக வேண்டும்.

இயற்கை பாபக்கிரகமான சனி உங்கள் ராசிக்கு 10ஆம் இடத்தில் அமர்வது நன்மையும் அமைப்பு என்றாலும், கேந்திரமெனும் 10ஆம் பாவகத்தில் அமர்வதாலும் அவரே உங்கள் யோகாதிபதி என்பதாலும் நிச்சயமாக நல்ல யோக பலன்களை தொழில், வியாபார ரீதியில் அடையப்போகின்றீர்கள். தொழில் அல்லது வியாபாரத்தில் வருமானம் வரப்போகின்றது. அந்த வருமானத்தை அல்லது இலாபத்தை சுப விடயங்களுக்காக செலவு செய்யப் போகின்றீர்கள், வீடு, வாகனம் வாங்குவது, பிள்ளைகளின் கல்விக்கு, குடும்பத் தேவைக்கென பணம் செலவு செய்ய வேண்டிவரும்.

உங்களுக்குத் தேவையான ஏதாவது சொத்துகளை நிச்சயமாக இவ்வருடம் வாங்கியே தீருவீர்கள். அலைவெலாம் வாங்கும் அளவுக்கு தொழில், வியாபார மேன்மைகள், இலாபங்கள் நிச்சயமாக உண்டு. வெளிநாட்டு அலைப்புகள் இதுவரை காலமும் ஏற்பட்டிருந்த தடைப்பட்டிருந்த தடைகள் அனைத்தும் நீங்கி, நீங்கள் வெளிநாடுகளுக்கு போய் நிம்மதியாக உங்கள் தொழில் விடயங்களைக் கவனிக்கக்கூடிய வகையில் மேன்மையான பலன்கள் அமையும்.

கல்விக்காக வெளிநாடுகளுக்கு போக வேண்டுமென எண்ணியிருந்த மாணவர்களுக்கு நிச்சயமாக அதற்குரிய அனுமதிகள் கிடைக்கப்பெறுவீர்கள். 12ஆம் வீடு சுபத்துவம் பெறுவதால் பிறந்த இடத்திலிருந்து வேறு எங்காவது வெளி மாவட்டங்களுக்கு நகரக்கூடிய அமைப்பு அல்லது மாற்றங்கள் அமையலாகின்றன. அரச வேலை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தவர்களுக்கு நிச்சயமாக அரச அல்லது அரச நிறுவனங்களில் தொழில் வாய்ப்பு அமையப்போகின்றது. நிலையான தொழில் அமையாமல் தவித்துக் கொண்டிருந்தவர்களுக்கு நிலையான அல்லது நிரந்தரமான தொழில் அமையப் போகின்றது. அதேபோல், புதன் மிகவும் வலுவாக இருப்பதால் இணையத்தின் வழியில் தொழில் செய்கின்றவர்களுக்கு நிச்சயமாக நல்ல இலாபங்களும் பெயரும் புகழும் கிடைக்கப்போகின்றன. பெண்களால் சுப விரயங்கள் வந்து போகும், அல்லது மங்கள காரியங்களுக்காக செலவு செய்யப் போகின்றீர்கள். எப்படிப் பார்த்தாலும் உங்களுக்கு அப்படிபொன்றும் தீமைகள் இந்த ஆண்டில் நிச்சயமாக இல்லவே இல்லை என்பது உறுதி.

மிதுனம்

சூழ்நிலைக்கேற்ப காரியங்களை சாதித்துக் காட்டும் திறமை கொண்ட மிதுன ராசி அன்பர்களே! நீங்களே இவ்வாண்டின் கதாநாயகன். கடந்த காலங்களில் நீங்கள் பட்ட துன்ப துயரங்களுக்கு அளவே இல்லை என்று கூடச் சொல்லலாம். அஷ்டமத்தில் தொல்லைகளைக் கொடுத்து வந்த சனி அங்கிருந்து விலகிவிட்டார். அதேபோல, அடுத்த வாரத்தில் குரு பகவான் உங்கள் இலாபஸ்தானத்திற்கு பெயர்ச்சியாகப் போகின்றார். ஏற்கனவே ராகு பகவான் உங்கள் இலாபஸ்தானத்தில் அமர்ந்து உங்களுக்கு இலாபங்களை கொடுப்பதற்கு ஆரம்பித்துவிட்டார். இனி அப்படிப்பட்ட துன்ப துயரங்கள் எதுவுமே உங்களுக்கு இல்லை. இந்த ஆண்டிலிருந்து ஒரு புதுப்பொழிவுடன் புதுமையான தோற்றத்துடன் அனைத்திலும் வீறு நடை போடப் போகின்றீர்கள். அனைத்து கஷ்டங்களிலிருந்தும் விடுதலை பெறப் போகின்றீர்கள். ஏதாவது காரணத்திற்காக உங்களிடமிருந்து பிரிந்திருந்த உறவுகள், நட்புகள் இவையெல்லாமே மீண்டும் இணையப்போகின்றன. எதிர்காலத்தை திட்டமிட்டு சரியாகவும், முறையாகவும், வெற்றியுடனும் அனைத்தையும் நிறைவேற்றப் போகின்றீர்கள். கடந்த காலத்தில் எதை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் உங்களுக்கு இருந்ததோ அவற்றையெல்லாம் மிக எளிதாக முடித்துவிடுவீர்கள். உயிரைத் தவிர எதனையெல்லாம் இழந்துவிட்டீர்களோ அவற்றையெல்லாம் நிச்சயமாகத் திரும்பப் பெறுவீர்கள். பங்குச் சந்தையில் நட்டமான பணம் அல்லது கூட்டு வியாபாரத்தால் தொலைத்த பணம், மற்றவர்களுக்கு கொடுத்து ஏமாந்த பணம் அவையெல்லாம் மீண்டும் கிடைக்கும் சிறப்பான ஆண்டாக இவ்வாண்டு அமைய இருக்கின்றது.

பறிபோன பதவிகள், தொழிலில் பிரச்சினைகள், தேவையற்ற தொழில் மாற்றங்களை சந்தித்தவர்கள் அனைவருக்குமே ஒரு விடிவு காலம் பிறக்கப் போகின்றது. தொழிலில் அனைவரும் வியக்கும் வண்ணம் சாதனை செய்யப் போகின்றீர்கள். உடல், மன நலம் கெட்டிருந்த உங்களுக்கு அவையெல்லாம் நிரந்தரமாகவே தீரப் போகின்றது. கடந்த காலத்தில் இருந்து வந்த கணவன் - மனைவி அல்லது காதலன் - காதலி கருத்து வேற்றுமைகள் எல்லாமே விலகி சுமுக நிலை உருவாக்கப்போகின்றது. ஒங்கியிருந்த எதிரியின் கைகளுக்கு விலங்கிட்டு சிறைப்படுத்தப் போகின்றீர்கள். நீங்கள் கேட்ட அரச உதவிகள் அனைத்தும் மிக எளிதில் கிடைக்கப் பெறுவீர்கள். கடந்த காலங்களில் தேக்கம் பெற்றிருந்த பணம் மீண்டும் உங்கள் கையில் புரளப் போகின்றது. கடன்களை அடைக்கப் போகின்றீர்கள். நினைத்த சுப காரியங்களை நிறைவேற்றப் போகின்றீர்கள். சமுதாயத்தில் உங்கள் மதிப்பு, கௌரவம் இவையெல்லாம் உயரப் போகின்றது. தடைப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணங்கள் எல்லாம் மிகவும் சிறப்பாக அமையப் போகின்றன. உங்கள் நுணுக்கமான அறிவைக் கொண்டு பல சாதனைகளை செய்யப் போகின்றீர்கள். கல்வியாளர்கள் அனைத்திலும் முன்னேற்றம் காண்பீர்கள். எல்லா வகையிலும் முன்னேற்றகரமான வெற்றிப் பாதைக்கு உங்களை இட்டுச் செல்லும் ஆண்டாக இப்புத்தாண்டு மிளிரப் போகின்றது.

கடகம்

அளவறிடத்தில்லும் அன்பும், பெருந்தன்மையான குணநலன்களுடன் சிந்தித்து செயல்படும் கட ராசி அன்பர்களே! அட்டமத்து சனியால் உங்களை ஒருவித பயத்துக்குள்ளாக்கி எங்கு பார்த்தாலும் கட ராசியையே காணாமல் ஆக்கிவிட்ட நிலைதான் எங்கும் தொடர்கின்றது.

பாக்கியஸ்தானத்தில் வலுப்பெற்றிருந்த குரு பகவான் அடுத்த வாரம் உங்கள் ராசிக்கு 12ஆம் இடமான சுமஸ்தானத்திற்கு பெயர்ச்சியடையப் போகின்றார். கட ராசியினர் இதுவரை செய்து வந்த தொழில் அல்லது வியாபாரத்தினை மாற்றி புதிய தொழில் வியாபாரத்தை தொடங்கப் போகின்றீர்கள். தடைப்பட்டிருந்த திருமணத்திற்கான பேச்சுகள் ஆரம்பித்து திருமணத்திற்கான ஏற்பாடுகள் நடக்கும். பூர்வீக சொத்தில் ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தால் நிச்சயமாக நல்லபடியாக முடியும். குரு பகவான் கர்மஸ்தானத்திற்கு பெயர்ச்சி பெறுவது நன்மையில்லை. என்றாலும் கூட, உங்கள் தசா புத்தி அமைப்புகள் நன்மையாக இருக்குமாயின் நிச்சயம் அப்படியொன்றும் தொழிலில் சிக்கல் வந்துவிடப் போவதில்லை.

எதற்கும் தொழில் செய்பவர்கள் தங்கள் தொழிலை அக்கறையும் முழுமனதுடனும் திருப்திகரமாக ஆற்ற வேண்டும் என்பதை மட்டும் நினைவில் கொள்ளுங்கள்.

எதற்கும் எரிச்சல் அடையாமல் நிதானமாக அனைத்தையும் கையாளுங்கள். எந்தவித பண முதலீடுகளானாலும் சரி ஒன்றுக்கு நான்கு முறை சிந்தித்துச் செய்யுங்கள். என்னதான் பிரச்சினை என்று வந்தாலும் உங்கள் பேச்சுக்கு ஒரு தனி மரியாதை கிடைக்கும். குரு பகவான் உங்கள் ராசிக்கு 02, 04, 06 போன்ற பாவங்களை பார்வையிடப் போகின்றார்.

புதிய வீடு அல்லது வாகனம் வாங்குதல் போன்ற திடீர் அதிர்ஷ்டங்கள் கூட வரலாம். பனத்துக்கான சில அலைக்கழிப்புகள் தடைகள் வந்தாலும் நிச்சயமாக சமாளித்துக் கொள்வீர்கள். வேலையிலாதவர்கள் கிடைக்கும் தொழிலை விட்டுவிடாமல் சில காலம் செய்யப் பாருங்கள். அவசரப்பட்டு தொழிலில் எந்த முடிவினையும் எடுக்காதீர்கள். பழமுயக் கடன்களை படிப்படியாக அடைப்பீர்கள். உடல் ஆரோக்கிய நிலையில் அவதானம் தேவை. மறைமுக எதிர்ப்புகள் அவ்வப்போது வந்து போகும். கொடுக்கல் வாங்கலில் மிகவும் கவனமாக நடந்து கொள்ளுங்கள். வீண் வாத விவாதங்களை தவிர்த்திடுங்கள். தொழில் காரணமாக அலைச்சல் அதிகமாக இருக்கும். யாருக்கும் எதற்கும் கையெழுத்து போடாதீர்கள். குடும்ப ஒன்றுமையில் நிச்சயமாக பிளவுகள் ஏற்பட வாய்ப்பில்லை. வியாபாரத்தில் வருகின்ற போட்டிகளை எப்படியும் சமாளிப்பீர்கள். ஆனால் மற்றவர்களை நம்பி உங்கள் பொறுப்புகளை ஒப்படைத்துவிடாதீர்கள். உயர்க்கல்வியால் பல அரிய சாதனைகளை நிகழ்த்துவீர்கள்.

புதிய நண்பர்களால் உதவிகள், இலாபங்கள் அமையும். விரும்பாத மாற்றங்கள் என்றாலும் பொறுமையோடு ஏற்றுக் கொண்டு மனதை சமாதானப்படுத்திக் கொண்டு தைரியத்துடன் செயலாற்றுங்கள். நிச்சயம் இவ்வருடத்தில் வரும் பல தடைகளை தகர்த்தெறியலாம்.

சிம்மம்

எதிலும் நேர்மையுடனும், விவேகத்துடனும் செயலாற்றக்கூடிய சிம்ம ராசி அன்பர்களே! சனி பகவான் உங்கள் ராசிக்கு சாதகமற்ற நிலையில் அமர்ந்திருந்தாலும், அவரது கொடுமைகளையெல்லாம் வடிகட்டக்கூடிய அமைப்பில் அடுத்த வாரத்தில் பெயர்ச்சியாகின்ற குரு பகவான் உங்களுக்கு எல்லாவகையிலும் ஒரு உத்தரவாதத்தினைக் கொடுக்கப் போகின்றார்.

தொட்டது துலங்கக்கூடிய ஆண்டாக இவ்வாண்டு அமையப் போகின்றது. அனைத்து காரியங்களில் நீங்கள் கஷ்டப்பட்டு உழைக்காமலே வெற்றி பெறப் போகின்றீர்கள். திருமணம், உயர்க்கல்வி, தொழில் இவையெல்லாமே சிறப்புறப் போகின்றன. கவலைகள் அனைத்தும் விலகி, சமுதாயத்தில் உங்களுக்கென ஒரு தனி மதிப்பு மரியாதை இருக்கும். உடல் நோயால் அவதிப்பட்ட உங்களுக்கு விடுதலை கிடைக்கப்போகின்றது. மற்றவர்கள் புகழ்ந்து பேசும் அளவுக்கு உங்கள் செயல் திறமைகள் வெளிப்படும். உங்கள் வாழ்க்கையில் மிக நல்ல மாற்றங்கள் ஒன்றின் பின் ஒன்றாகப் படிப்படியாக நடந்தேறும். கடன் பிரச்சினைகளில் சிக்கித் தவித்த உங்களுக்கு இனி அப்படி ஒன்றும் பெரிய கடன்கள் ஏற்படாது. சொத்துக்கள முதலீடு செய்யும் அளவுக்கு நல்ல மாற்றங்கள் உருவாகும். தொழிலுக்காக அலைந்து திரிந்து கொண்டிருந்தவர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்ப தொழில் அமையும். பெரிய பெரிய திட்டங்களையெல்லாம் தீட்டி அவற்றை மிக எளிதாக நடைமுறைப்படுத்தி வெற்றி பெறுவீர்கள். வீடு, காணி, பூமியென அனைத்தையும் வாங்கும் எண்ணம், அல்லது வாங்கி மகிழ்வீர்கள். உங்கள் தொழிலில் நீங்கள் நினைத்த இடத்தை பிடிப்பீர்கள். பதவி உயர்வு, வருமான உயர்வு என அனைத்தையும் பெற்று மகிழ்வீர்கள். எதிர்பாராத சில அதிர்ஷ்ட வாய்ப்புகளை பெறுவீர்கள். கோபத்தையும் ஆத்திரத்தையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வீர்களாயின் இவ்வாண்டில் சிகரத்தை தொடுவீர்கள்.

துணிச்சலான காரியங்களில் ஈடுபட்டு வெற்றி பெறும் பாக்கியமும், மறைமுக, நேர்முக எதிர்ப்புகளால் ஏற்பட்ட தொல்லைகள் மறையும்படியான சூழ்நிலைகளும் உருவாகும்.

தேவையில்லாமல் தொந்தரவு கொடுத்த எதிரிகள் அடங்கியிருப்பார்கள். வீட்டை விட்டு வெளிநாடுகளில் இருக்கின்ற சிம்ம ராசியினர் மீண்டும் வந்து குடும்பத்துடன் சேர்ந்து கொள்வார்கள். பிள்ளைகளால் அனைத்து பெருமைகளையும் அடைவீர்கள். புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் அனைத்தும் கைகூடிவரும். வழக்குகளில் உங்களுக்கு சார்பாக நீதி கிடைக்கும். வெற்றிச் செய்திகள் வீடு தேடி வந்து கொண்டேயிருக்கும். கணவன் - மனைவி இடையே நிலவி வந்த கருத்து வேற்றுமைகள் தீர்ப்பளிக்கின்றன. சகோதரர்கள் உங்களைப் புரிந்து கொண்டு உங்களுக்கு உதவிக்கரம் நீட்டுவார்கள். பொதுவாக இப்புத்தாண்டு சாதனை மேல் சாதனை செய்யப்போகும் ஓர் ஆண்டாகவே உங்களுக்கு மலர இருக்கின்றது.

கன்னி

சூழ்நிலைகள் எதுவாக இருந்தாலும் தன்னுடைய கடமைகளில் கண்ணும் கருத்துமாய் செயல்படக்கூடிய கன்னி ராசி அன்பர்களே! சனி பகவான் கோட்சார ரீதியில் உங்களுக்கு மிகவும் சாதகமான இடத்தில் இருக்கின்றார். அவ்வாறே எதிர்வரும் வாரம் குரு பகவான் அஷ்டமத்திற்கு பெயர்ச்சியடையப் போகின்றார். அஷ்டம என்றதுமே எல்லோருமே பயந்து விடுகின்றார்கள். ஆயுள் பாவம் என்றும் சொல்லலாம். கவக்கிரகமான குரு 08 ஆம் இடம் நகரும்போது, அவ்விடத்தின் சில நன்மைகளையும் பார்க்கும் இடத்தின் நன்மைகளையும் நிச்சயம் கொடுத்தே தீருவார் என்பதால் வீண் பயம் வேண்டாம். உங்கள் ஆயுளுக்கு உத்தரவாதம் கொடுக்கப்போகின்றார். வெளிநாட்டு ஏற்றுமதி இறக்குமதி தொடர்பான நன்மைகளையும் இலாபங்களையும் கொடுக்கப்போகின்றார். வெளிநாட்டு பயனத்தில் ஏற்படடிருந்த தடை, தாமத நிலைகளையெல்லாம் அகற்றி உங்களை நல்லபடியாக வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கப் போகின்றார். உங்கள் தற்கால தசா புத்தி அமைப்புகள் சாதகமாக அமையும் பட்சத்தில் நிச்சயமாக எதிர்பாராத திடீர் தன அதிர்ஷ்டங்களைக் கொடுத்து உங்களை மகிழ்விப்பார். நல்ல வீடு, வாகன சேர்க்கை உண்டு. சொத்துகளை வாங்கும்போது உங்கள் பெயரில் வாங்காது வீட்டில் உள்ள ஏனையவர்களின் பெயர்களில் வாங்குவது நல்லது. கணவன் - மனைவி உறவில் நல்ல முன்னேற்றம் தென்படும். வழக்கு விடயங்களில் கவனம் வேண்டும். அறிமுகமில்லாத எவருக்கும் கையொப்பமிட வேண்டாம்.

உடல் நோய்களை அசட்டை செய்யாதீர்கள், உங்கள் மறைவிடங்களில் நோய்கள் வரக்கூடிய வாய்ப்பு அதிகம் உண்டு. வீணான டென்ஷனால் மனதைப்போட்டு குழப்பிக் கொள்ள வேண்டாம். பணத்தின் பருமையை அறிந்து செயலாற்றுங்கள். முடிந்தவரை சேமிக்கும் பழக்கத்தை அனுசரியுங்கள். வாகனங்கள் செலுத்தும் போதும், பயணிக்கும்போதும் மிகுந்த எச்சரிக்கையாக இருங்கள். மறைமுக எதிர்ப்புகளால் புதிய சொத்துகள் வாங்குவதில் சிக்கல்கள் ஏற்படலாம். திருமணம் போன்ற சுபகாரியங்கள் சில தடைகளுக்குப் பின் நிறைவேறும். பொருளாதார ரீதியில் எவ்வளவு நெருக்கடிகள் தோன்றினாலும் அதனை திறமையோடு சமாளித்து வெற்றி காண்பீர்கள். தொழில் விடயங்களில் நீங்கள் விரும்பியே விரும்பாமலோ சில மாற்றங்களை எற்படுத்த வேண்டிவரும். உங்களுக்கு ஏற்படும் தடைகளை சவாலாக எடுத்துக் கொண்டால் வெற்றி பெறுவது உறுதி.

உங்கள் தேவைக்கான பணம் நிச்சயமாக கிடைக்கும். அவற்றை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டால் பணத்தட்டுப்பாடு என்பது இருக்காது. தாயின் தேவைகளை ஓரளவிற்கே உங்களால் பூர்த்தி செய்ய முடியும், என்றாலும் அவரது பரிபூரண அன்பு ஆசி என்பன உங்களை நெஞ்சு லைக்கும். வீண் வம்பு பிரச்சினைகள் வரும் இடங்களிலிருந்து விலகிப் போவதால் சட்டப் பிரச்சினை மற்றும் பண விரயங்களை தவிர்க்கலாம். குடும்பத்தில் அமைதி, மகிழ்ச்சி, கலகலப்பு இவையெல்லாம் நிரம்பியிருக்கும். பொதுவாக கன்னி ராசியினருக்கு மலரப்போகும் புத்தாண்டு இலாபங்கள் நிறைந்த ஆண்டாகவே விளங்கப் போகின்றது.

(9ஆம் பக்கம் பார்க்க)

துலாம்

தன்னுடன் இருப்பவர்களின் தன்மையை அறிந்து செயல்படக்கூடிய துலாம் ராசி அன்பர்களே! உங்கள் ராசிக்கு யோகாதிபதியான சனி பூர்வபுண்ணிய ஸ்தானத்தில் சுபத்வமின்றி ஆட்சி பெறுவது பெரிய தீமையாக எடுத்துக் கொள்ள முடியாவிட்டாலும், அடுத்த சில நாட்களில் பெயர்ச்சியாக உள்ள குரு உங்களுக்கு அனைத்து வகையிலும் நன்மைகளை செய்யப் போகின்றார்.

வாழ்வில் எல்லா இன்பங்களையும், அறிவில் தெளிவையும், பேச்சில் இனிமையையும், செல்வ வளத்தினையும் அள்ளிக் கொடுக்கும் ஆண்டாக இவ்வாண்டு அமைய இருக்கின்றது. திருமணம், காதல் இவையெல்லாமே வெகு விரைவில் நடைபெற்று உங்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தப்போகின்றது. பிரிந்திருந்த கணவன் மனைவி இணையப் போகின்றார்கள். உடல் நிலையால் ஏற்பட்டிருந்த மருத்துவச் செலவுகள் இனி குறையப் போகின்றது. கடந்த காலத்தில் பொருளாதார நெருக்கடியால் கடன் வாங்க நேரிட்டது. அந்தக் கடனையெல்லாம் தற்போது அடைக்கப் போகின்றீர்கள். தனமுடையவர்களில் உதவிகளெல்லாம் நீங்கள் கேட்காமலே கிடைக்கப்போகின்றன. தொழில் மற்றும் வியாபார வகையில் எல்லா முன்னேற்றங்களையும் அடைவீர்கள். தொழில் கஷ்டங்களால் இனி விரக்தியை இருக்காது. கணவன் அல்லது மனைவி மூலம் சொத்துகள் பெருகும். இவ்வளவு நாளும் உங்களை கண்டுகொள்ளாமல் விலகிச் சென்றவர்கள் உங்களைத் தேடி வருவார்கள். எதிரிகளாக இருந்தவர்கள் உங்களிடம் மன்னிப்புக்கோரி உங்களோடு கரம் சேர்த்துக் கொள்வார்கள். குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும்.

உடலும் மனமும் ஒருங்கே வலிமை பெறுவதால் புதிய முயற்சிகளில் துணிவுடன் இறங்குவீர்கள். தொடர் பயணங்களால் அதிக இலாபங்களையும் வெற்றியினையும் பெறுவீர்கள், கூட்டு முயற்சியில் சேருகின்றபோது சிந்தித்து செயலாற்றுவது நல்லது. எத்தகைய சவால்களையும் முறியடித்துக் காட்டுவீர்கள். குழந்தை பாக்கியத்துக்காக காத்திருந்தவர்களுக்கு நல்லதொரு சுழற்சைப் பேறு அமையப் போகின்றது.

உடன் பிறந்த சகோதரர்கள் எல்லா வகையிலும் உங்களுக்கு உதவுவார்கள். தொழில் வியாபாரத்தில் நீங்கள் எதிர்பார்த்த இலாபம் இருமடங்காக உங்களை வந்தடையும். வெளிநாட்டு முயற்சிகள் அனைத்தும் நீங்கள் எண்ணியபடியே நடந்தேறும். சிறிதாக நீங்கள் முயற்சி செய்தாலும் கூட பெரிய இலாபங்களை அடைவது உறுதி. கடந்த காலங்களில் கடன் வாங்கியவர்கள் நேர்மையோடு மீண்டும் கடனை திரும்பக் கொடுப்பார்கள். அல்லது நீங்கள் யாரிடமாவது கடன் வாங்கிபிருந்தால் அதனை மீளச் செலுத்துவதற்கு நீங்கள் கேட்ட தவணை வாய்ப்பு கிடைக்கப் பெறுவீர்கள். நண்பர்களைப் போல் நடித்து திட்டந்தீட்டி உங்களை கவிழ்க்க காத்திருப்பவர்கள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள். ஒட்டுமொத்தமாக, மலர இருக்கும் புத்தாண்டில் அரிய பல சாதனைகளால் புகழ் பெறப் போகின்றீர்கள்.

விருச்சிகம்

விடாமுயற்சியும், பெருந்தன்மையான சிந்தனைகளும் கொண்ட விருச்சிக ராசி அன்பர்களே! சனி பகவான் அர்தாஷ்டம சனியாக அமர்ந்திருக்க, குரு இதுவரை இருந்துவந்த பூர்வ புண்ணிய ஸ்தானத்திலிருந்து விலகி இன்னும் சில நாட்களில் ருண ரோக சத்ரு ஸ்தானத்திற்கு பெயர்ச்சியாகப் போகின்றார். ராகு உங்கள் ஆறாமிடத்தில் வலிமை பெறுவதால் கடன், நோய்த் தொல்லைகள் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தாது எனலாம். குருவின் சுபப்பார்வை 02, 10, 12 போன்ற பாவங்களின் மீது விழுவதால் நன்மையான சில அனுபவங்களை இவ்வருட ஆரம்பத்திலிருந்தே கொடுக்க முனைவார்.

உடல் நோய்களிலிருந்து விடுதலை கிடைக்கப் போகின்றீர்கள். பணவரவுகள் அதிகரிப்பதால் கடன் தொல்லைகளிலிருந்து நிவாரணம் கிடைக்கப் பெறுவீர்கள். தொழில் முயற்சிகளில் நீங்கள் எண்ணியவாறே நன்மைகளும் இலாபங்களும் அமையும். புதிய தொழிலுக்கு முயற்சி செய்தால் நிச்சயம் வெற்றி உங்களுக்கே. பயணங்களில் கூட தொடர் இலாபங்களை அடைவீர்கள். உங்கள் இனிய பேச்சால் முக்கிய செயற்பாடுகளை வெற்றிகரமாக முடிப்பீர்கள். உங்களுக்கு தேவையான பணம் எந்த வழியிலாவது உங்களுக்கு கிடைக்கத்தான் செய்யும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை குடும்ப ஒற்றுமையை வலுப்படுத்தும். கடந்த காலங்களில் உங்களுக்கு எதிராக நேர்முகமாகவும் மறைமுகமாகவும் செயல்பட்டவர்கள் காணாமல் போய்விடுவார்கள். சிலர் மன்னிப்புக் கேட்டு வருந்துவார்கள். புதிதாக சேர்ந்துள்ள அல்லது அறிமுகமான நண்பர்களால் இலாபங்களும், உதவிகளும் கிடைக்கப் பெறுவீர்கள். பங்குச் சந்தையாக அல்லது கூட்டு வியாபாரமாக இருக்கலாம், கொடுக்கல் வாங்கல் குறித்து கவனமாக செயல்படல் வேண்டும். பணம் புழங்குமிடங்களான வங்கி போன்ற அமைப்புகளில் பணியாற்றுபவர்கள் தங்கள் பொறுப்புகளை மற்றவர்களிடம் ஒப்படைக்குபோது அதற்குரிய விதிமுறைகளை அனுசரிப்பதால் வீண் பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும். தொழிலில் நீங்கள் எதிர்பார்த்த பதவி மாற்றம், தொழில் மாற்றம், இட மாற்றம் போன்றவற்றை வழங்கியே தீருவார். விலகிக் சென்ற சொந்தங்கள், உறவுகள் மீண்டும் வந்து உங்களோடு ஒட்டி உறவு கொள்வார்கள். வாழ்வில் நல்ல மாற்றங்களை இனி சந்திக்கப் போகின்றீர்கள். நீங்களே மூக்கின்மீது கை வைக்கும் அளவுக்கு உயரப் போகின்றீர்கள்.

கடந்த கால கடன்களை அடைக்கும் அளவுக்கு உங்களது வருமானம் நிச்சயமாக அமையும். வெளிவட்டாரத்தில் உங்கள் புகழ் பாடப்படும். இவ்வளவு காலமும் வேலையில்லாமல் கஷ்டப்பட்டவர்களுக்கு தகைமை அடிப்படையில் நல்ல தொழில் வாய்ப்புகள் கிடைக்கப்போகின்றன. கட்டுப்பாட்டுடனான சுபச் செலவுகள் ஏற்படும். நீங்கள் செலவு செய்யும் பணத்தால் உங்களுக்கு மகிழ்ச்சியும் ஏற்படும். செலவு எவ்வளவுக்கெவ்வளவு வருகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு வரவும் வந்து கொண்டே இருக்கும். திடீரென கிடைக்கும் அதிர்ஷ்ட இலாபத்தால் பல சுப காரியங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். அனைத்து வகையிலும் மகிழ்ச்சியும் சந்தோஷமும் நிலைத்திருக்கின்ற ஆண்டாகவே இவ்வாண்டு உங்களுக்கு மலர இருக்கின்றது.

தனுசு

விவேகமான செயற்பாடுகளும் பெருந்தன்மையான குணமும் கொண்ட தனுசு ராசி அன்பர்களே! இவ்வருட கதாநாயகன் வரிசையில் நீங்கள் தான் முதலிடத்தை பிடிக்கப்போகின்றீர்கள். உங்கள் ராசிக்கு 03ஆம் இடம் சனி பகவான் வலுப்பெற்று அமர்வதும், இன்னும் சில நாட்களில் உங்கள் ராசிக்குப் பெயர்ச்சியாக இருக்கின்ற குருவும், ராசிக்கு இலாபத்தில் கேதுவும் மிகச் சிறப்பான பலன்களை இவ்வருடத்தில் குவிக்கப் போகின்றார்கள். வீட்டில் தடைப்பட்டிருந்த சுப காரியங்கள் அனைத்தும் மளமளவென நடைபெற்று உங்கள் மனதை குளிர்ச் செய்யப் போகின்றது. மிக நீண்ட நாட்களாக திருமணமாகி குழந்தைப் பேறு இல்லாத தம்பதியினருக்கு புத்திர பாக்கியம் அமையப் போகின்றது. இத்தனை காலமும் உங்களை பீடித்திருந்த பொருளாதார சோகம் உங்களை விட்டு முழுவதுமாக மறையப் போகின்றது. ஏதோ சில காரணத்திற்காக குடும்பத்தைப் பிரிந்திருந்த கணவன் மனைவி ஒன்று சேரப்போகின்றனர்.

வெளிநாடு செல்வதில் ஏற்பட்டிருந்த தடைகள் அனைத்தும் விலகி வெளிநாட்டுக்கு செல்லப் போகின்றீர்கள். பிரமிக்கத்தக்க மாற்றங்களுடன் கூடிய அற்புதமான திருப்பம் உங்கள் வாழ்வில் ஏற்படப் போகின்றது உறுதி. தனலட்சுமி உங்கள் வீட்டில் தாண்டவமாடப்போகின்றாள். மண்ணைத் தொட்டாலும் பொன்னாக மின்னக் கூடிய வருடம் என்று கூடச் சொல்லலாம். எவ்வளவு பெரிய செலவுகளானாலும் சமாளித்து விடுவீர்கள். தொழிலில் விண்ணப்பித்திருந்த மாற்றங்கள் கிடைக்கப் போகின்றது. மறைமுக, நேர்முக எதிரிகள் குறித்து கவலைப்படத் தேவையில்லை. நீங்கள் முயற்சித்த அனைத்து காரியங்களும்

தடையின்றி நிறைவேறும். கல்வியில் உங்கள் குழந்தை கல்வி வளர்ச்சியைக் கண்டு நீங்களே பெறாமைப்படும் அளவுக்கு முன்னேற்றம் இருக்கும். தர்ம காரியத்துக்காக பணம் நிறைய செலவு செய்வீர்கள், உங்களது தேவைக்கு மேலதிகமாகவும் பணம் வந்துகொண்டே இருக்கும். உங்களைப் பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் வந்து உங்களோடு உறவாடப் போகின்றனர். தற்போது உங்கள் தொழில் வியாபாரத்தினை நீங்கள் தடையின்றி விரிவாக்கம் செய்யலாம். நீண்ட நாட்களாக உங்களை வருத்திக் கொண்டிருந்த நோயிலிருந்து விடுதலை அடையப் போகின்றீர்கள். உடல் நலத்திற்காக செலவிட்ட பணத்தை இனி சேமிக்கப் போகின்றீர்கள்.

சென்ற காலங்களில் ஏற்பட்ட பிரச்சினைகள் ஒவ்வொன்றாக முடிவுக்கு வரும். மனக் கவலைகள் எல்லாம் மாறி குடும்பத்திலும், சமூகத்திலும் நல்ல மதிப்பும் மரியாதையும் கிடைக்கப் பெறுவீர்கள். அடிப்படை வசதி வாய்ப்புகளை பெருக்கிக் கொள்ள எதிர்காலத் திட்டங்களை சிறப்புடன் முன்னெடுப்பீர்கள். அரசியல் ஈடுபாடு உடையவர்களுக்கு புதிய பொறுப்புகளுடன் பதவி உயர்வும் வரப்போகின்றது. சேமிப்புகள் எல்லாம் இரு மடங்கென வலுப் பெறப் போகின்றன. தேவைப்பட்ட பணத்தை தேவைப்படும் நேரத்தில் கொண்டு வந்து கொடுத்து உங்கள் நண்பர்களை உங்களுக்கு உதவுவார்கள். பொறுப்புடன், கோபத்தை குறைத்துக் கொண்டு தைரியமாக நிமிர்ந்து நடைபோடக்கூடிய சிறப்பானதொரு ஆண்டாக இவ்வாண்டு மிளிரப்போகின்றது.

மகரம்

மற்றவர்களின் மனம் அறிந்து செயல்பட்டு தனது காரியத்தை வெற்றியாக்கிக் கொள்ளும் மகர ராசி அன்பர்களே! கோட்சாரக்கிரகங்கள் உங்களுக்கு அவ்வளவு பெரிய நன்மை தரும் இடங்களில் இல்லாவிட்டாலும், கடந்த காலங்களைப் போல உங்களுக்கு தேவையற்ற வீண் பிரச்சினைகள், சிக்கல்கள் இவ்வருடத்தில் நிச்சயமாக இருக்காது. நீங்கள் தற்சமயம் செய்து கொண்டிருக்கும் தொழில் வியாபாரத்தில் நல்ல இலாபங்களையும், முன்னேற்றங்களையும் காண்பீர்கள். கல்வி சம்பந்தமான விடயங்களில் தேவையான அனைத்து உதவிகளும் தற்போது உங்களுக்கு கிடைக்கும். வீடு வாகனம் சொத்துகளை விருத்தி செய்ய இது தான் நல்ல தருணம். அதிர்ஷ்டம் என்பது அளவோடுதான் இருக்கும். சிலருக்கு அதிரடியான மாற்றங்கள் நடைபெறும். ஆனால் பெரும்பாலானவர்களுக்கு இயல்பான நிலைதான் இருக்கும். பணம் வருவது மிகப் பெரிய அளவில் அதிகரிக்காது, ஆனாலும் அதற்கேற்ப செலவுகளும் வந்து கொண்டேதான் இருக்கும். குடும்பத்தில் அவ்வப்போது சிறிய குழப்பங்கள் வந்து போகும், ஆனாலும் பெரிய அளவில் பாதிப்புகள் இருக்காது. கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதில் தடைகள் அவ்வப்போது வந்து போகும். உத்தியோகத்தில் இட மாற்றம், மற்றும் தொழில் மாற்றங்களை சந்திப்பீர்கள்.

விழிப்புணர்ச்சி தேவை. வீண்பழி ஏற்படாதிருக்க மற்றவர்களை விமர்சிக்காமல் இருப்பது நல்லது. உடல் நலக்குறை தீரும். நண்பர்கள் உங்களை விட்டுப் பிரிவார்கள். உங்கள் கல்வி விடயங்களுக்காக வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்வீர்கள். சிக்கனமாக செலவு செய்யும் நீங்கள் ஆடம்பரச் செலவுகளை தவிர்ப்பதால் ஓரளவேனும் சேமிப்பை தனதாக்கிக் கொள்ள முடியும். எடுக்கும் காரியங்களை மற்றவர் உதவியின்றி எப்படியும் நிறைவேற்றிக் கொள்வீர்கள். அதே நேரம் மூக்கின்மீது உங்களுக்கு வரும் கோபத்தை குறைத்துக் கொண்டால் தோல்வி என்பதே இருக்காது. உயர்ந்த பதவி, பொறுப்பில் இருப்பவர்கள் அதிகாரத் துஷ்பிரயோகத்துக்கு துணை போகாமல் இருப்பது நல்லது. உங்கள் வாழ்க்கைத் துணையின் உடல் நலத்தில் அக்கறை காட்டி வாருங்கள். கூட்டுத் தொழில் செய்பவர்கள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. வெற்றிப் படியில் ஏறும்போது கை கொடுத்தவர்களுக்கு நன்றிக் கடன் செலுத்துவதற்கு தவறிவிடாதீர்கள். பதவி உயர்வுக்காக காத்திருப்பவர்களுக்கு இவ்வும் சில காலம் பொறுத்திருக்க வேண்டிய கட்டாயம் உண்டு. வீடு கட்டும் பணியை இடைநிறுத்தி வைத்திருந்த நீங்கள் தற்போது அந்தப் பணியை உடன் பெற்றோலும் செய்து முடிப்பீர்கள்.

தாயாரின் உடல் நிலையில் அக்கறை செலுத்துங்கள், அவருக்குத் தேவையான மருத்துவப் பரிசோதனைகளை தவறாது அவ்வப்போது செய்து கொள்ளப் பாருங்கள். சகோதர வகையில் கருத்து வேறுபாடுகள் வந்து போகும், எல்லோரையும் அனுசரித்துப் போவது நல்லது. திருமணம் போன்ற சுப செலவுகளால் பண விரயம் ஏற்படும். உங்கள் முயற்சிக்கு ஏற்ப பலன்களை நல்கும் நல்லதொரு ஆண்டாக இவ்வாண்டு அமைய இருக்கின்றது என்பதே உண்மை.

கும்பம்

பொறுமையும், நிதானமும் கொண்ட கும்ப ராசி அன்பர்களே! ஜென்ம சனி அமைப்பில் இருக்கின்ற உங்களுக்கு, தன ஸ்தானத்தில் இருக்கின்ற குரு பகவான் இன்னும் சில நாட்களில் 03ஆம் இடத்திற்கு பெயர்ச்சியாகப் போகின்றார். கோட்சாரம் எப்படியிருந்தாலும் குருவின் நல்ல பார்வைகளால் உங்களது 07,09,11 போன்ற (திருமணம், பாக்கியம், இனபம்) சுபத்துவப்படுத்த இருக்கின்றார்.

குருவின் இடப் பெயர்ச்சி மனதில் தைரியத்தை அதிகரிக்கும். உல்லாசம், ஆடம்பரத்துக்கும் குறைவிருக்காது. யாருக்கும் கையெழுத்து போட்டுவிடாதீர்கள்.

வீட்டில் இதுவரை இருந்து வந்த மனக் கசப்புகள் முற்றாக நீங்கும். உங்கள் சகோதரருக்கும் உங்களுக்கும் இடையே இருந்து வந்த பகை உணர்ச்சிகள் விலகி அன்பு மலரும். தேவையில்லாமல் மற்றவர்களிடம் வாக்குவாதம் செய்வதைத் தவிருங்கள். பிறருக்கு உதவி செய்யப்போய் தேவையில்லாமல் வம்புகளில் மாட்டிக் கொள்ளாதீர்கள். பணவரவு சீராக இருப்பதால் சேமிப்புகளில் அதிக கவனம் தேவை. எதிர்பாராத வகையில் சன்மானங்களை பெறுவீர்கள். எந்த விடயத்திலும் அவசரப்படாமல் சிந்தித்து செயல்பட்டால் நல்ல பலன் கிடைக்கும். சின்ன சின்ன உடற்பிரச்சினைகள் தொடர்ந்து செய்து வந்தால், ஆரோக்கியம் சீராக இருக்கும். மன உறுதியுடன் செயல்பட்டால், பிரச்சினைகளை, தடைகள் ஆகியவற்றைத் தான்டி வெற்றியின் பக்கம் உறுதியாக செல்ல இயலும்.

உங்கள் சுடும்ப விடயங்களை வெளிப்டையாகப் பேசாமலிருந்தால், வீண் பிரச்சினைகளை குறைத்துக் கொள்ள முடியும். பணிபுரியும் இடத்தில் உங்கள் உயர்வு, உங்கள் பேச்சின் தன்மையைப் பொறுத்தே அமையும். மேலதிகாரிகளின் கெடுபிடிகளால் சில சங்கடங்கள் உருவாகலாம். சிமமங்கள் இருந்தாலும், பிறருக்கு கொடுத்த வாக்கைக் காப்பாற்றி விடுவீர்கள். கடன் சுமை குறைய வழி பிறக்கும்.

அசையாச் சொத்துகள் விற்க நேரிட்டாலும், அடுத்த சில மாதங்களிலேயே புதிய சொத்துகளை வாங்கும் அமைப்பு கிட்டும். வாழ்க்கைத் துணை வழியே வருமானங்கள் வந்து சேரும். சொந்த பந்தங்கள் செய்யாத உதவியை நண்பர்கள் செய்வார்கள். வீட்டிலும், வெளியிலும் நற்பெயரை பாதுகாத்துக் கொள்வதில் கவனம் வேண்டும். புதிய முயற்சிகளைத் தொடங்கும்போது திட்டமிடுதல் இல்லாவிட்டால் பிரச்சினைகளை சந்திக்க நேரும். ஏதோ காரணத்தினால் பிரிந்திருந்த தம்பதியர் ஒன்று சேருவர். நீங்கள் என்ன தொழில் செய்தாலும் அதில் ஏற்றம் கிட்டும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். அரசு வழிச் சலுகைகள் கிடைக்கும். எல்லாவகையிலும் பொறுமையோடு காத்திருந்தால் வெற்றி நிச்சயம்.

மீனம்

எந்தவொரு சூழ்நிலையாக இருந்தாலும் அதில் நன்கு சிந்தித்து செயல்படும் மீன ராசி அன்பர்களே! ஏழரைச் சனியின் ஆரம்பக் காலகட்டத்தில் இருக்கின்றீர்கள். இக்காலத்தில் விரயங்களைத் தவிர வேறு எதையும் சனி பகவான் உங்களுக்குக் கொடுக்கப்போவதில்லை. ஜென்மத்தில் நிலைகொண்டுள்ள குரு பகவான் அடுத்த வாரம் உங்கள் ராசியின் 02ஆம் பாவம் எனும் தன ஸ்தானத்திற்கு பெயர்ச்சியடையப் போவதால், சனி தரும் அசுப விரயங்களுக்கு ஈடுகொடுக்கும் அளவுக்கு உங்கள் பண வரச்சி இருக்கும் என்பது தான் உண்மை. வருமானம் பெருகுவது மட்டுமல்லாமல் பலவிதமான அதிர்ஷ்ட வாய்ப்புகளும் உங்களைத் தேடி வரப் போகிறது. குடும்பத்தில் இவ்வளவு காலமும் காணாமல் போயிருந்த அமைதி, மகிழ்ச்சி, நிம்மதி ஆகியவை மீண்டும் நிலவும். என்றோ செய்த முதலீடுகள் தற்போது நல்ல இலாபங்களைத் தரும். உங்களின் கனிவான பேச்சினால் மற்றவர்களிடம் அன்பாசப் பழகி, பலர் போற்றும்படி நடந்து கொள்வீர்கள். பணவரவால் உங்கள் பணப்பை நிரப்புவதால் தேவையில்லாமல் வீண் செலவு செய்யாதீர்கள். தங்களின் நல்ல குணத்தால் கெட்டவர்களும் நல்லவர்களாக மாறி விடுவார்கள்.

திருமணம், காதல் முயற்சிகள் வெற்றி பெறும். உங்களுக்கு தொல்லை தந்த எதிரிகள் இனி அடங்கி நடப்பார்கள். கடன்கள் குறைய ஆரம்பிக்கும். வேலைவாய்ப்பு கிடைக்காமல் காத்திருந்தவர்களுக்கு நல்ல தொழில் வாய்ப்புகள் கிடைப்பதோடு, வேலையில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வும், விரும்பிய இடத்துக்கு மாறுதலும் கிடைக்கும். கொடு கட்டிப்பறந்த குடும்பப் பிரச்சினைகள் யாவும் படிப்படியாக நல்ல முடிவுக்கு வரும். அரசு அதிகாரிகளும், மேல் அதிகாரிகளும் உங்களுக்கு ஆதரவாக நடந்து கொள்வர். ஸ்திர சொத்து சேர்க்கைகளும் அமையக்கூடும்.

நீண்டநாளாக இருந்து வந்த நோய்கள் விலகி உடல் ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படும். சமுதாயத்தில் உங்களுடைய கௌரவம், புகழ் செல்வாக்கு கூடும் காலமிது. கேட்ட இடத்தில் உதவிகளும் கிடைக்கும். நண்பர்கள் உதவியால் புதிய இலாபங்களும் நன்மைகளும் ஏற்படும். உங்களது செல்வாக்கு உயரும். நீங்கள் தீட்டிய திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறி மேலதிகாரிகளின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். பல காலம் காத்திருந்த முன்னேற்றங்கள் உங்கள் அலுவலகத்தின் வாயிலாக நிகழும். திடீரென்று பெரிய தொகை பணம் அலுவலகம் மூலமாக வந்து சேரும். எல்லாவகையிலும் உங்கள் முயற்சிகள் வெற்றியுடன் இலாபங்களை கொண்டு வந்து கொடுக்கின்ற சுப ஆண்டாக இப்புத்தாண்டு உங்களுக்கு மலர இருக்கின்றது.

ஜோதிட வித்யா விபூஷணம்,
சிவா பாஸ்கரராவ்
(சமாதான நீதவான்)
(ஜோதிடம் மற்றும்
வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட
வித்தியா ரூ வாஸ்து நிலையம்
புளத்சிங்ஹள.
தொலை பேசி : 0770 525 325
– 0786 759 739

பென்டகனின் 'டொப் சீக்ரெட்' ஆவணங்கள் 'லீக்'

உளவுத்துறை அதிகாரிகள் விசாரணை

அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகனின் 'டொப் சீக்ரெட்' இரகசிய ஆவணங்கள் கசிந்துள்ளமை குறித்து உளவுத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அமெரிக்க பாதுகாப்புத்துறையின் இராணுவத் தலைமையகமான பென்டகனின் சில இரகசிய ஆவணங்கள் (டொப் சீக்ரெட்) சமூக ஊடகங்களில் கசிந்துள்ளன. அந்த ஆவணங்களில் அரசின் மிக முக்கியமான இரகசியங்கள் வெளியாகியுள்ளதாகவும், நூற்றுக்கணக்கான இரகசிய ஆவணங்கள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்த இரகசிய ஆவணங்கள் எவ்வாறு பகிரப்பட்டன என்பது குறித்து தேசிய பாதுகாப்பு முகமைகள் விசாரணை நடத்தி வருகின்றன.

கடந்த 2013ஆம் ஆண்டில் விக்கிலீக்ஸில் ஆயிரக்கணக்கான இரகசிய ஆவணங்கள் கசிந்தன. தற்போது அதேபோல் பென்டகனிலிருந்து இரகசிய ஆவணங்கள் கசிந்துள்ளன. இதுகுறித்து 'ரொய்ட்டர்ஸ்' நிறுவனம் வெளியிட்ட செய்தியில்,

''கடந்த மார்ச் மாதம் பென்டகனின் 'சீக்ரெட்' மற்றும் 'டொப் சீக்ரெட்' என்று பெயரிடப்பட்ட 50இற்கும் மேற்பட்ட ஆவணங்கள் சமூக ஊடகங்களின் மூலம் கசிந்துள்ளன. இந்த ஆவணங்கள் யாவும் உக்ரைன், இஸ்ரேல், தென் கொரியா, துருக்கி உள்ளிட்ட நட்பு நாடுகளின் போர் பற்றிய தகவல்களைக் குறிப்பிட்டுள்ளன.

இரகசிய ஆவணங்கள் கசிந்தமை குறித்து அமெரிக்க நீதித்துறை குற்றவியல், விசாரணையைத் தொடங்கியுள்ளது. கடந்த வாரம் வரை இந்தக் கசிவு குறித்து பென்டகனுக்குத் தெரியாது என்று மூத்த அதிகாரிகள் தெரிவித்தனர். சில ஆவணங்கள் மிகவும் இரகசியம் வாய்ந்தவை என்றாலும், அவை அமெரிக்கா மற்றும் தொடர்புடைய பாதுகாப்பு அமைப்புகளுடன் சென்றடைய வாய்ப்புள்ளது. இதுகுறித்து உளவுத்துறை தொடர்ந்து விசாரணை நடத்தி வருவதாக பென்டகன் தெரிவித்துள்ளது'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மியன்மார் இராணுவம் வான்வழித் தாக்குதல்: 100இற்கும் மேற்பட்ட சிவிலியன்கள் பலி!

ஐ.நா. கடும் கண்டனம்

மியன்மாரில் இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் 100இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதுடன், பலர் படுகாயமடைந்துள்ளனர். இத்தாக்குதலுக்கு ஐ.நா. அமைப்பின் தலைவர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மியான்மரில் கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக இராணுவ ஆட்சி நடைபெற்று வருகிறது. போராளிகள் குழு மீது தொடர்ந்து தாக்குதல்களை நடத்திவரும் இராணுவம், அப்பாவி பொதுமக்களை கொன்று குவித்து வருவது சர்வதேச அரங்கில் தொடர்ந்து அதிர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது. மனித உரிமைகள் ஆணையமும் பலமுறை தனது கண்டனத்தை பதிவுசெய்துள்ளது.

ஆனால், தாக்குதல் சம்பவங்களுக்குப் போராளி குழுக்களே காரணம் எனக் கூறும் இராணுவம், தங்கள் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்து வருகிறது. இந்நிலையில், சாஜைன் மாகாணத்திலுள்ள கிராமமொன்றில் இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் உட்பட 100இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. நிகழ்வொன்றில் 150 பேர் கூடியிருந்த நிலையில், இந்தத் தாக்குதல் அரங்கேறியுள்ளதாக தெரியவந்துள்ளது. தாக்குதலில் படுகாயமடைந்த பலரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை உயரக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

உலக செய்திகள்

இந்தியாவில் அதிகரிக்கும் கொரோனா தொற்று

ஒரேநாளில் 16 பேர் உயிரிழப்பு; 8 ஆயிரம் பேர் பாதிப்பு

இந்தியாவில் தொடர்ந்தும் கொவிட் வைரஸ் பரவல் அதிகரித்துள்ளது. நேற்று (12) கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 8 ஆயிரத்தை எட்டியுள்ளது.

இது தொடர்பில் இந்தி சுகாதார அமைச்சு வெளியிட்ட அறிக்கையில்,

இந்தியாவில் நேற்று 7,830 பேருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்தியா முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 4,47,76,002ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை, நேற்று ஒரேநாளில் கொவிட் பாதித்த 16 பேர் உயிரிழந்ததால், கொவிட் தொற்றால் இறந்தவர்களின் எண்ணிக்கையும் 5,31,016ஆக அதிகரித்துள்ளது.

இந்திய முழுவதும் தற்போது 40,215 பேர் கொவிட் காரணமாக சிகிச்சை பெற்று வருகின்றனர். இதுவரை 220,66,24,326 டோஸ் கொவிட் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சூபி நடனம் ஆடி அசத்திய சிறுவன்

சிரியாவில் வசிக்கும் முஸ்லிம்கள் மத வழிபாடு நிகழ்வாக சுழன்று ஆடும் சூபி நடனம் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்துள்ளது. ரமழான் மாதத்தில் இப்தார் விருந்து நிகழ்வுகளில் முஸ்லிம்களில் ஒரு பிரிவினர் விருந்தினர்கள் முன்பு சூபி ஆடி மகிழ்விப்பார்கள். வெண்ணிற உடையணிந்து தலையில் பெரிய தொப்பியுடன் ஒரு வட்டத்தில் நின்றுகொண்டிருப்பதுபோல் காலை நகர்த்தாமல் ஒரு கையை மேல் நோக்கி சற்று சாய்ந்தும் மற்றொரு கையை கிடைமட்டமாக வைத்தும் சுழன்று ஆடுவார்கள்.

நிமிடத்திற்கு 12 சுற்றுகளுக்கு அதிகமாக காற்றைபோல் சுழல்வார்கள். அப்படிப்பட்ட நிகழ்வொன்றில் 4 வயது சிறுவன் சுழன்று ஆடியது அனைவரின் கவனத்தை ஈர்த்துள்ளது. இஸ்லாமின் இறை வழியோடு தொடர்புடையது இந்த சூபி நடனம். கடவுளைத் தேடுவதற்கான வழியாக சூபி நடனத்தை இஸ்லாமியர்கள் பார்க்கிறார்கள். அந்த நடனத்தின் மூலம் பிராத்தனை செய்கிறார்கள். சூபி நடனத்தைப் பொறுத்தவரை அது மத்தியகிழக்கு நாடு களான துருக்கி, சிரியா, லெபனான் போன்ற நாடுகளில் பிரபலமானது.

பெங்களூர் ரசிகர்களின் வாயடைத்த கம்பீர்

பெங்களூர் அணியுடன் நடைபெற்ற ஆட்டத்தில் 213 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் களமிறங்கிய லக்னோ அணி நிகோலஸ் பூரானின் அதிரடியால் கடைசி பந்தில் வெற்றிபெற்றது. கடைசி ஓவரில் 5 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் கடைசி பந்தில் லக்னோ வெற்றிபெற்றது.

இந்த திரில் போட்டியில் லக்னோ வெற்றிபெற்றதையடுத்து லக்னோ வீரர்கள் மைதானத்திற்குள் விரைந்து வந்து ஆரவாரம் செய்தனர். அப்போது லக்னோ அணியின் ஆலோசகர் கவுதம் கம்பீர் மைதானத்தில் குவிந்திருந்த பெங்களூர் ரசிகர்களை நோக்கி வாயை மூடும்படி செய்கை செய்தார். இது தொடர்பான வீடியோ மற்றும் புகைப்படம் சமூகவலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

கோஹ்லியின் சாதனையை கில் முறியடிப்பார்

ரவி சாஸ்திரி தெரிவிப்பு

2016ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல். தொடரில் ஒரு சீசனில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரராக விராட் கோஹ்லி 16 ஆட்டங்களில் ஆடி 4 சதம் உட்பட 973 ஓட்டங்கள் சேர்த்தார். அவரது சாதனையை முறியடிக்க யாருக்கு வாய்ப்புள்ளது என்று இந்திய முன்னாள் வீரரும் வர்ணனையாளருமான ரவிசாஸ்திரியிடம் கேட்கப்பட்டது. அதற்கு ரவிசாஸ்திரி கூறியதாவது,

என்னைப் பொறுத்தவரை கோஹ்லியின் சாதனையை தகர்ப்பது மிகவும் கடினம். ஏனெனில், ஒரு சீசனில் 900 ஓட்டங்களுக்கு மேல் எடுப்பது எளிதான விடயமல்ல. ஆனால், இச்சாதனையை முறியடிக்கும் வாய்ப்பு இருந்தால் அது ஒரு தொடக்க ஆட்டக்காரரால்தான் முடியும்.

ஏனெனில், தொடக்க ஆட்டக்காரருக்குத்தான் அதிகமான ஆட்டங்களில் விளையாட வாய்ப்பு கிடைக்கும்.

அந்த வகையில் கோஹ்லியின் சாதனையை முறியடிக்கும் திறமை குஜராத் டைட்டன்ஸ் வீரர் சுப்மன் கில்லுக்கு இருப்பதாகக் கருதுகிறேன். அவர் தொடக்க ஆட்டக்காரர். நல்ல பார்மில் உள்ளார். ஆடுகளங்களும் பேட்டிங்குக்கு சாதகமாக உள்ளன.

அவர் அடுத்த 2-3 இன்னிங்ஸில் தொடச்சியாக 80 -100 ஓட்டங்கள் வீதம் எடுத்தால் மொத்தம் 300 - 400 ஓட்டங்கள் சேர்த்துவிடுவார். தொடக்க ஆட்டக்காரர் கூடுதலாக இரண்டு ஆட்டங்கள் ஆடும்போது இச்சாதனையை முறியடிக்க சாத்தியம் உண்டு என தெரிவித்தார்.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

இறுதிப் பந்தில் த்ரில் வெற்றிபெற்ற மும்பை

டெல்லி அணியுடனான ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி இறுதிப் பந்தில் வெற்றியீட்டி நடப்பு ஐ.பி.எல். தொடரில் முதல் வெற்றியை பதிவுசெய்தது.

டெல்லி அருண்ஜெட்லி ஸ்டேடியத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் நாணய சுழற்சியில் வென்ற மும்பை அணி, பந்துவீச்சை தெரிவுசெய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி அணி இறுதியில் 19.4 ஓவர்கள் முடிவில் 10 விக்கெட் இழப்பிற்கு 172 ஓட்டங்கள் எடுத்தது. டேவிட் வோர்னர் 47 பந்துகளில் 51 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

தொடர்ந்து 173 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மும்பை அணி களமிறங்கியது. கடைசி 3 ஓவரில் 26 ஓட்டங்கள் தேவைப்பட்டது. டிம் டேவிட், கேமரூன் கிரீன் இருவரும் பவுண்டரி, சிக்ஸர் பறக்க விட்டனர். கடைசி ஓவரில் 5 ஓட்டங்கள் தேவைப்பட்டது.

டெல்லி அணியின் நோர்ஜே வீசிய அந்த ஓவரில் கடைசி பந்தில் 2 ஓட்டங்கள் எடுத்து மும்பை அணி முதல் வெற்றியை பதிவுசெய்தது.

TATA IPL

இன்றைய போட்டி

போட்டி இல. - 18

பஞ்சாப் எதிர் குஜராத்

நேரம் - இரவு 7.30

இடம் - மொஹாலி

களுதாவளை மகா வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டியில் பாரதி இல்லம் சம்பியன்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம், பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட களுதாவளை மகா வித்தியாலய (தேசிய பாடசாலையின்) வருடாந்த இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி கடந்த சனிக்கிழமை வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் கே.சத்தியமோகனின் தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கே.மகேசன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டிருந்தார்.

பாரதி, நாவலர், விபுலானந்தர் ஆகிய மூன்று இல்லங்களுக்கிடையே போட்டி நிகழ்வுகள் நடைபெற்றன. இதன்போது மாணவர்கள் தமது திறமைகளை வெளிக்காட்டியிருந்தனர். இதில் பாரதி இல்லம் 493 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பிடித்தது.

கோஹ்லியின் சாதனையை முறியடித்த வோர்னர்

டெல்லி அணியின் தலைவர் டேவிட் வோர்னர், நேற்று முன்தினம் மும்பை இந்தியன்ஸ் அணியுடனான ஆட்டத்தில் 7 ஓட்டங்கள் அடித்தபோது ஐபிஎல்லில் ஒரு கேப்டனாக 3000 ஓட்டங்களை எட்டினார். இதன்மூலம் கேப்டனாக அதிவேகமாக 3000 ஓட்டங்கள் அடித்த வீரர் என்ற சாதனையை படைத்தார் வோர்னர்.

இதற்கு முன் ஐபிஎல்லில் கேப்டனாக 81 போட்டிகளில் 3000 ஓட்டங்கள் அடித்து முதலிடத்தில் இருந்த நிலையில், 73 போட்டிகளில் 3000 ஓட்டங்களை அடித்து கோஹ்லியின் சாதனையை முறியடித்துள்ளார். முன்பாக சன்ரைசர்ஸ் அணியை கேப்டன்சி செய்துள்ளார் வோர்னர்.

ஐபிஎல்லில் 6000 ஓட்டங்களை 165 இன்னிங்ஸ்களில் அடித்து விரைவாக 6000 ஓட்டங்களை எட்டிய வீரர் என்ற சாதனையை படைத்திருந்த வோர்னர், கேப்டனாக வேகமாக 3000 ஓட்டங்கள் அடித்த வீரர் என்ற சாதனையையும் படைத்துள்ளார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7